

26-11-48 முதல் கெயிட்டியிலும் ஆரம்பம். தினசரி 3 காட்சிகள

1 — 28-11

இண்டோ - கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ் : மாயவரம்

சென்ட்ரல் ஆபீஸ் : மதராஸ்

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் :	ரூ.	25,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் :	ரூ.	21,25,000
செலுத்தப்பட்ட மூலதனம் :	ரூ.	18,75,000
ரிஸர்வ் நிதி :	ரூ.	10,00,000

●

மதராஸில் ஆபீஸ்கள் :

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு, தியாகராயநகர், பெரியமேட், மைலாப்பூர், திருவல்லிக்கேணி

தென்னிந்தியாவின் எல்லா முக்கிய நகரங்களிலும் பிராஞ்சுகளும், சப் - ஆபீஸ்களும் உள்ளன.

●

முன்னேற்றமான திட்டங்கள்

ரெகரிங் டெபாஸிட்டுகள் :

ஒவ்வொரு மாதம் ரூபாய் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டுள்ள பெருக்குத் துகைகளோ செலுத்தி வரலாம். இந்த டிபாசிட்டுகள் 47 அல்லது 90 மாதங்களுக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

ரூ. ஒன்று விதம் 47, 90 மாதங்களுக்கு செலுத்தி வந்தால் முறையே 48, 91 - வது மாதக் கடைசியில் ரூ. 50, 100 வீதம் திரும்பப் பெறலாம்.

காஷ் சர்டிபிகேட்டுகள் :

மூன்று வருஷ காஷ் சர்டிபிகேட்டுகள் : ரூ. 50 - ம் அதன் பெருக்குத் துகைகளுக்கும் பெற்றுக் கொள்ளலாம்.

50 ரூ. காஷ் சர்டிபிகேட்டுக்கு செலுத்த வேண்டிய துகை ரூ. 46/-

ஐந்து வருஷ காஷ் சர்டிபிகேட்டுகள் : ரூ. 10 - க்கும் அதன் பெருக்குத் துகைகளுக்கும் பெற்றுக் கொள்ளலாம்.

10 ரூ. காஷ் சர்டிபிகேட்டுக்கு செலுத்த வேண்டிய துகை 8—10—0.

மேற்படி திட்டங்களின் வசதிகளை எங்கள் எல்லா ஆபீஸ்களிலும் எவ்வித துகைகளுக்கும் பெறலாம்.

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்.

S. N. N. சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரெக்டர்

ஆர்டிஸ்டிக் என்கிரேவிங், ஆப்டோன்,
லயன், ட்ரைகலர் பிளாக்குகள்,
ரப்பர் ஸ்டாம்புகள்
முதலியவைகளுக்கு :

86729

நம்பருக்கு டெலிபோன் செய்யுங்கள்
அல்லது
நேரிட ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

•

நியூடன் & கம்பெனி

80, வாலாஜா ரோடு, மவுண்டு ரோடு, மதராஸ்


ரூ. 22-8-0 பெருமானமுள்ள ஒரு கை கெடிகாரம் இனாம்!

உயர் ரகத்தின் வேலைப்பாடுடன் கூடிய தயாரிப்பு. உறுதியுள்ள லீவர் மெஷினிஸம். ஜுவெல் அமைக்கப்பட்டது. பற்பல அழகிய நவீன மாடல்கள். ஒவ்வொன்றும் ப்ளாஸ்டிக் பட்டையுடன் அழகிய வெல்வெட் பெட்டியில் அமைக்கப்பட்டுள்ளது. படங்களில் காண்பதைவிட பார்வைக்கு மிகவும் கவர்ச்சிகரமான தோற்றமுள்ளவை. ஐந்து வருட உத்தரவாதம்.



No. 101 ரெக்ட் அல்லது டோனோ

5 ஜுவெல் க்ரோமியம்	ரூ. 37/-	ரோல்ட்கோல்ட்	ரூ. 44/-
7	ரூ. 46/-	.. ..	ரூ. 58/-
15	ரூ. 60/-	.. ..	ரூ. 75/-



No. 102 வளைந்த அமைப்பு

5 ஜுவெல் க்ரோமியம்	ரூ. 32/-	ரோல்ட்கோல்ட்	ரூ. 38/-
7	ரூ. 44/-	.. ..	ரூ. 55/-
15	ரூ. 58/-	.. ..	ரூ. 72/-



No. 103 சம வட்ட அமைப்பு

5 ஜுவெல் க்ரோமியம்	ரூ. 25/-	உயர் ரகம்	ரூ. 28/-
.. ..	ரூ. 35/-	ரோல்ட்கோல்ட்	ரூ. 48/-
5	ரூ. 37/-	ரோல்ட்கோல்ட்	ரூ. 60/-



No. 104 (13 சைஸ்)

க்ரோமியம் பெட்டி ரூ. 18/8/- உயர் ரகம் ரூ. 20/-
நடுவில் செகண்டு
முள்ளுடன் ரூ. 22/8/- மிகவும் உயர்ந்தது ரூ. 24/-

அலாரம் டைம்பீஸ் ரூ. 16/- உயர் ரகம் ரூ. 20/- மிக உயர்ந்த ரகம் ரூ. 25/-

தபால் செலவு அணா 12 தனி. ஏதாவது மூன்று கைக் கெடிகாரங்கள் ஒரே தடவையில் வாங்குவோருக்கு ரூ. 22-8-0 பெருமானமுள்ள ஒரு கை கெடியாரம் இனாம். ஆர்டர்கள் அனுப்பும்போது தயவு செய்து, கடிகாரத்தின் நம்பரைக் குறித்து எழுதவும்.

PARAGON WATCH CO., Post Box No. 11419 CALCUTTA - 6 (K)

RAJA

(TRADE MARK)

எச்சரிக்கை

எமது (ராஜா ஸ்னோ, ராஜா சோப்புகள், ராஜா ஹேர் ஆயில், ராஜா பிரில்லியண்டைன், ராஜா அகர்பத்தி, ராஜா டூத் பேஸ்ட், ராஜா பேஸ் பவுடர் முதலிய) பொருள்களுக்கு உண்டாகியிருக்கும் தனிப்பெருஞ் சிறப்பும் கியாதியும் அவைகளுக்கு ஏற்பட்டுள்ள அதிகமான தேவையும் தேசம் பூராவும் தலைசிறந்த பத்திரிகைகளில் விரிவாக விளம்பரம் செய்யப்பட்டு வருவதைப் பார்த்து சில நபர்கள் பேராசையால் தூண்டப்பட்டு, ராஜா பொருள்களின் பொதுத் தோற்றம், பாக்கிங், வாக்கியங்கள் அமைப்பு ஆகியவைகளைப்போலவே போலியான தங்கள் மட்ட ரக சரக்குகளை எங்கள் சரக்குகளைப் போலவே விற்பனை செய்ய முயற்சித்து வருகிறார்கள். எமது டிரேட் மார்க் பெயரை உபயோகித்து தங்களது போலிப் பொருள்களை விற்பனை செய்யும் குற்றத்திற்காக அவர்கள் மீது சிவில் வழக்கும் கிரிமினல் வழக்கும் தொடரப்படும்.

ராஜா என்னும் முகப்புக் கொண்ட வார்த்தை, நாங்கள் (மணியம் & கம்பெனி) உற்பத்தி செய்யும் வாசனை திரவியங்களனைத்தையும் குறிப்பதோடு, கடந்த பல வருஷங்களாகவே அது பொது மக்களின் மனதில் வேரூன்றி இருந்து வருகிறது. ராஜா என்பது எங்களுடைய பிரத்தியேக உரிமை பெற்ற டிரேட் மார்க்கின் பெயர். நீண்டகாலம் எமது ராஜா தயாரிப்புகளை உபயோகித்து வரும் பொது மக்களுக்கு எமது விசேஷமான பாக்கிங், பொதுத் தோற்றம், எழுத்துக்கள் முதலியவை மிகவும் அறிமுகமானவை. ஆகையால் எங்களுடைய நலன்களுக்கும் உரிமைகளுக்கும் குந்தகம் விளைவிக்க முயற்சி செய்து வருபவர்களை, சட்டத்துக்கு விரோதமான அத்தகைய செய்கைகளில் ஈடுபட வேண்டாமென்று இதன் மூலம் எச்சரிக்கிறோம். அவ்விதம் எங்கள் வர்த்தக உரிமைகளுக்குப் பங்கம் விளைவித்துக் கொண்டிருப்பவர்களில் சிலரை நாங்கள் கண்டுபிடித்து, அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறோம். மறைமுகமாகவோ அல்லது இதுவரை நாங்கள் கண்டு பிடிக்காத விதத்திலோ அவ்விதம் எங்கள் வர்த்தக உரிமைகளுக்குப் பங்கம் விளைவித்துக் கொண்டிருப்பவர்களை, அத்தகைய சட்ட விரோதமான நடவடிக்கையில் ஈடுபட வேண்டாமென்று எச்சரிப்பதுடன், அப்படி அவர்கள் செய்தால் அவர்கள் மீது தகுந்த வழக்குத் தொடரப்படுமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

MANYAM & Co.

Manufacturers of Raja Products,

BANGALORE 3.

கல்கி
பொருளடக்கம்

மலர் 8 இதழ் 18 | நவம்பர் 28 | சர்வதாரி ௵ கார்த்திகை 13

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

திருவல்லிக்கேணி நேஷனல் (பெண்கள்) ஹைஸ்கூல்



கட்டிட நிதிக்காக

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

உதவும் சங்கீதக் கச்சேரி

★

ஆஸ்தான வித்வான்
மைசூர் சௌடய்யா ... பிடில்
கல்பாத்தி ராமநாதன் ... மிருதங்கம்
ஆலங்குடி ராமச்சந்திரன் ... கடம்

★

மேன்மை தங்கிய சென்னை கவர்னர்
பவநகர் மகாராஜா அவர்கள்
தலைமை வகிக்கிறார்கள்

5-12-48 ஞாயிறு மாலை 6 மணிக்கு
சென்னை, மவுண்ட் ரோடு, ராஜாஜி ஹாலில்

டிக்கட்டுகள்: ரூ. 250/- ரூ. 100/- ரூ. 50/- ரூ. 25/- ரூ. 10/- & ரூ. 5/-

ஒலிபெருக்கி: திருச்சி ரேடியோ சேல்ஸ் அண்ட் சர்வீஸ்


டிஸம்பர்
3 முதல்
சென்னை
ஸ்டார்
கிரௌன்
இரு தியேட்டர்களிலும்
மற்றும், ராஜதானி
பூராவும் அனேக முக்ய
நகரங்களிலும்
வெளிவருகிறது...
ஜெமினியின்
சக்ர-தாரி
(பக்த கோராகும்பர் கதை)

கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 18

என்ன சேதி?

புது மேயர்

சென்னை மேயர் பதவிக்கு நமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேயர் பதவி ஏற்பட்ட நாளிலிருந்து அப்பதவிக்குச் சிறப்பு அளிக்கக் கூடியவர்கள் சிலர் மேயர்களாக வந்திருக்கிறார்கள். தீரர் சத்தியமூர்த்தி அவர்களில் ஒருவர். சென்ற வருஷத்தில் மேயராக இருந்து சென்ற வாரத்தில் விலகிய டாக்டர் கிருஷ்ணராவ் சென்னை நகரவாசிகள் பெருமைப்படக் கூடிய முறையில் மேயர் பதவியைச் சென்ற ஆண்டில் வகித்து வந்தார். அவர் மேயராயிருந்த காலத்தில் சுதந்திர இந்தியாவின் கவர்னர் ஜெனரலும் பிரதம மந்திரியும் சென்னைக்கு விஜயம் செய்தார்கள். அவர்களை வரவேற்கும் பாக்கியம் டாக்டர் கிருஷ்ணராவுக்குக் கிடைத்தது. இப்போது புது மேயராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் ஸ்ரீ எஸ். ராமசாமி நாயுடு அவர்களினால் அந்தப் பதவிக்கு மேலும் சிறப்புக்கள் ஏற்படுமென்று எதிர்பார்க்கிறோம். ராஜாஜியின் அரசியல் தலைமையைச் சலனமின்றி ஆதரித்து நின்றவர்களில் ஸ்ரீ எஸ். ராமசாமி நாயுடு ஒருவர் என்பது நேயர்களுக்கு ஞாபகம் இருக்கும். கவர்னர் ஜெனரல் ராஜாஜி சென்னைக்கு விஜயம் செய்தபோது ஸ்ரீ ராமசாமி நாயுடு அவர்களின் வீட்டிலேதான் நண்பர்களின் கூட்டம் நடந்தது. ஸ்ரீ ராமசாமி நாயுடுவின் தமிழ் அன்பு பிரசித்தி பெற்றது. எல்லாரிடத்திலும் நல்லவர் என்று பெயர் வாங்கும் அதிர்ஷ்டசாலிகளில் ஸ்ரீ ராமசாமி நாயுடு ஒருவர். "யாமறிந்த மேயரிலே ராமசாமி நாயுடு போல் இனிதாவார் எவரும் காணோம்" என்பதாகப் புது மேயர் புகழ் பெறுவார் என்று நம்புகிறோம்.



ஸ்ரீ ராமசாமி நாயுடு

ஹிட்லரின் ஆவி!

ஹிட்லர் இறந்தாரா, இறக்கவில்லையா என்பது இன்னும் கூட நிச்சயமாகவில்லை! அவருடன் பல வருஷங்கள் வரையில் நெருங்கிப் பழகிய ஒரு பிரமுகர், ஹிட்லர் இறந்தார் என்பதற்கு ஆதாரமில்லை என்று சொல்லுவதாகச் சமீபத்தில் பத்திரிகைச் செய்திகள் கூறின. அவ்விஷயத்தில் யாருக்குச் சந்தேகம் இருப்பினும், ஹிட்லரின் ஆவி இன்னும் இறக்கவில்லை என்பதிலும், அது தற்போது தென்னாப்பிரிக்காவில் அரசு புரிந்து வருகிறது என்பதிலும் மாத்திரம் சந்தேகம் இருக்க இடமில்லை!

இப்போது தென்னாப்பிரிக்காவில் பிரதம மந்திரியாக இருந்துவரும் டாக்டர் மலான் ஹிட்லரின் அந்தரங்க சீடர். சென்ற யுத்தத்தின் போது ஹிட்லர் அடுக்கடுக்காக செக்கோஸ்லவேகியா, போலந்து, நார்வே, டென்மார்க், ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ் முதலிய நாடுகளைக் கபளீகரம் செய்தபோது உலகமே நடுங்கி உணர்ச்சியற்றுப் போயிற்று. ஆனால் அப்போது மலானும் அவரது கட்சியினரும் மாத்திரம் அக்கிரமமான மேற்படி வெற்றிகளைக் கண்டு எக்களித்தார்கள். அப்பேர்ப்பட்ட மலான் தான் இன்று தென்னாப்பிரிக்கா சர்க்காரின் தலைவராக இருக்கிறார். எனவே, ஹிட்லர் தம்முடைய வர்க்கம் உயர்ந்தது என்று கூறி யூதர்களை வேட்டையாடியது போன்று, மலான் வெள்ளையர்கள் உயர்ந்தவர்கள் என்று கூறி இந்தியர்களை வேட்டையாடுகிறார். ஹிட்லர் மற்ற நாடுகளைக் கபளீகரம் செய்தது போன்று மலானும் ஆப்பிரிக்கச் சுதேசிகள் வாழும் தென்மேற்கு ஆப்பிரிக்காவை விழுங்கப் பார்க்கிறார்.


ஆனால், ஹிட்லரின் முறைகளில் அவ்வளவு பிரேமை கொண்டுள்ள மலான், யூதர்களை வேட்டையாடி, அக்கிரமமாக நாடுகளைக் கைப்பற்றிய ஹிட்லரின் கதியும் ஜெர்மானியரின் கதியும் என்ன வாயிற்று என்பதை அதற்குள் மறந்து விட்டார் போலும். சிறுபான்மையோரான யூதர்களை வேட்டையாடிய ஜெர்மானியர் இன்று வல்லரசுகளால் மிதியுண்டு அடிமை வாழ்வை நடத்தி வருகின்றனர். இன்று பெரும்பான்மையோரான ஆப்பிரிக்கச் சுதேசிகளையும் இந்தியர்களையும் வேட்டையாடும் மலான் கோஷ்டியினரின் கதி இறுதியில் என்னவாகுமோ?

வெள்ளோட்டம்

பிரமுகராயினும் பெயர் தெரியாதவராயினும், பாரத நாட்டின் சுதந்திரத்துக்காகப் பாடுபட்ட ஒவ்வொரு வீரரையும் வீராங்கனையையும் இந்தியர்கள் எக்காலத்திலும் மறக்கமாட்டார்கள். அவர்களுக்கு ஞாபகச் சின்னங்களை அமைப்பார்கள்; ஹிருதய பூர்வமாக நன்றி செலுத்துவார்கள்; அவர்களுடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பார்கள்; அவர்களுடைய சந்ததிகளைப் பாராட்டுவார்கள்.

சுதந்திர இந்தியாவின் முதலாவது வர்த்தகக் கப்பலான "ஜல உஷா"வின் வெள்ளோட்ட வைபவத்தை ஏழு மாதங்களுக்கு முன் விசாகப்பட்டினத் துறைமுகத்திலே தவப் புதல்வரான பண்டித ஜவாஹர்லால் நேரு நடத்தி வைத்தார். சென்ற வாரம் இரண்டாவது கப்பலான "ஜலப்ரபா"வின் வெள்ளோட்ட வைபவத்தை இந்தியாவின் உதவிப் பிரதம மந்திரி சர்தார் பட்டேல் நடத்தி வைத்தார். அவ்வமயம் பட்டேல், நாற்பது வருஷத்துக்கு முன்னால் கப்பலோட்டிய தூத்துக்குடி தேசபக்தர் ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களைப் பற்றியும், அப்பெரியாருக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் இழைத்த இன்னல்களைப் பற்றியும் குறிப்பிட்டார். இப்போது கடலிலே இறங்கியுள்ள மேற்படி இரு கப்பல்களும் இனி இறங்கப் போகும் நூற்றுக்கணக்கான கப்பல்களும் இந்தியக் கப்பல் வியாபாரத்துக்கு வழிகாட்டிய ஸ்ரீ சிதம்பரம்பிள்ளை அவர்களுக்கு நூற்றுக்கணக்கான ஞாபகச் சின்னங்களாக விளங்கிவரும்!

வ. உ. சி. ஞாபகச் சின்னம்



முப்பது கோடி மக்களுக்கு வாழ்வு! மூன்று லட்சம் மக்களுக்குத் தாழ்வா?

அந்த ஜனங்கள் அடிமைத்தனத்தை வெறுத்தனர். தங்களுடைய சொந்த அரசனின் ஆதிக்கத்தைக்கூட விரும்பவில்லை. ஜனங்களை அடக்கி ஒடுக்குவதற்காக அரசன் படைகளை ஏவினான். அதைக் கண்டதும் ஜனங்கள் ஆத்திரம் அடைந்தனர். மாட மாளிகைகள் மண் குடிசைகளைப் போன்று பொலபொலவென்று உதிர்ந்தன. சிறைக் கூடங்கள் தகர்ந்தன. இறுதியில் மன்னனின் மகுடம் மறைந்து அவனுடைய தலையும் மண்ணில் உருண்டது!

சுமார் நூற்று அறுபது ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்த மேற்படி சம்பவங்களில் சில மூன்று வாரங்களுக்கு முன் நம் கண்ணெதிரே நிகழ்ந்தன!

கன்னிக்கோட்டையை அடுத்துள்ள பிரஞ்சு இந்தியப் பிரதேசமான மாஹியைச் சேர்ந்த ஜனங்கள் அடிமைத்தனத்தை வெறுத்தனர். அன்னியரின் ஆதிக்கத்தை அறவே விரும்பவில்லை.

எனவே, அடிமைத்தனத்தையும் அன்னியரின் ஆதிக்கத்தையும் ஒழித்துக் கட்டத் தீர்மானித்தனர்.

அவர்களின் எழுச்சியைக் கண்டு பிரஞ்சு அதிகாரிகள் நடுநடுங்கிப் போனார்கள். ஏனெனில் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த பிரஞ்சுப் புரட்சியின் ருசியை மற்றவர்களைக் காட்டிலும் அவர்கள் நன்கு அறிவார்கள் அல்லவா?

உடனே அவர்கள் ஜனங்களிடம் மரியாதையாக நிர்வாகத்தை ஒப்புவித்து விட்டு ஓடிவிட்டனர். ஜனங்களும் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

அவ்வாறாக, இரத்தக்களரி எதுவுமின்றி அங்கு சில மணி நேரத்தில் எதேச்சாதிகாரம் மறைந்து குடியரசு ஏற்பட்டது!

எனினும் உடனே அதைக் குலைக்கப் பிரஞ்சு இந்திய அதிகாரிகள் சதி செய்து விட்டார்கள்.

மாஹி ஜனங்களை அடக்கி ஒடுக்குவதற்காகப் பிரஞ்சு இந்தியாவின் குட்டி ராஜாவான கவர்னர் யுத்தக் கப்பலையும் படைகளையும் அனுப்பினார்.

பிரஞ்சு ஜனங்களைப்போல் மாஹி ஜனங்களும் ஆத்திரம் கொண்டு பலாத்காரத்தில் இறங்கி யிருப்பார்களாயின், பிரஞ்சுப் புரட்சியைப்போலவே மாஹியிலும் இறுதி வரையில் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கும்!

காந்தி மகானின் உபதேசத்தைப் பின்பற்றும் மாஹி ஜனங்கள் பலாத்காரத்தில் இறங்கவில்லை. அவர்கள் ஏற்றுக்கொண்ட நிர்வாக அதிகாரத்தை மீண்டும் பிரஞ்சு அதிகாரிகளிடம் ஒப்புவித்து விடும்படி இந்திய சர்க்காரும் ஆலோசனை கூறியதால், மறுபடியும் பிரஞ்சு அதிகாரிகள் மாஹியில் தங்களுடைய நிர்வாகத்தை ஸ்தாபித்துக் கொள்வது சாத்தியமாயிற்று.

ஆனால் மாஹி ஜனங்களின் சாத்விகச் சிறப்பையோ, இந்திய சர்க்காரின் நேர்மையையோ பிரஞ்சு இந்திய அதிகாரிகள் உணரவில்லை.

உணர்ந்திருந்தால் அவர்கள் மீண்டும் அடக்கு முறைகளைக் கைக்கொள்வார்களா? பாரதத் தாயின் மணிக் கொடிக்கு மரியாதைதான் காட்டத் தவறுவார்களா?

* * *

கல்யாணத்தை நிறுத்திவிட வேண்டும் என்பதற்காக ஒரு பிருகஸ்பதி சீப்பை எடுத்து ஒளித்து வைத்தானாம்!

அது போலவே இருக்கிறது பிரஞ்சு இந்திய கவர்னர் பாரனின் கூற்றும்!

பிரஞ்சு இந்திய அசெம்பிளி கூடும் போது பிரஞ்சுக் கொடியுடன் இந்தியாவின் மணிக் கொடியையும் பறக்கவிடுவது வழக்கம். கவர்னர் தமது பிரசங்கத்தின் முடிவில் "வாழ்க பிரான்ஸ்" என்ற கோஷத்துடன் "ஜெ ஹிந்த்" என்றும் கோஷம் செய்வது வழக்கம்.

ஆனால் சென்ற வாரம் மேற்படி அசெம்பிளி ஆரம்பமான போது,

பாரதத் தாயின் மணிக்கொடியை அங்கு பறக்கவிட வில்லையாம். கவர்னர் பிரசங்கத்தின் இறுதியில் "ஜெ ஹிந்த்" என்று கோஷமும் செய்ய வில்லையாம்.

கவர்னரின் அற்பத் தனத்தைக் கண்டு பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களி லுள்ளவர் உள்பட சகல இந்தியர் களும் நகைப்பார்கள் என்பதில் சந் தேகமில்லை.

அவர் இந்தியாவின் கொடியைப் பறக்க விடாததோ அல்லது "ஜெ ஹிந்த்" கோஷம் செய்யாததோ, பிரஞ்சு இந்தியர்கள் சுதந்திரம் பெறு வதைத் தடுத்துவிட முடியாது.

ஏனெனில் இந்தியாவின் மணிக்கொடி பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களிலுள்ள ஒவ்வொரு கட்டி டத்திலும் ஒளி வீசிப் பறக்கும் காலம் அதிக தூரத்தில் இல்லையல்லவா?

அது போலவே அப்பிரதேசம் எங்கணும் "ஜெ ஹிந்த்" கோஷம் ஒலிக்கும் நாளும் அதிக தூரத்தில் இல்லை!

இந்தியக் கொடியைப் பறக்க விடுவ தும், தேசிய கோஷங்கள் செய்வதும் ஹைதராபாத்தில் பெரிய குற்றங்க ளாகக் கருதப்பட்டன.

ஆனால், ஹைதராபாத்தின் இன்றைய நிலைமை என்ன?

பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களின் நாளைய நிலைமையும் அது தான்!

* * *

பாரனின் மேற்படி செய்கையைக் காட்டிலும் அவரது பிரசங்கம் இன் னும் அதிக விநோதமாக இருக்கிறது.

பிரான்சுடன் இணைந்திருப்பதால் பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களுக்கு எண்ணிக்கையற்ற வசதிகள் கிடைக்கும் என்று பாரன் பிரகடனம் செய்கிறார்.

புதுச்சேரி முதலியவை இந்தியா வுடன் ஐக்கியமடைந்தால், அவை தங்களுடைய தனிச் சிறப்பை இழக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் 'எச்சரிக்கை' செய்கிறார்!

அவரது கூற்று ஒரு விதத்தில் உண்மை என்பதை நாமும் ஒப்புக் கொள்ளுகிறோம்.

சென்னை மாகாணம் முழுதும் பூரண மதுவிலக்கு அமுலுக்கு வந்து விட்டது. இன்னும் சிறிது காலத்தில் இந்தியா முழுதும் அமுலுக்கு வரப் போகிறது.

இந்நிலைமையில் பிரஞ்சு இந்தியப் பிரதேசங்கள் இந்தியாவுடன் சேர்ந்து விட்டால், விதம் விதமான மது வகைகளுக்குப் பெயர் போன அவற் றின் தனிச் சிறப்பு மறைந்து விடும் என்பதும், பின்னர் அங்குள்ளவர்கள், குறிப்பாகப் பிரஞ்சு இந்திய சர்க்காரின் தாசர்கள் மது அருந்தும் சுதந்திரத்தை இழந்து விடுவார்கள் என்பதும் உண்மை தானே!

பல்லாண்டு பல்லாண்டாகப் பாரின் மதுவகைகளை அருந்திப் பழக்கப்பட்ட வர்கள் அடங்கிய பிரதேசங்களில், மது விலக்கை அமுலுக்குக் கொண்டு வருவது பாவம் என்பதை பாரன் சொல்லாமல் சொல்லியிருக்கிறார்!

புதுச்சேரியின் மகத்துவத்தை உல கம் இழப்பதா? என்றும் பிரஞ்சு கவர்னர் ஒரு கேள்வியைப் போடுகிறார்.

இந்தியாவுடன் சேர்ந்து விட்டால், இந்தியாவிலுள்ள பதினாயிரம் நகரங் களைப் போல் புதுச்சேரியும் பதினாயி ரத்து ஒன்றாகிவிடும் என்றும் அவர் பிரலாபிக்கிறார்.

ஆம்! இந்தியாவிலுள்ள பதினா யிரக்கணக்கான நகரங்களும் அடிமை வாழ்வையும் அன்னியரின் ஆதிக்கத் தையும் தகர்த்து எறிந்திருக்கையில், புதுச்சேரியும் அவைகளைப் பின்பற்று வதில் தனிச்சிறப்பு என்ன இருக்கிறது?

பதினாயிரம் சுதந்திர நகரங்க ளிடையே பதினாயிரத்தொரு சுதந்திர நகரமாக இருப்பதைக் காட்டிலும், பதினாயிரம் சுதந்திர நகரங்களிடையே ஓர் அடிமை நகரமாக இருப்பதுதான் தனிச்சிறப்பு என்பது பாரனின் அற்புத மான ஆராய்ச்சியாகும்!

உலகிலே குடியரசை முதன் முதலாக ஸ்தாபித்த பிரான்ஸின் பிரதிநிதி ஒருவர் மேற்கூறிய விதம் உபதேசம் செய்யும் கேலிக்கூத்துக்கு ஈடு இணை இருக்க முடியுமா?

புதுச்சேரி முதலிய பிரதேசங்கள், இந்தியாவையும் பிரான்ஸையும் இணைக்கும் சங்கிலித்தொடராக இருக்க வேண்டும் என்றும் பாரன் கூறுகிறார்.

பலே பேஷான யோசனை!

பிரான்ஸ்—இந்தியாவின் நட்புக்கு புதுச்சேரி, மாஹி, காரைக்கால், ஏனாம், முதலிய இந்தியப் பிரதேசங்கள் பிரான் ஸின் நிர்வாகத்தில் இருக்க வேண் டியது அவசியம் என்று கூறும் பாரன், மார்செயில்ஸ், டயப்பி, டீபாலோன், கலேய் முதலிய பிரெஞ்சுத் துறை முகங்கள் இந்தியாவின் நிர்வாகத்தில்

இருக்க வேண்டியது அவசியம் என்பதை ஒப்புக் கொள்வாரா?

அவ்வாறு ஒப்புக் கொள்வாராயின் மேற்படி யோசனையை யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை!

* * *

பிரஞ்சு இந்தியாவுக்குச் சொந்தமான ஐந்து பிரதேசங்களுள் சந்திரநாகூரில் மாத்திரம் பிரஞ்சு அதிகாரிகளின் சூழ்ச்சி பலிக்காததால், அங்கு இந்தியாவுடன் ஐக்கியமாவதை விரும்பும் தேசபக்தர்களே முனிசிபல் சபையில் பெரும்பான்மையான ஸ்தானங்களைப் பெற்றிருக்கிறார்கள்.

இன்னும் ஒரு வாரத்தில் இந்தியாவுடன் சேருவதென்று இறுதியாக முடிவு செய்ய அவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள்.

அவ்விஷயமாக முனிசிபல் சபையின் தீர்மானமே இறுதியானது என்பதை ஏற்கெனவே அங்கீகரித்துள்ள பிரஞ்சு சர்க்கார், சந்திரநாகூர் தாமதமின்றி இந்தியாவுடன் சேருவதற்கு எவ்வித முட்டுக் கட்டையும் போடமாட்டார்கள் என்று நம்புகிறோம்.

அது எப்படியாயினும்,— அவர்கள் முட்டுக்கட்டை போட்டாலும் போடாவிட்டாலும் பிரஞ்சு இந்தியப் பிரதேசங்கள் யாவும் இந்தியாவுடன் ஐக்கியமடையப் போவது நிச்சயம்.

அவ்விதம் ஐக்கியமாவதுதான் இயற்கைக்கு இயைந்த காரியம். சத்திய மார்க்கம், அரசியல் தர்மம், ஜனநாயகம்.


அதை எந்தச் சக்தியினாலும் தடுக்க முடியாது.

முப்பது கோடி ஜனங்கள் வாழும் பத்துலட்சம் சதுர மைல்களிலிருந்து அன்னியரின் ஆதிக்கத்தை ஒழித்து சுதந்திரத்தை ஸ்தாபித்த இந்திய மகா ஜனங்கள், மூன்று லட்சம் பேர்கள் வாழும் நூற்றுத் தொண்ணூற்று ஆறு சதுர மைல் பிரதேசத்திலுள்ள அன்னியரின் ஆதிக்கத்தை ஒழிக்க அஞ்சப் போவதில்லை.

மலைபோல் இருந்த கஷ்டங்கள் பனி போல் மறையும்படி செய்யும் ஆற்றல் படைத்த பாரத மக்களுக்கு, சுண்டைக் காய் போன்ற இந்தத் தொல்லையைத் தீர்க்க எவ்வளவு காலம் ஆகும்?



"தெருநிமணி மாலை" ஆசிரியர் ஸ்ரீ ரங்க ராமானுஜ ஐயங்கார் அவர்களின் புதல்வி குமாரி ஆர். பத்மாவின் வீணைக் கலை அரங்கேற்றம் எழும்பூர் ஜகந்நாத பக்த சபையின் ஆதரவில் சங்கீத ரஸிகர்கள் பலர் அடங்கிய சபையில் சென்ற 21—11—48 ஞாயிற்றுக்கிழமை மாலை சிறப்பாக நடந்தேறியது. குமாரி பத்மாவின் வித்வத்தையும் வாசிப்பின் சிறப்பையும் அனைவரும் பாராட்டி மகிழ்ந்தார்கள். வீணை தனம்மாவிடம் தாம் பயின்ற கலையைத் தம் குமாரிக்கு இவ்வளவு நல்ல முறையில் போதித்த தந்தையையும் வாழ்த்தினார்கள்.


இரண்டு மாதங்களுக்கு முன்...
இந்திய சர்க்கார் மந்திரி முகர்ஜி
குணி விலே
.... ஆனால் இன்று!
குணி விலே
முகர்ஜி
உர்... உர்...

லைசென்ஸும் லஞ்சமும்

எத்தனை விதமாக யோசித்து, எவ்வளவு எதிர்வாதங்கள் செய்து பார்த்தாலும், முடிவில் ஓர் உண்மையை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

அந்த உண்மை, நாம் சுதந்திரத்துக்குத் தகுதியாவதற்குக் கொஞ்சம் முன்னாலேயே சுதந்திரம் பெற்று விட்டோம் என்பதுதான்.

அவ்வாறு, நாம் தகுதி பெறுவதற்கு முன்னாலேயே இந்தியா சுதந்திரம் பெற்று விட்டதற்குக் காரணம் இன்னதென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்.

காந்தி மகாத்மாவினுடைய ஆத்ம சக்தி பாரத புண்ணிய பூமிக்கு அவருடைய ஆயுள் காலில் சுதந்திரம் அளித்துவிட்டது.

நம்முடைய தகுதியையோ தகுதியின்மையையோ பொருட்படுத்தாமல் காந்தி மகானுடைய தபோ சக்தியினால் இந்தியாவுக்குச் சுதந்திரம் கிட்டிவிட்டது.

இந்தியாவுக்குச் சுதந்திரம் அளித்த மகாத்மாவின் ஆத்ம சக்தி ஓரளவு நமது ஜவாஹர்லால்ஜி, சர்தார்ஜி, ராஜாஜி ஆகியவர்களிடம் ஆவிர்ப்பவித்திருந்து, காலத்துக்கு முன்னாலேயே கிடைத்த சுதந்திரத்தைப் பாதுகாக்க உதவி செய்து வருகிறது. பர்மா, சைனா, இந்தோனேஷியா முதலிய கீழ் நாடுகளின் பரிதாப நிலையை இந்தியாவும் அடையாமல் பாதுகாத்து வருகிறது. காந்தி மகான் வாழ்க! அவருடைய ஆத்ம சக்தி நீடூழி வாழ்க!

• • •

மற்றபடி, சுதந்திர இந்தியாவில் எந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தாலும் சுதந்திரத்துக்கு நம்முடைய தகுதி யின்மைதான் கண்ணுக்குப் புலனாகி வருகிறது.

எந்தத் துறையிலே பார்த்தாலும் ஒழுக்கமின்மை முன்னால் வந்து நிற்கிறது.

ஒழுக்கமின்மை ஒரு பங்கு என்று சொன்னால், அதைப் பற்றிய பேச்சு பத்து மடங்காக இருக்கிறது.

அங்கே லஞ்சம், இங்கே லஞ்சம், எங்கே பார்த்தாலும் லஞ்சம் என்ற ரீதியில் பொது மக்கள் பேசுகிறார்கள்.

டிராமிலும், பஸ்ஸிலும், ரயிலிலும், திருவிழாவிலும், பொதுக் கூட்டத்திலும், பத்துப் பேர் கூடும் இடங்களிலெல்லாம் "அவன் லஞ்சம் வாங்குகிறான்" "இவன் லஞ்சம் வாங்குகிறான்" "அங்கே ஊழல் நிறைந்திருக்கிறது" "இங்கே சலுகை தாண்டவமாடுகிறது" என்கிற பேச்சுக்களைக் கேட்கிறோம்.

சுதந்திரத்துக்குத் தகுதி பெறுவதற்குச் சற்று முன்னதாகவே நாம் சுதந்திரம் அடைந்து விட்டோம் என்பதற்கு மேற்படி பேச்சுக்களே அத்தாட்சியாகும்.

• • •

அன்னியர் ஆட்சியிலிருந்து நாம் சுதந்திரம் பெற்றுவிட்டோம். சுதந்திரம் பெற்றது மட்டுமல்ல;—ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட நல்லரசாட்சி முறையையும் பெற்றிருக்கிறோம்.

அப்படிப் பெற்ற சுதந்திரமும் ஜனநாயகமும் நிலைத்து நிற்க வேண்டுமானால்,—அவற்றின் பூரண பயனை நாம் அடைய வேண்டுமானால்,—அரசாங்க நிர்வாகத்தில் ஒழுக்கம் அடிப்படையாயிருக்க வேண்டும்.

ஆட்சி நடத்தும் பொறுப்பு வாய்ந்தவர்கள் எந்தவித சந்தேகத்துக்கும் இடம் கொடாதவர்களாயிருக்கவேண்டும்.

அவர்களைப் பற்றி "லஞ்சம் வாங்கினார்கள்" என்றோ, "சலுகை காட்டினார்கள்" என்றோ, "பட்சபாதம் செய்தார்கள்" என்றோ யாரும் சொல்லுவதற்குக் கூசவேண்டும். அப்படிச் சொல்லுகிறவனைப் பார்த்து மற்றவர்கள் நகைக்கும் நிலைமை ஏற்படவேண்டும்.

நம்முடைய தற்போதைய நிலைமை இதற்கு நேர்மாறாயிருக்கிறதென்பதைக் குறிப்பிட மிக்க வருத்தமாயிருக்கிறது.

மாகாணத்தின் ஆட்சிப் பொறுப்பை இப்போது வகிப்பவர்கள் யார் யார்?

முதலில், மந்திரிகள்; பிறகு, சட்டசபை அங்கத்தினர்; பிறகு அதிகார வர்க்கத்தினர்; பிறகு காங்கிரஸ் ஸ்தாபனங்களின் நிர்வாகிகள்; பின்னர், காங்கிரஸ் ஊழியர்கள்; கடைசியாக, பொதுஜன அபிப்பிராயத்தை உருப்படுத்தக் கூடிய அரசியல் உணர்ச்சிபெற்ற மத்திய வகுப்பார்.

மேலே கூறிய இவ்வளவு பேரும் "உயிரைக் காட்டிலும் ஒழுக்கம் மேலானது" என்ற திடமான கொள்கையைக் கடைப்பிடித்து நடந்தால், தேசம் அடைந்துள்ள

சுதந்திரமும் ஜனநாயகமும் மக்களுக்குப் பூரண பலன் அளிக்கும்.

மேற்கூறிய வகுப்பாரிடையே எவ்வளவுக் கெவ்வளவு ஒழுக்கக்கேடு உண்டாகி வளர்கிறதோ அவ்வளவுக்கு ஜனநாயகம் சீர்குலையும்; தேசமும் நாசமடையும்.

* * *

நமது மாகாணத்தைப் பொறுத்தவரையில், பிரதம மந்திரி செட்டியாரின் ஒழுக்கச் சிறப்பைப் பாராட்டாதவர்கள் இல்லை.

பொதுவாக நம் மந்திரி சபையைப் பற்றி லஞ்சக் குற்றம் சாட்டப்படுவதுமில்லை.

ஆனால் அரசாங்க இயந்திரத்தில் எந்த இடத்தில் ஊழல் இருந்தாலும் அதனால் ஏற்படும் அபகீர்த்தி மேலேயுள்ளவர்களை ஓரளவு பீடியாமல் விடாது.

பிரிட்டிஷ் ஆட்சி நடந்து கொண்டிருந்த காலத்தில் அதிகார வர்க்கத்தினர்மீது லஞ்சக் குற்றம் சுமத்துவது சர்வ சாதாரணம்.

இப்போதெல்லாம் உத்தியோகஸ்தர்களின் லஞ்ச ஊழல்களைக் கண்டு பிடிப்பதில் சர்க்கார் வெகு ஜரூராக இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஆனால் இதன் விளைவு என்னவென்று கேட்டால், லஞ்சம் வாங்குகிறவர்கள் எப்போதும்போல் லஞ்சம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்! ஒழுங்கை விரும்புவர்கள் "எப்போது நம் தலைக்குப் பாக்கு வருமோ?" என்று தெரியாத பயத்தில் இருக்கிறார்கள்.

லஞ்சம் வாங்குகிற உத்தியோகஸ்தர்கள் யாருக்கும் பயப்படுவதில்லை. ஒழுக்கமான உத்தியோகஸ்தர்களோ சட்டசபை அங்கத்தினரையும் காங்கிரஸ் நிர்வாகிகளையும் கண்டு நடுநடுங்குகிறார்கள்.

லஞ்ச ஊழல்களையும் 'பிளாக் மார்க்கெட்' கொள்ளையையும் கண்டு பிடித்து நடவடிக்கை எடுத்த உத்தியோகஸ்தர்கள் சிலர் உடனே மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

முன்னால் போகிறவன் குழியிலே விழுந்தால் பின்னால் வருகிறவனுக்குத் தீவர்த்தி பிடித்தாற்போல் அல்லவா?

ஆகையால் நேர்மையான உத்தியோகஸ்தர்கள் நேர்மையான காரியங்களைச் செய்தால் என்ன ஆபத்து வந்துவிடுமோ என்று பயப்படுகிறார்கள்.

இதற்கெல்லாம் காரணம் சட்டசபை அங்கத்தினரின் தலையீடுதான் என்று சொல்லப்படுகிறது.

தற்போதுள்ள சென்னைச் சட்ட சபை அங்கத்தினரின் பெயர் கெடுவது போல் முன்னே எந்தக் காலத்திலும் நடந்ததில்லையென்று சொல்லலாம்.

எம். எல். ஏ.க்களைப் பற்றிக் காங்கிரஸ் நிர்வாகிகளும் ஊழியர்களும் புகார் சொல்கிறார்கள். காங்கிரஸ் நிர்வாகிகளையும் ஊழியர்களையும் எம். எல். ஏ.க்கள் குறை கூறுகிறார்கள். இவர்கள் எல்லாரையும் குறித்து அரசியல் உணர்ச்சி பெற்ற பொது ஜனங்கள் புகார் சொல்லி வருகிறார்கள்.

* * *

இந்தகைய நிலைமையில், தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டியார் லைசென்சையும் பெர்மிட்டையும் பற்றிச் செய்திருக்கும் தீர்மானத்தை மனப்பூர்வமாக வரவேற்கிறோம்.

லஞ்சமும் லஞ்சப் பேச்சும் அதிகமாவதற்கும், பொதுஜனப் பிரதிநிதிகளான எம். எல். ஏ. க்களின் பெயர் சீர்குலைவதற்கும், அரசியல் வாழ்க்கை நாற்றமெடுப்பதற்கும் முக்கிய காரணமாயிருந்து வருகிறவை, லைசென்ஸ் பேயும், பெர்மிட் பிசாசும்.

ஓர் உதாரணம் பார்க்கலாம். சில காலத்துக்குத் துணிக் கண்ட்ரோல் முறை இல்லாமலிருந்தது. மறுபடியும் துணிக் கண்ட்ரோலை அமுலுக்குக் கொண்டு வரப்போவதாகச் சர்க்கார் தெரியப் படுத்தினார்கள்.

கண்ட்ரோல் முறையின் முக்கிய அம்சமாக, நூல் வியாபாரத்துக்கும் துணி வியாபாரத்துக்கும் லைசென்ஸ் கொடுக்கப் போவதாகவும் லைசென்ஸ் பெற்றவர்கள் மட்டுந்தான் அந்தந்த வியாபாரம் செய்யலாம் என்றும் சொன்னார்கள்.

ஒரு ஜில்லாவில் மொத்தமாகத் துணி வியாபாரம் செய்த வியாபாரிகள் நூறு பேர் இருந்ததாக வைத்துக் கொள்ளலாம். இந்த நூறு பேரும் மொத்தத் துணி வியாபாரத்துக்கு லைசென்ஸ் கோரி விண்ணப்பம் போட்டிருப்பார்கள் அல்லவா?

லைசென்ஸ் பெறாதவர்கள் வியாபாரம் செய்யக்கூடாது என்று சொல்லும்போது லைசென்ஸுக்கு ஒரு தனி விலை மதிப்பு உண்டாகி விடுகிறது.

எனவே, அந்தத் தனி விலை மதிப்பைத் தங்கள் செல்வாக்கைக் கொண்டு பெற்று விடலாம் என்ற நோக்கத்துடன் புதிதாகச் சிலர் துணி வியாபாரத் துறையில் இறங்க முன் வந்து லைசென்ஸுக்கு விண்ணப்பம் செய்கிறார்கள். இப்படிப்பட்ட புது விண்ணப்பக்காரர்கள் ஐம்பது பேர் என்று வைத்துக் கொள்ளலாம்.

இந்த நூற்றைம்பது விண்ணப்பதாரரில் ஐம்பது பேருக்குத்தான் லைசென்ஸ் கிடைக்கிறது. இவர்களில் பழைய வியாபாரிகள் முப்பது பேர்; புதிதாக வருகிறவர்கள் இருபது பேர்.

லைசென்ஸ் பெற முடியாத பழைய வியாபாரிகள் என்ன செய்வார்கள்? அவர்களுடைய வெகு காலத் தொழில் திடீரென்று நின்று போகிறது. அவர்களை நம்பியிருந்த பத்து இருபது ஆசாமிகளுக்கு வேலை இல்லாமற் போகிறது. இவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து "லைசென்ஸ் விஷயத்தில் பேத்து மாத்தும் ஓரவஞ்சகமும் கைக்கூலியும் வேலை செய்திருக்கின்றன!" என்று சொல்கிறார்கள்.

ஜவுளி வர்த்தக லைசென்ஸ் கொடுக்கும் விஷயத்தில் அந்தந்த ஸ்தல எம். எல். ஏ.க்களைக் கலந்துகொண்டு ஜில்லா அதிகாரிகள் லைசென்ஸுக்குச் சிபார்சு செய்ய வேண்டுமென்று சர்க்கார் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன் விளைவு என்ன? லஞ்சப் பழியெல்லாம் பெரும்பாலும் எம். எல். ஏ.க்கள் தலையில் விழுகிறது.

ஒரு ஊரில் பதினைந்து வருஷமாக ஒருவர் ஜவுளி வியாபாரம் செய்து வருகிறார். இது எல்லாருக்கும் தெரியும். நாணயஸ்தர் என்று பெயர் பெற்றவர். கள்ள மார்க்கெட் குற்றம் ஒன்றும் அவர்மீது கிடையாது.

இந்தப் பரம்பரை வியாபாரியும் லைசென்ஸுக்கு விண்ணப்பம் போடுகிறார். துணி வியாபாரத்துடன் எவ்வித சம்பந்தமும் இல்லாத மாஜி கள்ளுக் கடைக் கண்டிராக்டர் ஒருவரும் மனுப் போடுகிறார்.

பரம்பரை வியாபாரிக்கு லைசென்ஸ் கிடைக்கவில்லை; மாஜி கள்ளுக்கடைக்காரருக்குக் கிடைத்து விடுகிறது.

அந்தத் துணி வியாபாரியும் அவரைச் சேர்ந்தவர்களும் என்ன சொல்வார்கள்? "பணம் கடமாடியிருக்கிறது" "செல்வாக்கு உபயோகமாகியிருக்கிறது" என்று சொல்லுவார்களா, மாட்டார்களா?

* * *

உணவுக் கண்ட்ரோல் சீக்கிரத்தில் அமுலுக்கு வரப்போகிறது. உணவுக் கண்ட்ரோல் முறையில் ஒரு முக்கிய அம்சமாக, ஆங்காங்கே ஒவ்வொரு ஜில்லாவிலும் மொத்த அரிசி வியாபாரிகளுக்கு லைசென்சு கொடுத்தாக வேண்டும்.

மேற்படி லைசென்ஸுகளுக்காக இப்போதே பலர் அங்குமிங்கும் ஓடி அலையத் தொடங்கிவிட்டார்கள். எம். எல். ஏ.க்களையும் காங்கிரஸ் பிரமுகர்களையும் சுற்றிக்கொள்கிறார்கள். யாரைக்கொண்டு மந்திரிகளுக்குச் சிபாரிசு பிடிக்கலாம் என்று தவியாய்த் தவிக்கிறார்கள்.

லைசென்ஸுக்கு முயற்சி செய்கிறவர்களில் சிலபேருக்குத்தான் கிடைக்கும்; மற்றவர்கள் ஏமாற்றமடைவார்கள். ஏமாற்றமடைந்தவர்கள் யார் பேரிலாவது லஞ்சக் குற்றத்தைச் சுமத்துவார்கள்.

கண்ட்ரோல், லைசென்ஸ், பெர்மிட் முறைகளினால் பொது வாழ்வு இவ்வளவு சீர்குலைவை அடைந்திருக்கிறது.

* * *

இத்தகைய நிலைமையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியார் செய்திருக்கும் சிபார்சுகளை நாம் பெரிதும் பாராட்டுகிறோம்.

எம். எல். ஏ.க்களும், காங்கிரஸ் ஸ்தாபனங்களில் நிர்வாக பதவி வகிப்பவர்களும் லைசென்ஸ்—பெர்மிட்டுகள் பெற்று வியாபாரம் செய்யக்கூடாது.

காங்கிரஸைச் சேர்ந்த வக்கீல்கள் மதுவிலக்கு வழக்குகளிலும் கள்ள மார்க்கெட் கேஸ்களிலும் ஆஜராகக் கூடாது.

ரொம்பவும் சரியான தீர்மானங்கள். தீர்மானம் செய்ததுடன் நின்றுவிடாமல் அது காரியத்தில் நிறைவேற்றப் படுகிறதா என்றும் பார்க்க வேண்டும்.

நிறைவேற்றாத எம். எல். ஏ.க்கள் காங்கிரஸ் நிர்வாகிகள் முதலியவர்களின் பெயர் ஜாபிதாவை வெளியிட வேண்டும்.

* * *

மேற்படி தீர்மானங்களினாலும் அவற்றை நிறைவேற்றுவதினாலும் லஞ்ச ஊழல் அடியோடு நிவர்த்தியாகிவிடும் என்று யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள்.

எப்படிப்பட்ட தீர்மானத்தையும் 'டிமிக்கி' கொடுத்துவிட்டு வேறு வழிகளில் தங்கள் காரியத்தைச் சாதித்துக்கொள்ளக் கூடியவர்கள் இருக்கத்தான் இருப்பார்கள்.

ஆனபோதிலும், மொத்தத்தில் பொது வாழ்க்கை தூய்மையடைவதற்கு மேற்படி தீர்மானங்கள் அமுலுக்கு வந்தால் உதவியாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

காங்கிரஸ் எம். எல். ஏ.க்களும், காங்கிரஸ் நிர்வாகிகளும் சேர்முகமாக ஊழல் குற்றத்துக்கு உள்ளாவதைத் தடுத்தால் அதுவே பெரிய முன்னேற்றமாகும்.

கடற்கரையில் ராமன்

ஒரு நாள் மாலை சூரியன் மேற்றிசையில் அடிவானத்துக்கும் கீழே போய்க் கொண்டிருந்தான். செவ்வானம் கருகி இருள் படர்ந்து வந்தது. வானத்தில் வெண்ணிலவும் இலேசாக ஒளி பெற்று வந்தது. அவ்வேளையில் சேதுக் கடற்கரையில் சிந்தனையில் ஆழ்ந்தவண்ணம் ஒரு வீரன் உட்கார்ந்திருந்தான். அந்த வீரன் வேறு யாருமில்லை,—ராமன்தான்.

பிரிவாற்றாமைத் துயர் ராமனைப் பெரிதும் படுத்துகிறது. சீதையின் மேகலாபரணங்கள் அணிந்த அழகிய மேனி ராமனுக்கு நினைவு வரும்போது ராமன் துயரத்தில் ஆழ்ந்து பித்துப் பிடித்தவன் போல் ஆகிவிடுகிறான்.

பணிபழுத்(து) அமைந்தபூண்
மடியின் பண்பினால்
பிணிபழுத்(து) அமைந்தநோர்
பித்தின் உள்ளத்தான்,
அணிபழுத்(து) அமைந்தமுத்(து)
அரும்பும் செய்யவாய்
மணிபழுத்து அமைந்தவாய்
மறக்க வல்லனோ?

[பணி : மேகலாபரணம்]

சீதையின் முத்துப் போன்ற பல் வரிசையும் செவ்விதழ்களும் நினைவுக்கு வரும் போது மேலும் துயரத்தில் ஆழ்கிறான்.

மனம் கசந்த அந்த நிலையில் ராமன் தன் உடலைப் பார்த்துக் கொண்டான்.

உடலினை நோக்கும்

ஆம், 'உடலே போ' என்றால் அது அவ்வளவு சுலபமாகப் போய் விடுமா? உடலுடன் விடாப் பிடியாய் வன்மையாய் ஒட்டிக் கொண்டிருக்கும் உயிர் ஒன்று இருக்கிறதே!

வல்
உயிரை நோக்கும்!



உடலையும் உயிரையும் பார்த்தான். ஆனால் அவை போகிற வழியாக இல்லை. இடர்களைச் சுமந்துதான் ஆக வேண்டும் போலிருக்கிறது.

உடலினை நோக்கும், வல்
உயிரை நோக்கும், வெவ்
இடரினை நோக்கும், மற்(று)
யாது நோக்குங்கொல்!

எதைப் பார்த்தும் ஒன்றும் செய்வதற்கில்லை என்பதை உணர்ந்தான்.

ராமனுடைய இந்தச் சோக நிலையை நமது சித்திரக்காரர் மணியம் அருமையாக வரைந்திருக்கிறார். ராமனுடைய நிலையைக் கண்டு பரிதாபப்பட்டுப் பக்கத்தில் லக்ஷ்மணன் நிற்கும் நிலையும் வாய்ப்பாக வந்திருக்கிறது!

• • •

கவிச் சக்கரவர்த்தி கம்பர் ராமனை அந்தச் சோக நிலையிலேயே விட்டு வைத்து விடவில்லை!

பிறகு ராமன் எதிரிலிருந்த கடலைப் பார்த்தான். கடலுக்கப்பால் அந்தக் கள்வன் இராவணன் வசிக்கும் நிலையும் பார்த்தான்! உடனே ஆங்காரமும் கோபமும் உண்டாகின்றன.

கடலினை நோக்கும், அக்
கள்வன் வைகுறும்
திடரினை நோக்கும், தன்
சிலையை நோக்குமால்!

[சிலை : வில்]

ராமனுக்கு அப்போது பிறந்த கோபத்தில் தன்னுடைய உறுதுணையான கோதண்டம் என்கின்ற வில்லைப் பார்த்தான் என்று கம்பர் பெருமான் அழகாய் முடித்திருக்கிறார்.

• • •

இந்த அருமையான சித்திரம் சமீபத்தில் நிகழ்ந்த கம்பர் விழாக் கண்காட்சியில் வைக்கப் பட்டிருந்தது. இந்த இதழின் அட்டையில் இப்போது திகழ்கிறது.

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

55. ஏறுதே. நீ!

டிரான்ஸ்வால் முழுவதிலும் வசித்த இந்தியர்களிடையே மறுபடியும் பிரசாரம் ஆரம்பமாயிற்று. எல்லா இடங்களிலும் பொதுக் கூட்டங்கள் போட்டுத் தளபதி ஸ்மட்ஸ் செய்த மோசத்தைப் பற்றி எடுத்துச் சொல்லப்பட்டது. இந்தியர்கள் எல்லாரும் ஒருமுகமான உற்சாகம் காட்டினார்கள். மீண்டும் போராட்டத்தைத் தொடங்கவும் சிறை செல்லவும் சித்தமா யிருப்பதாகத் தெரிவித்தார்கள். தாங்களாகப் பதிவு செய்து கொண்டவர்களிடமிருந்து, பதிவுப் பத்திரங்கள் வாங்கிச் சேகரிக்கப்பட்டன. டிரான்ஸ்வால் சர்க்காருடன் காந்திஜி நடத்தி வந்த கடிதப் போக்குவரவில் பலனில்லாவிட்டால், மேற்படி பதிவுப் பத்திரங்களை யெல்லாம் ஓரிடத்தில் சேர்த்துவைத்துச் சொக்கப்பனை கொளுத்திவிடுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

தளபதி ஸ்மட்ஸ் வாக்களித்தபடி ஆசியாக்காரர் சட்டத்தை ரத்து செய்யவேண்டும் என்றும், புதுச் சட்டம் கொண்டு வரக்கூடாதென்றும் இந்தியரின் சார்பாக டிரான்ஸ்வால் சட்ட சபைக்கு மகஜர் அனுப்பப்பட்டது. அது பயனளிக்கவில்லை. மசோதாவைச் சீக்கிரத்தில் சட்டமாக்குவதற்கு நடவடிக்கை நடந்து கொண்டிருந்தன. எனவே, கடைசி கடைசியாகச் 'சத்தியாக்கிரஹிகள்' டிரான்ஸ்வால் சர்க்காருக்கு ஒரு 'அல்டிமேட்டம்'—அதாவது, இறுதி எச்சரிக்கை அனுப்பினார்கள்.

மேற்படி கடைசிக் கடிதத்தில் இந்தியர்கள் தங்களைச் 'சத்தியாக்கிரஹிகள்' என்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டவில்லை. அதை 'இறுதி எச்சரிக்கை' (அல்டிமேட்டம்) என்று குறிப்பிடவும் இல்லை. தளபதி ஸ்மட்ஸ் அவர்கள்தான் மேற்படி கடிதத்துக்கு 'இந்திய சத்தியாக்கிரஹிகளின் இறுதி எச்சரிக்கை' என்று நாமகரணம் சூட்டினார்.

"சர்க்காரை இந்திய சத்தியாக்கிரஹிகள் இப்படிப் பயமுறுத்தப் பார்க்கிறார்கள். இவர்களுடைய துணிச்சலை என்னவென்று சொல்வது? டிரான்ஸ்வால் அரசாங்கம் இந்தப் பயமுறுத்தலுக்கு இணங்கிவிடுமா? டிரான்ஸ்வால் அரசாங்கத்தின் பலம் இவ்வளவு என்று தெரியாமல் இந்தக் கிளர்ச்சிக்காரர்கள் காரியம் செய்கிறார்கள். இவர்களுடைய பேச்சைக் கேட்டு நடந்தால் ஏழை இந்தியர்கள் அடியோடு அழிந்துபோக வேண்டியதுதான்!" என்று சொன்னார் தளபதி ஸ்மட்ஸ். இந்தியர்கள் இறுதி எச்சரிக்கைவிடத் துணிந்த விஷயம் டிரான்ஸ்வால் சட்டசபை அங்கத்தினர்களுக்கு அளவில்லாத ஆத்திரத்தை மூட்டியது. இந்த ஆத்திரம் காரணமாக மேற்படி சட்டசபை அங்கத்தினர்கள் தளபதி ஸ்மட்ஸின் புதிய மசோதாவை ஒருமுகமாகவும் உற்சாகமாகவும் நிறைவேற்றி வைத்தார்கள்.

மேற்படி அங்கத்தினருக்கு இவ்வளவு கோபத்தை உண்டாக்கிய இந்தியர்களின் இறுதிக் கடிதத்தில் என்னதான் எழுதியிருந்தது என்று இப்போது கவனிக்கலாம். அதன் சாராம்சம் பின்வருமாறு :—

"தளபதி ஸ்மட்ஸுக்கும் இந்தியர்களுக்கும் ஏற்பட்ட ராஜி உடன்பாட்டின் முக்கிய

ராகி

மான அம்சம், இந்தியர்கள் தாங்களாகவே பதிவு செய்து கொள்ளும் பட்சத்தில், அதை அங்கீகரித்துக் கொண்டு ஆசியாக்காரர் சட்டத்தை ரத்து செய்யவேண்டும் என்பதே. அரசாங்கத்தார் திருப்தியடையும் முறையில் இந்தியர்கள் பெரும்பாலோர் தாங்களாகவே முன் வந்து பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால் ஆசியாக்காரர் சட்டத்தை இப்போது ரத்து செய்வதுதான் முறையாகும். இதை ஞாபகப் படுத்தித் தளபதி ஸ்மட்ஸுக்கு இந்தியர்கள் பல கடிதங்கள் எழுதியும் பயன் விளையவில்லை. தளபதியிடமிருந்து இதுவரையில் பதிலே கிடைக்கவில்லை. இன்னும், சட்ட முறைக்கு உட்பட்டுச் செய்யக்கூடிய முயற்சிகளையெல்லாம் செய்து பார்த்து விட்டோம். ஒன்றிலும் பயனில்லை. இது காரணமாக இந்திய சமூகத்தினிடையே பெரும் அதிருப்தியும் ஆத்திரமும் உண்டாகி வளர்ந்து வருகிறதென்பதைச் சட்டசபை அங்கத்தினருக்குத் தெரியப்படுத்த விரும்புகிறோம். ராஜி உடன்பாட்டின் நிபந்தனையின் பிரகாரம் ஆசியாக்காரர் சட்டத்தை உடனே ரத்து செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகிறோம். அவ்விதம் ஆசியாக்காரர் சட்டத்தை ரத்து செய்துவிட்டதாக ஆகஸ்டு 16-ந் தேதிக்குள் அரசாங்கத்தாரிடமிருந்து தகவல் கிடைக்காவிட்டால், இந்தியர்கள் தாங்களாகப் பதிவு செய்து கொண்டு பெற்ற சர்டிபிகேட்டுகளை யெல்லாம் கொளுத்தி விடுவதென்று இந்திய சமூகம் முடிவு செய்திருக்கிறது. இந்தக் காரியத்தின் விளைவாக ஏற்படும் பலாபலன்களை இந்திய சமூகம் அநுபவிக்கத் தயாராயிருக்கிறது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்."

மேற்படி கடிதத்தில் பதில் கிடைப்பதற்கு ஆகஸ்டு 16வ என்று தவணை குறிப்பிட்டிருந்த காரணத்தினால் அதை இறுதிக் கடிதம் என்றும், எச்சரிக்கை என்றும், பயமுறுத்தல் என்றும் வெள்ளைக்காரர்கள் கருத நேர்ந்தது. இந்தக் கடிதத்தை அனுப்புவதற்குமுன்னால் இந்தியத் தலைவர்களுக்குள்ளே சாங்கோபாங்கமாக விவாதம் நடந்து, ஆட்சேப சமாதானங்கள் சொல்லி முடிந்து, அதற்குப் பிறகுதான் எப்படியும் கடிதத்தை அனுப்பியே தீர்வது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆகையால் வெள்ளைக்காரர்கள் பலர் ஆத்திரங் கொண்டது பற்றி இந்தியர்கள் கவலைப்படவில்லை. தங்களுக்குச் சரியாகத் தோன்றும் காரியத்தைச் செய்வதற்காக எந்த விதமான கஷ்டம் ஏற்பட்டாலும் சகித்துக் கொள்ள இந்தியர்கள் சித்தமாயிருந்தார்கள்.

டிரான்ஸ்வால் சட்டசபையில் என்றைய தினம் புதிய ஆசியாக்காரர் மசோதாவை நிறைவேற்றுவதற்காகக் குறிப்பிட்டிருந்தார்களோ அதே தேதியில் இந்தியர்கள் ஸ்மட்ஸ் சர்க்காருக்கு விடுத்த இறுதிக் கடிதத்தில் குறிப்பிட்ட தவணையும் முடிவாயிற்று.

அன்றையதினம் அதாவது 1908-ம் வருஷம் ஆகஸ்டுமீ 16வ ஜோகானிஸ்பர்க் ஹமீதியா மசூதியைச் சேர்ந்த மைதானத்தில் மாலை நாலு மணிக்குப் பொதுக்கூட்டம் போட்டிருந்தது. அரசாங்கத்தாரிடமிருந்து பதில் எதுவும் வராது என்றே காந்தி மகாத்மாவும் மற்ற இந்தியர்களும் எண்ணினார்கள். ஆயினும் ஒரு வேளை, கடைசி நிமிஷத்தில் அரசாங்கத்தின் மனம் மாறித் தந்தி மூலம் ஏதேனும் பதில் வந்தால், அதை உடனே பொதுக் கூட்டம் நடக்கும் இடத்துக்குக் கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட காலத்துக்கு மிக முன்னதாகவே ஹமீதியா மசூதி மைதானத்தில் இந்தியர்கள் வந்து கூடி விட்டார்கள். ஒரு அங்குல இடமும் மிச்சம் வைக்காமல் கூட்டம் கூடிவிட்டது. காந்திஜீ முதலிய தலைவர்களும் முன்னதாகவே வந்து விட்டார்கள். மைதானத்தின் ஒரு மூலையில் ஒரு மேடை அமைக்கப்பட்டிருந்தது. நீக்ரோவர்கள் சமூக விருந்து சமைத்துச் சாப்பிடுவதற்கு, நாலு கால்கள் உடைய பெரிய கொப்பறைகளை உபயோகிப்பது உண்டு. அத்தகைய பிரம்மாண்டமான கொப்பறை ஒன்றை இந்திய வியாபாரி ஒருவரிடமிருந்து வாங்கி வந்து மேடையின்பேரில் ஏற்றியிருந்தார்கள். குறிப்பிட்ட காலத்துக்குள் சர்க்காரிடமிருந்து தகவல் வராவிட்டால், சர்டிபிகேட்டுகளை யெல்லாம் அந்தக் கொப்பறையில் போட்டுக் கொளுத்தி விடுவது என்று திட்டமாகியிருந்தது.

பொதுக்கூட்டம் ஆரம்பிக்கும் தறுவாயில் தொண்டர் ஒருவர் சைகிளில் ஏறி விரைந்து வந்தார். அத்தொண்டர் கொண்டுவந்த தந்தி காந்திஜியிடம் கொடுக்கப்பட்டது. அரசாங்கத்தாரிடமிருந்து வந்த தந்திதான் அது. தந்திக்குள்ளே என்ன எழுதி யிருக்கும்? சாதகமான பதில் இருக்குமா? — இந்த எண்ணத்தினால் ஏற்பட்ட பரபரப்புடன்

காந்திஜி தந்தியைப் பிரித்துப் படித்தார். "இந்திய சமூகம் மேற்கொள்ள எண்ணியிருக்கும் நடவடிக்கைக்காக மிகவும் வருந்துகிறோம். அதற்காக அரசாங்கத்தின் உத்தேசத்தை மாற்றிக்கொள்ள முடியாது" என்று தந்தியில் எழுதியிருந்தது. உடனே பொதுக் கூட்டத்தில் கூடியிருந்த ஜனங்களுக்குச் சர்க்காரிடமிருந்து வந்த பதில் படித்துக் காட்டப்பட்டது. அதைக் கேட்டார்களோ இல்லையோ, மைதானத்தில் கூடியிருந்த அவ்வளவு ஜனங்களும் அளவில்லா உற்சாகத்துடன் பலத்த கரகோஷம் செய்தார்கள். அரசாங்கத்திடமிருந்து 'இல்லை' என்று வந்த பதில்தான் அவர்களுக்கு அத்தனை உற்சாகம் அளித்தது. சாதகமான பதில் வந்திருந்தால், சர்டிபிகேட்டுகளை எரிப்பதற்காகச் செய்த ஏற்பாடு வீணாகி விடுமல்லவா? இந்தியர்கள் போராட்டம் நடத்துவதில் அவ்வளவு ஆர்வம் கொண்டிருந்தபடியால், சர்க்காரிடமிருந்து சாதகமான பதில் வருவதை விரும்பவில்லை என்று தோன்றியது. இந்தியர்கள் தங்களுடைய வலிமையை உணர்ந்திருந்தார்கள் என்பதற்கு அந்தக் கரகோஷ ஆரவாரம் அறிகுறியாக இருந்தது.

பொதுக் கூட்டம் ஆரம்பமாயிற்று. கூட்டத்தின் தலைவர் சொல்லவேண்டியதையெல்லாம் சொல்லி, "போராட்டம் என்றால் விளையாட்டு அல்ல; பல கஷ்ட நஷ்டங்களுக்குத் தயாராயிருக்கவேண்டும்" என்று எச்சரித்தார். மற்றும் பலர் பேசினார்கள். தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன. கடைசியாகக் காந்தி மகான் பேச எழுந்தார். ராஜி ஏற்பாட்டின் நிபந்தனைகளை விளக்கமாகச் சொன்னார். அந்த நிபந்தனைகளைச் சர்க்கார் நிறைவேற்ற மறுத்ததையும், நிறைவேற்றும்படி செய்வதற்கு இந்திய சமூகம் செய்த பிரயத்தனங்களையும் எடுத்துச் சொன்னார். கடைசியாகக் காந்தி மகான் கூறியதாவது :— "உங்களில் பெரும்பாலோர் சர்டிபிகேட்டுகளை எரிப்பதற்காகக் கொடுத்திருக்கிறீர்கள். கொடுத்த பிறகு யாருக்காவது மனம் மாறியிருந்தால், சர்டிபிகேட்டை எரிக்காமல் வைத்துக்கொள்ள வேண்டும் என்று இஷ்டப்பட்டால், உடனே எழுந்து இந்த மேடைக்கு வரலாம்; சர்டிபிகேட் அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். வெறுமனே சர்டிபிகேட்டை எரித்து விட்டால் மட்டும் போதாது. அதன் பிறகு நடக்கும் போராட்டத்தில் உறுதியாக நிற்க வேண்டும். இப்போது சர்டிபிகேட்டைத் திருப்பி வாங்கிக் கொள்வதில் தவறு ஒன்று

மகாத்மா காந்தி எழுதிய நூல்கள்

ஒவ்வொருவரும் படிக்க வேண்டியது அவசியம்



ரூ. அ.

1. இல்லறமும் பிரும்மசரியமும் 1-0

கர்ப்பத்தடை முறைகளைக் கண்டித்து இந்திரிய நிக்ரகத்தை விளக்கி மகாத்மாஜீ எழுதிய உயர்ந்த கட்டுரைகள் அடங்கியது.

2. அனாஸக்தி யோகம் அல்லது (பற்றின்றி வாழ்தல்) 1-4

பகவத் கீதைக்கு மகாத்மா எழுதிய மொழிபெயர்ப்பும் குறிப்புகளும்.

3. ஆரோக்கிய வழி 1-4

ஒவ்வொருவரும் தேகாரோக்கிய சம்பந்தமாகக் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டிய பல அரிய விஷயங்களை காந்திஜீ விஸ்தரிக்கிறார்.

4. உத்தம வாழ்க்கை 0-8

காந்தியடிகள் எரவாடா சிறையினின்றும் சபர்மதி ஆசிரமவாசிகளுக்குச் செய்த பல அரிய உபதேசங்கள் உள்ளது.

5. ஹிந்து தர்மம் 0-8

ஹிந்து சமயத்தின் அரிய தத்துவங்களை இலகுவாக மனதில் பதியத் தக்க விதமாக மகாத்மா எழுதிய வியாசங்கள் அடங்கியது.

வியாபாரிகளுக்கு 20% கமிஷன்
தபால் செலவு முதலியன தனி

கிடைக்குமிடம் :

B. இரத்தின நாயகர் & ஸன்ஸ்,
வெங்கடராமய்யர் தெரு ஜி.டி., சென்னை

யில்லை; அவமானமும் இல்லை. ஆனால் இன்றைக்கு எரித்துவிட்டு நாளைக்கு மறுபடியும் போய்ப் பதிவு செய்து சர்டிபிகேட் வாங்கினால் அதைக்காட்டிலும் இந்திய சமூகத்துக்கு ஒரு இந்தியர் செய்யக்கூடிய துரோகம் வேறு ஒன்றும் கிடையாது. ஆகையால் தீர்க்கமாக ஆலோசித்துச் சொல்லுங்கள். இஷ்டப்பட்டவர்கள் இப்போதுகூடச் சர்டிபிகேட்டுகளைத் திருப்பி வாங்கிக் கொண்டு விடலாம்!"

காந்திஜி இவ்விதம் பேசிக் கொண்டிருக்கையிலேயே கூட்டத்தில் "எங்களுக்கு சர்டிபிகேட் வேண்டாம்; எரித்து விடுங்கள்!" என்ற கூச்சல் எழுந்தது. காந்திஜியின் பேச்சு முடிந்ததும் ஒரே குரலாகக் கூட்டத்தார் அதே பதிலைச் சொன்னார்கள். மகாத்மாவைத் தடியால் அடித்த மீர் ஆலம் என்னும் பட்டாணியனும் கூட்டத்துக்கு வந்திருந்தான். அவன் திடீரென்று எழுந்து நின்றதும் என்ன சொல்லப் போகிறானோ என்று அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர். "நான் தங்களை அடித்தது பெரும் பிசகு. அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். என் பேரில் கோபம் வைத்துக்கொள்ள வேண்டாம்!" என்று சொல்லிவிட்டு, தன்னுடைய சர்டிபிகேட்டையும் எரிப்பதற்காகக் கொண்டு வந்து கொடுத்தான்! கூட்டத்தில் காது செவிடுபடும்படியான கரகோஷம் எழுந்தது. காந்திஜி மீர்ஆலத்தின் கையைப் பிடித்துக் குலுக்கி, "அப்பனே! உன் பேரில் எப்போதுமே எனக்குக் கோபம் இருந்ததில்லையே!" என்றார்.

அதுவரை சத்தியாக்கிரஹக் கமிட்டியார் இரண்டாயிரம் சர்டிபிகேட்டுகள் சேகரித்திருந்தார்கள். அவ்வளவும் கொப்பரையில் போடப்பட்டன. அவற்றின்மேல் மண்ணெண்ணெய் ஊற்றப்பட்டது. ஈஸப் மியான் தீக்குச்சியைக் கிழித்துக் கொப்பரைக்குள் போட்டார். தீப்பிடித்துக் கொண்டது. சில நிமிஷத்துக்கெல்லாம் ஜுவாலை விட்டு எரியத் தொடங்கியது. ஏற்கெனவே சர்டிபிகேட்டுகளைக் கொடாதவர்கள் பலர் கையோடு சர்டிபிகேட்டுகளைக் கொண்டு வந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவராக மேடைக்குச் சென்று தங்கள் சர்டிபிகேட்டுகளை நெருப்பிலே போட்டார்கள். ஒவ்வொருவரும் சர்டிபிகேட்டைக் கொண்டு வந்து போட்டபோது கரகோஷம் வானை அளாவியது. இவ்விதமாக அளவில்லா உற்சாகத்தினிடையே சர்டிபிகேட் தகனம் நடந்து முடிந்தது.

இதை யெல்லாம் ஆங்கிலப் பத்திரிகைகளின் பிரதிநிதிகள் சிலர் வந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். நடந்ததை யெல்லாம் விவரமாகப் பத்திரிகைகளுக்கு எழுதினார்கள். லண்டன் "டெயிலி மெயில்" பத்திரிகையின் நிருபர் ஒருவரும் வந்திருந்தார். அவரும் இந்த நிகழ்ச்சியைப் பற்றி விவரமான செய்தியைத் தம் பத்திரிகைக்கு அனுப்பினார். அமெரிக்க சுதந்திரப் போரின் ஆரம்பத்தில் பாஸ்டன் துறைமுகத்திற்கு வந்த பிரிட்டிஷ் கப்பலில் அமெரிக்கர்கள் ஏறி அதிலிருந்த தேயிலைச் சாக்கையெல்லாம் கடலில் தள்ளிய சரித்திரப் பிரசித்தியான சம்பவத்தோடு டிரான்ஸ்வால் இந்தியர்கள் சர்டிபிகேட்டுகளை எரித்ததை மேற்படி நிருபர் ஒப்பிட்டிருந்தார்.

உவமானம் அவ்வளவு பொருத்தமில்லைதான். சுதந்திரத்துக்காக ஆங்கிலேயருடன் போர் தொடங்கிய அமெரிக்கர்கள் பெருந்தொகையினர். அதோடு அவர்களிடம் சகலவிதமான ஆயுதங்களும் பயிற்சி பெற்ற சைன்யமும் இருந்தன.

ஆனால் டிரான்ஸ்வால் இந்தியர்களோ சொற்பத் தொகையினர். அவர்களிடம் ஆயுதம் ஒன்றும் இல்லை; ஆயுதத்தை அவர்கள் விரும்பவும் இல்லை. சத்தியத்தையும் அஹிம்சையையுமே ஆயுதங்களாகக்கொண்டு வலிமை மிக்க டிரான்ஸ்வால் சர்க்காருடன் இந்தியர்கள் போர் தொடங்கினார்கள்.

கல்கி வாரப் பதிப்பு

•

இந்தியா & சிலோன்

வருஷச் சந்தா ...	ரூ.	13—0—0
6 மாதச் சந்தா ...	ரூ.	6—8—0
தனிப் பிரதி ...	அணா	0—4—0


வெளிநாடு

வருஷச் சந்தா ...	ரூ.	16—4—0
6 மாதச் சந்தா ...	ரூ.	8—2—0
தனிப் பிரதி ...	அணா	0—5—0

குறிப்பு:—சந்தாதாரர்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிடவும்.

•

மானேஜர், கல்கி காரியாலயம், சென்னை.


அலை ஓசை
கல்கி
மூன்றாம் பாகம்
எரிமலை

பூர்வ கதை

பட்டாபிராமன், அமரநாதன், சூரியநாராயணன் என்னும் மூன்று நண்பர்கள் தேவபட்டணத்தில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். மூவரிலும் சூரியா வயதில் சின்னவன். தன்னுடைய தங்கை லலிதாவைக் கலியாணத்துக்காகப் பார்க்க மதராஸிலிருந்து மனுஷர்கள் வருகிறார்கள் என்று கேள்விப்பட்டு ராஜம்பேட்டைக் கிராமத்துக்குச் சூரியா சென்றான்.

ராஜம்பேட்டைப் பட்டாமணியம் கிட்டாவய்யரின் சகோதரி பம்பாயில் வாழ்க்கைப் பட்டிருந்தாள். அவள் நீடித்த நோயினால் மெலிந்திருப்பது அறிந்து கிட்டாவய்யர் பம்பாய் சென்று ராஜத்தையும் அவளுடைய புதல்வி சீதாவையும் அழைத்து வந்திருந்தார்.

சூரியாவுக்குத் தன் பம்பாய் அத்தை வாழ்க்கையெல்லாம் துயரப் பட்டவள் என்று தெரிய வந்தது. அதன் காரணமாக அத்தையின் பேரிலும் அவள் புதல்வி சீதாவின் பேரிலும் சூரியா மிக்க அநுதாபம் கொண்டான்.

மதராஸிலிருந்து லலிதாவைப் பார்க்க வந்த சௌந்தரராகவன் எம். ஏ. மாஜி ஸப் ஜட்ஜு பத்மலோசன சாஸ்திரியின் புதல்வன். புதுடில்லி சர்க்கார் காரியாலயத்தில் வரவு செலவு இலாகாவில் அவனுக்குப் பெரிய உத்தியோகம் ஆகியிருந்தது. கிட்டாவய்யர் குமாரி லலிதாவைப் பார்க்க வந்த சௌந்தரராகவன், அவருடைய சகோதரியின் பெண் சீதாவைத் தேர்ந்தெடுத்து அவளை மணம் புரிந்து கொள்வதாகச் சொன்னான்.

சூரியாவுக்கு இது மிக்க திருப்தியளித்தது. ஏனெனில் தன் தங்கை லலிதாவைத் தன்னுடைய சிநேகிதன் பட்டாபிராமனுக்குக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் அவன் மனதில் இருந்தது. அதை இப்போது வெளியிட்டுச் சொல்லிப் பெற்றோர்களின் சம்மதம் பெற்றான்.

ஒரே பந்தலில் இரண்டு முகூர்த்தங்களும் நடைபெற்றன. சீதாவின் தகப்பனார் துரைசாமி ஐயர் முதலில் கலியாணத்துக்குச் சம்மதித்துக் கடிதம் எழுதியிருந்தார். கலியாணத்துக்கு முதல் நாள் அவரிடமிருந்து "கலியாணத்தை நிறுத்திவிடவும்" என்று தந்தி வந்தது. அதை முதலில் வாங்கிப் பார்த்த சூரியா "தந்தி உண்மையானதுதானா?" என்பதில் சந்தேகம் கொண்டு மற்றவர்களிடம் அதைப்பற்றிச் சொல்லாமல் இருந்துவிட்டான்.

திருமாங்கல்ய தாரணம் நிறைவேறிய சிறிது நேரத்துக் கெல்லாம் துரைசாமி ஐயர் வந்து சேர்ந்தார். சூரியாவிடமிருந்து கலியாணம் நடந்த விஷயத்தை அறிந்துகொண்டு "கடவுளின் சித்தம்" என்று சொல்லித் திருப்தியடைந்தார்.

* * *

நாலு வருஷத்துக்குப் பிறகு, 1938-ம் ஆண்டில், சௌந்தரராகவன் புது டில்லியில் வசதியான வீடு அமர்த்திக் கொண்டான். அவனுடைய மனைவி சீதாவும் தாயார் காமாட்சி அம்மாளும் குழந்தை வஸந்தியும் டில்லிக்கு வந்து சேர்ந்தார்கள்.

கிராமத்தில் குடியானவர்கள் தகராறு காரணமாகச் சூரியாவுக்கும் அவனுடைய தமையன் கங்காதரனுக்கும் சண்டை மூண்டது.

சூரியா காலேஜு படிப்பை நடுவில் நிறுத்திவிட்டு ஹரிபுரா காங்கிரசுக்குச் சென்றான். சீதாவும் அவள் மாமியாரும் சென்ற அதே ரயிலில் சூரியாவும் பிரயாணம் செய்தான்.

ஹரிபுரா காங்கிரஸிலிருந்து திரும்பி வந்து டில்லியிலேயே வசிக்கத் தொடங்கினான்.

ராகவனும் சீதாவும் சூரியாவும் ஆக்ராவுக்குத் தாஜ்மகால் பார்க்கச் சென்றார்கள். அங்கே சௌந்தரராகவன் அவனுடைய பழைய சிநேகிதி தாரிணியைச் சந்தித்தான். தாஜ்மகாலில் சூரியா மற்றவர்களுடன் விவாதச் சண்டை போட்டுவிட்டு டில்லிக்குத் திரும்பிவிட்டான். மற்றவர்கள் ரஜனிபூர் ஏரி பார்க்கச் சென்றார்கள். ராகவனும் தாரிணியும் சிநேகமாகப் பழகுவதைப் பார்த்துச் சீதாவுக்கு உள்ளம் கொதித்தது. ஏரியில் படகில் சென்றபோது வெறி பிடித்தவள்போல அலறிக் கொண்டு ஏரியில் விழுந்துவிட்டாள். ராகவனுக்கு நீந்தத் தெரியாது. அவன் திகைத்து நிற்கையில் தாரிணி தண்ணீரில் குதித்துச் சீதாவைக் காப்பாற்றினாள். அதுமுதல் தாரிணியைச் சீதா தெய்வமாகப் போற்றத் தொடங்கினாள்.

சீதாவின் தாயார் பம்பாயில் நோய்ப்பட்டிருந்தபோது ஒரு வடநாட்டு ஸ்திரீ மர்மமாக வந்து சீதாவுக்கு ஒரு ரத்தின ஹாரமும் அவளுடைய கலியாணத்துக்கு இரண்டாயிரம் ரூபாய் சீதனமும் கொடுத்துவிட்டுப் போனாள். அந்த ஸ்திரீயின் வளர்ப்புப் பெண் தாரிணி என்று சீதா தெரிந்துகொண்டாள்.

டில்லியில் ராகவனுடைய வீட்டுக்குச் சமீபத்தில் ஒரு கொலை நடைபெறுகிறது. தாரிணியின் வளர்ப்புத் தாய், இருட்டிய பிறகு கையில் இரத்தம் தோய்ந்த கத்தியுடன் வந்து அன்றிரவு

தான் ஒளிந்திருப்பதற்கு இடம் கொடுக்கும்படி சீதாவை வேண்டுகிறான். பாதி பயத்தினாலும் பாதி பிரியத்தினாலும் சீதா அதற்கு உடன்படுகிறாள். பின்னால், கொலை செய்தவன் வேறொரு மனிதன் என்று வெளியாகிறது.

சூரியாவும் தாரிணியும் சோஷலிஸ்ட் கட்சியில் சேர்ந்து வேலை செய்து வருகிறார்கள். அவர்களுடைய சிநேகம் ராகவனுடைய மனத்தில் பொறாமைத் தீயை வளர்க்கிறது. ஒரு நாள் ராகவன் தன் மனதைத் திறந்து தாரிணியிடம் தன் காதலை வெளியிடுகிறான். அவளை இரண்டாவது மனைவியாக மணப்பதாகச் சொல்கிறான். தாரிணியோ தன்னுடைய வாழ்க்கை இலட்சியமும் ராகவனுடைய வாழ்க்கை இலட்சியமும் பொருந்தமாட்டா என்று சொல்லி ராகவன் காதலை உறுதியாக நிராகரிக்கிறாள்.

மேற்கூறிய சம்பவங்கள் எல்லாம் நடைபெற்று ஐந்து வருஷங்கள் ஆகின்றன.

முதல் அத்தியாயம்

ஊதுவத்தி வியாபாரி

தேவ பட்டணத்துத் தேரோடும் வீதியில் ஒரு குதிரை வண்டி கடகட வென்ற சத்தத்துடன் ஓடிக் கொண்டிருந்தது. வண்டிக்குள்ளே ஒரு இளம் பிரயாணி உட்கார்ந்திருந்தான். அவன் தலையிலே பல வர்ணக் கோடுகள் போட்ட உருமாலையைத் தலைப்பாகையாகக் கட்டிக் குஞ்சம் தொங்கவிட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தால், மத்திய இந்தியாவிலிருந்து வரும் வியாபாரியைப் போல் காணப்பட்டது. அவனுக்குப் பக்கத்தில் இருந்த தகரப் பெட்டியும் துணி மூட்டையும் மேற்படி ஊகத்தை உறுதிப்படுத்தின.

அட்வகேட் ஆத்மநாதய்யரின் வீட்டு வாசலில் வந்து வண்டி நின்றது. இளைஞன் வண்டிக்குள்ளிருந்தபடியே வண்டிக்காரனுக்கு வாடகைப் பணம் கொடுத்துவிட்டு ஒரு கையில் பெட்டியையும் ஒரு கையில் துணி மூட்டையையும் எடுத்துக்கொண்டு வண்டியிலிருந்து இறங்கினான்.

“நிற்கட்டுமா, சேட்? ஜல்தி வருவீங்களா?” என்று வண்டிக்காரன் கேட்டதற்கு, “நை! தும் ஜாவ்!” என்றான் அந்த வாலிபன். ஜட்கா வண்டி புறப்பட்டுச் சென்றது.

ஆத்மநாதய்யர் வீட்டு வாசலில் இரும்புக் கம்பி கேட்டண்டை அந்த வாலிபன் நின்று உள்ளே எட்டிப் பார்த்தான். ஒரு இளம் பெண்மணியின் முகம் தெரிந்தது. “ஊதுவத்தி வேண்டுமா, அம்மா! அத்தர் புனுகு சவ்வாது வேண்டுமா? பெனாரீஸ் ஸில்க் வேண்டுமா?” என்று அவ் வாலிபன் கேட்டதற்கு, உள்ளேயிருந்து, “ஒன்றும் வேண்டாம், போ!” என்று ஒரு பெண் குரலில் பதில் வந்தது.

“என்னம்மா, இப்படி ஒரேயடியாய் ஒன்றும் வேண்டாம் என்று சொல்றே? இந்த வீட்டிலேதானே நாளைக்குக் குழந்தைக்குச் சஷ்டி அப்த பூர்த்திக் கலியாணம் என்று சொன்னாங்க?” என்று சொல்லிக்கொண்டே அந்த மார்வாரி இளைஞன், பூட்டப்படாமல் வெறுமே சாத்தியிருந்த வாசல் கேட் இரும்புக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான்.

வீட்டுத் தாழ்வாரத்துக்கும் வெளி கேட்டுக்கும் மத்தியில் இருந்த சுமார் பத்து அடி அகலமுள்ள இடத்தில் ஒரு பன்னீர் மரம், ஒரு மனோரஞ்சிதச் செடி, சில அழகிய வர்ணக் குரோடன்ஸ் செடிகள் ஆகியவை இருந்தன.

வீட்டின் வாசல் திண்ணைக்கு அருகில் ஓர் இளம் பெண்ணும் ஒரு வயதான ஸ்திரீயும் நின்றார்கள். “பார்த்தாயோ இல்லையோ, இவன் சொல்கிறதை! குழந்தைக்கு ஒரு வயது ஆகப்போகிறது; சஷ்டி அப்தபூர்த்திக் கல்யாணமாம்!” என்று சொல்லி விட்டுக் கடகட வென்று சிரித்தாள் அந்த இளம் பெண்.

“திடுதிடுவென்று உள்ளே நுழைந்து வருகிறானே? கேள்வி முறையில்லையா? கதவைப் பூட்டி வைக்க வேண்டும்!” என்றாள் வயதான ஸ்திரீ.

உள்ளே நுழைந்த ஆளோ அவர்களுடைய பேச்சைக் கவனியாதவன் போல், “அரே பாப்ரே! இங்கே இருக்கிற புஷ்பங்களின் வாசனை நம்

முடைய ஊதுவத்தி, அத்தர் சவ்வாது வாசனையைத் தோற்கடித்து விடும் போலிருக்கிறதே!" என்றான்.

பிறகு பெட்டியையும் மூட்டையையும் கொண்டுபோய்த் திண்ணையில் வைத்து "ஏன், அம்மா! நிஜமாக ஊதுவத்தி, அத்தர், புனுகு, சவ்வாது ஒன்றும் வேண்டாமா?" என்று சொல்லிக் கொண்டே பெட்டியைத் திறந்ததும், உள்ளேயிருந்து ஊதுவத்தியின் மணம் கம்மென்று வீசிற்று.

"ஏன், லலிதா! நல்ல ஊதுவத்தியாயிருக்கிறதே! கொஞ்சம் வேணுமானால் வாங்கிவைக்கலாமே?" என்று லலிதாவின் தாயார் சரஸ்வதி அம்மாள் சொன்னாள்.

"ஒன்றும் வேண்டாம்! நீ கொண்டு போ, அப்பா!" என்றாள் லலிதா.

"அப்படி முகத்திலடித்ததுபோல் சொல்லாதே, சின்னம்மா! பெரியம்மா சொல்கிறதைக் கேள்!" என்று ஊதுவத்தி வியாபாரி சொல்லிவிட்டு, சரஸ்வதி அம்மாளைப் பார்த்து, "ஊரிலேயிருந்து கிட்டா வய்யர் வந்திருக்கிறார்களா? அவர்களுடைய மூத்த பிள்ளை கங்காதர ஐயர் வந்திருக்கிறார்களா?" என்றான்.

"ஏது, ஏது! உனக்கு எல்லாரையும் தெரியும்போலிருக்கிறதே! நீ யாரப்பா?" என்று கேட்டாள் சரஸ்வதி அம்மாள்.

"காலம், அப்படி ஆகிவிட்டது! என்ன செய்யலாம்? பெற்ற தாய்க்குப் பிள்ளையை அடையாளம் தெரியாமல் போய்விட்டது!" என்று ஊதுவத்தி வியாபாரி சொல்லிவிட்டுத் தலையில் சுற்றியிருந்த வர்ணக் கோட்டு முண்டாசைக் கையில் எடுத்தான்.

"அம்மா! நம்ம சூரியான்னா?" என்று அலறினாள் லலிதா.

"அட என் கண்ணே!" என்று சொல்லிக் கொண்டு சரஸ்வதி அம்மாள் தன்னுடைய குமாரனைக் கட்டிக் கொண்டாள்.

"ஏன், சூரியா! இது என்ன வேஷம்? சகிக்கவில்லையே?" என்றாள் லலிதா.

"சும்மா உங்களையெல்லாம் ஒரு தமாஷ் செய்யலாம் என்று நினைத்தேன்!" என்றான் சூரியா.

உடனே சரஸ்வதி அம்மாள், "தமாஷாவது, மண்ணாங்கட்டியாவது? அழகாயிருக்கிறது! லலிதாவின் மாமனார் இப்போது கோர்ட்டிலேயிருந்து வந்துவிடுவார். உன்னை இந்தக் கோலத்திலே பார்த்தால் ஏதாவது நினைத்துக் கொள்வார். உன் அப்பா, அண்ணா எல்லாரும் இராத்திரி ரயிலிலே வருகிறார்கள். இந்த வேஷத்தைக் கலைத்துவிட்டு மறு காரியம் பார்!" என்றாள் சரஸ்வதி அம்மாள்.

"ஆகட்டும்! ஆனால் வேஷத்தைக் கலைப்பதற்கு எனக்கு அரைமணி நேரம் தனியாக இருக்கவிடவேண்டும். லலிதா! மேலே உன் அகத்துக்காரர் அறை காலியாகத்தானே இருக்கிறது?" என்று சூரியா கேட்டான்.

லலிதா பதில் சொல்வதற்குள் சரஸ்வதி அம்மாள், "காலியாகத்தான் இருக்கிறது. ஆனால் இந்தப் பெண் அந்த அறையில் யாரும் போவதற்கு விடுவதில்லை. மாப்பிள்ளையின் படத்தை அங்கே மாட்டியிருக்கிறாள். அந்தப் படத்துக்குத் தினம் பூத்தொடுத்து மாலை போடுகிறது இவளுக்கு ஒரு வேலை! சத்தியவானுக்காகச் சாவித்திரிகூட இப்படித் தபசு இருந்திருக்க மாட்டாள்! ஏண்டாப்பா, சூரியா? உனக்குச் சமாசாரம் தெரியுமோ, இல்லையோ?" என்றாள்.

"மாப்பிள்ளை ஜெயிலுக்குப் போயிருக்கிறதைத்தானே சொல்கிறாய்? அது எனக்குத் தெரியாமல் இருக்குமா, அம்மா! ஆனால் பத்திரிகையிலே படித்ததும் ஒரே ஆச்சரியமாகத்தான் இருந்தது. நம்ம பட்டாபி இப்படித் துணிந்து இறங்குவான் என்று நான் நினைக்கவே யில்லை."

"ஆனால் ஒன்று, சூரியா! இவர் மற்றவர்களையெல்லாம் போலக் கோர்ட்டைக் கொளுத்தினார், தண்டவாளத்தைப் பெயர்த்தார், பாலத்தை உடைத்தார் என்றெல்லாம் பெயர் வாங்கிக்கொண்டு ஜெயிலுக்குப் போகவில்லை. போன அக்டோபர் இரண்டாந் தேதி காந்தி மகான் ஜயந்தியில் காந்திஜியைச் சிறையில் வைத்திருப்பதைக் கண்டித்துப் பொதுக் கூட்டத்தில் பேசினார். அதற்காக இவரைப் பிடித்துப் போட்டுவிட்டார்கள்!" என்றாள் லலிதா.

"இந்தக் கஷ்டமெல்லாம் என்னத்திற்காக, எப்போது முடியப் போகிறது என்று தெரியவில்லை. எல்லாம் என்னுடைய துரதிர்ஷ்டந்தான்! நீயானால்

இப்படி அம்மா அப்பாவுக்குப் பிள்ளை யாக இராமல் போய்விட்டாய்! ஊர் ஊராய் அலைந்து கொண்டிருக்கிறாய். லலிதாவை எவ்வளவோ நல்ல இடம் என்று பார்த்துக் கொடுத்தேன். அவளுடைய தலையெழுத்து இப்படி யிருக்கிறது! என்னத்தைச் சொல்ல?" என்று சரஸ்வதி அம்மாள் வருத்தப் பட்டுக்கொண்டு சொன்னாள்.

"நம்ம ராமாயணத்தை அப்புறம் வைத்துக் கொள்ளலாமே, அம்மா! முதலிலே சூரியா அவன் காரியத்தைப் பார்க்கட்டும், எல்லாரும் வருகிறதற் குள்ளே!" என்றாள் லலிதா.

"உன் அகத்துக்காரரின் அறையை இரண்டு நாள் நான் வைத்துக் கொள் ளலாம் அல்லவா, லலிதா?"

"பேஷாக வைத்துக் கொள்ளலாம். நீயும் அவரும் எவ்வளவு சிநேகம் என்று எனக்குத் தெரியாதா? அடிக் கடி உன்னைப்பற்றி அவர் பேசிக் கொண்டிருப்பார். அவருடைய அறை யிலே உனக்கு இல்லாத பாத்தியதை வேறு யாருக்கு?" என்றாள் லலிதா.

சேரி அறையிலிருந்த மச்சுப்படி வழியாகச் சூரியா பெட்டி மூட்டை களைத் தூக்கிக் கொண்டு மேலே போய்ப் பட்டாபிராமனுடைய அறையை ஆக்கிரமித்துக் கொண் டான். அந்த அறை வெகு சுத்தமாக வைக்கப்பட்டிருந்தது. மேஜை, அதன் மேலிருந்த மைக்கூடு, பேனா, புத்தக அலமாரி, கோட் ஸ்டாண்டு எல்லாம் ஒரு தூசி துப்பை இல்லாமலிருந்தது. சுவர் மூலைகளில் ஒரு ஒட்டடை கிடை யாது. ஒரு பக்கச் சுவரில், சரஸ்வதி அம்மாள் சொன்னது போல் பட்டாபி ராமன் படம் காணப்பட்டது. இன் னொரு பக்கச் சுவரில் மகாத்மா காந்தி படம் இருந்தது. இரண்டு படங் களும் அப்போதுதான் தொடுத்துப் போட்ட பூமாலைகளுடன் விளங்கின. மல்லிகைப் பூவின் மணம் அறையில் கம்மென்று நிறைந்திருந்தது.

பின்னோடு தன்னை அறையிலே கொண்டுவிட வந்த லலிதாவைப் பார்த்து, "என்ன லலிதா! மகாத்மா காந்தியையும் உன் அகத்துக்காரரை யும் ஒன்றாக வைத்து விட்டாய்போலி ருக்கிறதே! இனிமேல் உன் புருஷனை யும் 'மகாத்மா பட்டாபிராமன்' என்று அழைக்க வேண்டியதுதான் போலி ருக்கிறது!" என்று பரிகாசமாய்ச் சொன்னான் சூரியா.

"மகாத்மா காந்தி உலகத்திலேயே பெரியவர்; ஆகையால் அவரைப் பூஜிக்கிறேன். உன்னுடைய சிநே கிதர் எனக்குத் தெய்வம். ஆகையால் அவரையும் பூஜை செய்கிறேன்!" என்றாள் லலிதா.

"உன்னுடைய பக்தியை ரொம்பப் பாராட்டுகிறேன், லலிதா! உன் னுடைய மாமியார்கூடச் செத்துப் போய்விட்டாள் போலிருக்கிறது!"

"அவர் கண்ணை மூடி இப்போது இரண்டு வருஷம் ஆகிறது. ஒரு விஷ யத்திற்கு நல்லதுதான். போன வரு ஷத்தில் பிள்ளை ஜெயிலுக்குப் போன தைப் பார்த்திருந்தால் நெஞ்சு உடைந்து போயிருப்பார். என்னுடைய நெஞ்சு கல் நெஞ்சு; அதனால் உயிரோ டிருக்கிறேன். அண்ணா! என் மாமி யாரைப் பற்றி நான் புகார் கூறியதை யெல்லாம் நினைத்தால் எனக்கு இப் போது வெட்கமாயிருக்கிறது. அவ ரைப்போல் உத்தமி இந்த உலகத் திலேயே கிடைக்க மாட்டார். என் பேரில் அவருக்கிருந்த பிரியம் அப்புறந் தான் எனக்குத் தெரியவந்தது. என்னைக் குற்றம் கூறியதெல்லாம் என்னுடைய நன்மைக்காகவே என்று தெரிந்து கொண்டேன். கேள், சூரியா! சாகும்போது என் கையை ஒரு கையால் பிடித்துக் கொண்டே என் மாமியார் செத்துப் போனார். அவருடைய பிள்ளையைப் பற்றிக்கூட அவ்வளவு கவலை காட்டவில்லை."

"உலகமே அப்படித்தான் இருக் கிறது, லலிதா! நாம் ரொம்ப நல்ல வர்கள் என்று எண்ணிக் கொண் டிருப்பவர்கள் பொல்லாதவர்களாகி விடுகிறார்கள். பொல்லாதவர்கள் நல் லவர்களாகி விடுகிறார்கள். உலகத்தின் இயல்பே மாறுதல்தானே? சீதாவின் புருஷன் சௌந்தர ராகவன் இப் படிப்பட்ட மூர்க்கனாவான் என்று யார் எதிர்பார்த்தார்கள்? உன்னுடைய அதிர்ஷ்டக் கட்டையைப் பற்றி அம்மா சொன்னாளே? பட்டாபிக்குக் கொடுக்காமல் சௌந்தரராகவனுக்கு உன்னைக் கலியாணம் செய்துகொடுத் திருந்தால் அப்போது தெரிந்திருக் கும். ஐயோ! சீதா படுகிற கஷ்டத்தை

நினைத்தால் எனக்கு இதயம் வெடித்து விடும் போலிருக்கிறது."

"ஆம், அண்ணா! அதைப் பற்றி நீ எனக்கு விவரமாகச் சொல்ல வேண்டும். டில்லிக்குப் போன புதிதில் எவ்வளவோ உற்சாகமாகக் கடிதம் எழுதியிருந்தான். வரவரக் கடிதம் வருவதே குறைந்து போய்விட்டது. கடைசியாக அவன் எழுதிய கடிதங்கள் ஒரே துக்கமயமாயிருக்கின்றன. குழந்தையைக் கூட மாமியாருடன் மதராஸுக்கு அனுப்பிவிட்டானாமே? எதற்காக?"

"விவரமாகப் பிற்பாடு சொல்கிறேன், லலிதா! மொத்தத்தில் சீதாவின் வாழ்க்கை நரக வாழ்க்கையாகிவிட்டது. உன்னுடைய நிலைமை எவ்வளவோ தேவலை. உன் மாமனார் இப்போது எப்படியிருக்கிறார்?"

"என் மாமனார் என் பேரில் காற்றுப் படக்கூடாது என்கிறார். வீட்டுக்கு நான்தான் இப்போது எஜமானி. இரும்புப் பெட்டிச் சாவிகூட என்னிடந்தான் இப்போது இருக்கிறது. நான் கூட நாளைக்கு ஆண்டு நிறைவுக் கலியாணம் வேண்டாம் என்று சொன்னேன். 'இவர் ஜெயிலில் இருக்கும்போது கலியாணம் எதற்கு?' என்றேன். என் மாமனார்தான் 'அதெல்லாம் கூடாது; வீட்டுக்கு முதல் பிள்ளைக் குழந்தை; கட்டாயம் அப்த பூர்த்திக் கலியாணம் செய்ய வேண்டும்' என்று சொல்லிவிட்டார். அதற்குத் தகுந்தாற்போல் இவரும் சிறைச் சாலையிலிருந்து எழுதியிருந்தார்."

"ஆமாம், லலிதா! எதிர் வீட்டுக்கும் உங்களுக்கும் ஏற்பட்ட மனஸ்தாபம் எப்படியிருக்கிறது? போக்குவரவு நின்றது நின்றதுதானா?"

"இது வரையில் அப்படித்தான்! ஆனால் இரண்டு நாளைக்கு முன்பு இவருடைய சிநேகிதர் அமரநாதனும் அவர் மனைவி சித்ராவும் கல்கத்தாவிலிருந்து வந்திருக்கிறார்கள். நாளைக் காலையில் மாமனாரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு அவர்களைப் போய் அழைத்துவிட்டு வரலாமென்றிருக்கிறேன். எதிர் வீட்டுக்காரர்கள் வராமல் என்ன கலியாணம் வேண்டிக் கிடக்கிறது?" என்றாள் லலிதா.

"அப்படியே செய், லலிதா! கட்டாயம் போய் அவர்களை அழைத்து



விட்டு வா! நான் இன்று ராத்திரியே எதிர் வீட்டுக்குப் போய் வரலாம் என்றிருக்கிறேன். நானும் உன் புருஷனும் அமரநாதனும் எதிர் வீட்டு மொட்டை மாடியில் உட்கார்ந்து எத்தனை நாள் குஷியாகப் பேசிக் கொண்டிருந்திருக்கிறோம், தெரியுமா? அப்படி சிநேகமாயிருந்தவர்கள் திடீரென்று விரோதம் செய்துகொள்ள எப்படித்தான் முடிந்ததோ, தெரியவில்லை!"

"இவருக்கு அந்த விஷயம் ஒன்றும் பிடிக்கவேயில்லை, சூரியா! எல்லாம் கிழவர்கள் செய்த வேலை. தகப்பனாரிடம் உள்ள பக்தியினாலேதான் இவர் சும்மா இருந்தார்!"

இந்தச் சமயத்தில் குண்டுப் பயல்,—இப்போது நன்றாய் வளர்ந்து வாலிபப் பருவத்தை அடைந்திருந்தவன்,—தடதடவென்று மாடிப்படி ஏறி வந்தான்.

"சூரியா வந்திருக்கிறானாமே? எங்கே?" என்று கேட்டுக் கொண்டே இரைக்க இரைக்க ஓடிவந்தவன்,



சூரியாவைப் பார்த்துத் திகைத்து நின்று "ஐயையோ! இவனா சூரியா? மூஞ்சியிலே மீசை வைத்துக் கொண்டிருக்கிறானே?" என்றான்.

"சுண்டு! என் மீசை உனக்குப் பிடிக்க வில்லையா? அப்படியானால் அதை எடுத்தெறிந்துவிட்டு மறு காரியம் பார்க்கிறேன்!" என்று சொல்லி விட்டுச் சூரியா முகக்ஷவரம் செய்து கொள்ள ஆரம்பித்தான். வடநாட்டு உடையைக் களைந்து தெறிந்துவிட்டு, கதர் வேஷ்டி, கதர் ஜிப்பா, கதர்க் குல்லா இவற்றை அணிந்ததும் பழைய சூரியாவாகக் காட்சி அளித்தான்.

இரண்டாம் அத்தியாயம்

"ஜப்பான் வரட்டும்!"

அன்றிரவு சுமார் எட்டு மணிக்குச் சூரியா எதிர் வீட்டுக்குப் போகலாமென்று புறப்பட்டுச் சென்றபோது அவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தவன்போல் வீட்டு வாசலில் அமரநாத் நின்று கொண்டிருந்தான்.

"வருக! வருக! சுதந்திர வீரர் சூரியாவின் வரவு நல்வரவாகுக!" என்று தமாஷ் செய்துகொண்டே சூரியாவின் கைகளைப் பிடித்து வீட்டுக்குள் அழைத்துப் போனான் அமரநாத்.

கூடத்தில் போட்டிருந்த ஸோபாக்கள் ஒன்றில் உட்கார்ந்து வர்ண நூலினால் பூவேலை செய்து கொண்டிருந்தான் ஒரு பெண். இவர்கள் உள்ளே வந்ததும் அவள் எழுந்தான்.

அமரநாத் அவளைப் பார்த்து, "என் அருமை நண்பன் சூரியாவை மனமகிழ்ச்சியுடன் உனக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். சூரியா! இவன்தான் என்னை மணம் புரிந்த பாக்கியசாலி சித்ரா. பெயர் சித்ராவாக இருப்

பதற்கேற்பச் சித்திரக் கலையில் மிகத் தேர்ந்தவன். அணில் போட்டால் கிட்டத்தட்ட ஆடுமாதிரி இருக்கும்!" என்று சொன்னான்.

சூரியா சிரித்துக்கொண்டே "ஆடு போட்டால் எப்படி யிருக்கும்?" என்று கேட்டான்.

சித்ரா பளிச்சென்று, "ஆடு போட்டால் அமரநாத் மாதிரி இருக்கும்!" என்று கூறினாள்.

"பார்த்தாயா, சூரியா? இதிலிருந்து என்ன ஏற்படுகிறது? இந்த மாதரசியின் இதய கமலத்தில் எப்போதும் எழுந்தருளி யிருப்பது இந்த அமரநாத் என்று தெரிகிற தல்லவா? ஆகா! என்னைப்போன்ற பாக்கியசாலி யார்?" என்றான் அமரநாத்.

"வீடு கிடைப்பதுதான் இந்தக் காலத்தில் கஷ்டமா யிருக்கிறது. ஒருவருடைய இதய கமலத்தில் ஒருவர் குடியிருக்கிறது என்று வைத்துக் கொண்டால் எவ்வளவோ சௌகரியமா யிருக்கும்!" என்றாள் சித்ரா.

இந்தத் தம்பதிகளின் அன்யோன்ய உல்லாசப் பேச்சைக் கேட்ட சூரியா "புருஷன் மனைவி என்று இருந்தால் இப்படியல்லவா இருக்க வேண்டும்?" என்று எண்ணிக் கொண்டான்.

வெளிப்படையாக, "அமரநாத்! உங்கள் மனைவியைப்பற்றி லலிதா வர்ணித்திருந்த தெல்லாம் சரிதான்!" என்று சொன்னான்.

"லலிதா என்பது யார்?" என்று சித்ரா ஒரு கேள்வி போட்டாள்.

"இதென்ன, இப்படிக் கேட்கிறீர்கள்? உங்களுக்கு எதிர் வீட்டில் இருக்கும் என்னுடைய சகோதரி லலிதாவைச் சொல்கிறேன்!"

"ஓகோ! எங்கள் சத்துரு வீட்டு நாட்டுப் பெண்ணையா? நான் அவளைப் பார்த்தே நாலு வருஷம் ஆயிற்றே! என்னைப் பற்றி அவள் என்ன வர்ணித்திருக்க முடியும்?" என்று கேட்டாள் சித்ரா.

"நாலு வருஷத்துக்கு முன்னால் எழுதி யிருந்ததைத்தான் சொல்கிறேன். அவளும் தாங்களும் ரொம்ப சிநேகிதம் என்று எழுதியிருந்தாள்."

"சிநேகமும் இல்லை, ஒன்றுமில்லை. நாங்கள் ஜன்ம விரோதிகள் அல்லவா?"

இதற்குள் அமரநாத், "சூரியா! முனிசிபல் எலெக்ஷன் விஷயமாக இந்த இரண்டு வீட்டுக்கும் கொஞ்சம் மனஸ்தாபம் ஏற்பட்டதல்லவா? அது விஷயத்தில் இவளுக்கு ரொம்பக் கோபம். அந்தக் கோபத்தை இப்படிக் காட்டுகிறாள்!" என்றான்.

"எனக்குக் கோபம் ஒன்றுமில்லை. மனிதர்கள் இப்படி மூடர்களா யிருக்கிறார்களே என்று பரிதாபந்தான். மொத்தத்தில் நமது தமிழ்நாட்டு ஜனங்கள் வாழத் தெரியாதவர்கள். வாழும் வகை தெரியவேண்டுமானால் கல்கத்தாவுக்குப் போய் வங்காளிகளுக்கு மத்தியில் இரண்டு வருஷமாவது இருந்துவிட்டு வரவேண்டும்!" என்றாள் சித்ரா.

"நான் அதை ஒப்புக்கொள்ள மாட்டேன். தமிழர்கள் மற்றவர்களிடம் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன இருக்க முடியும்?" என்றான் சூரியா.

"இதைக் கேள், சூரியா! எலெக்ஷன் சண்டைக்குப் பிறகு இவளை இங்கே வைத்துக் கொண்டு காலட்சேபம் செய்ய முடியாது என்றுதான் முக்கியமாக நான் கல்கத்தாவுக்குப் போனேன். போன பிறகு, ஏண்டா அப்பா போனோம் என்று இருக்கிறது. இவளுக்கு வங்காளி நாகரிகத்தில் அத்தனை மோகம் பிறந்துவிட்டது. அதுவும், நேதாஜி சுபாஷ் மலாய் நாட்டில் சுதந்திர இந்திய சர்க்காரை ஸ்தாபித்திருக்கிறார் என்று தெரிந்த பிறகு இவளுக்கு ஒன்றுமே தலைகால் புரியவில்லை. ஆகாச விமானம் ஒன்று கிடைத்தால் என்னை இவள் பரிதவிக்க விட்டு நேதாஜி போஸிடம் பறந்து போய்விடுவாள்!" என்றான் அமரநாத்.

இந்தச் சமயத்தில் வாசலில் ஆள் வரும் சத்தம் கேட்கவே, சித்ரா, "மாமனார் வருகிறார் போலிருக்கிறது!" என்று சொல்லிக் கொண்டே எழுந்தாள். சூரியாவைப் பார்த்து, "என் ஜன்ம விரோதியிடம் நான் அவளுக்கு எச்சரிக்கை செய்ததாகச் சொல்லுங்கள். நாளைக்கு ஆண்டு நிறைவு நடக்கட்டும் என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதற்குப் பிறகு என்ன செய்வேனோ, இப்போது சொல்ல முடியாது!" என்று சொல்லிவிட்டு மச்சுப்படி ஏறத் தொடங்கினாள்.

"நாளை ஆண்டு நிறைவுக்கு உங்களை வந்து லலிதா அழைப்பாள்! அவசியம் வரவேண்டும்" என்றான் சூரியா.

தாமோதரம் பிள்ளை உள்ளே வந்ததும், இளைஞர்கள் இருவரும் எழுந்து நின்றார்கள். "அப்பா! யார் பார்த்தீர்களா? அடையாளம் தெரிகிறதா?" என்று அமரநாத் கேட்டான்.

"ஓகோ! நம்ம சூரியா போலிருக்கிறதே? ஒருவேளை தவறாய்ச் சொல்கிறேனோ? கண் அவ்வளவு துல்லியமாக இல்லை. வயதாகிவிட்டதல்லவா?" என்றார் தாமோதரம் பிள்ளை.

"சூரியாதான், அப்பா! சூரியாவேதான்!" என்றான் அமரநாத்.

"நமஸ்காரம்" என்றான் சூரியா.

தாமோதரம் பிள்ளை அவருடைய ஆபீஸ் அறைக்குப் போய் விடுவார் என்று அமரநாத் நினைத்ததற்குமாறாக அங்கிருந்த சோபாவில் உட்கார்ந்தார். வாலிபர்கள் இருவரும் உட்கார்ந்த பிறகு சூரியாவை அவர் மறுபடியும் உற்றுப் பார்த்தார்.

"ஆமாம், சூரியாதான்! என்ன ஓய்! சூரியநாராயண ஐயரே! நீர் எங்கேயோ ஆப்கானிஸ்தானத்தில் இருக்கிறதாகச் சொன்னார்கள்;— மாஸ்கோவில் பார்த்ததாகச் சொன்னார்கள்;— அப்புறம் ஸைகானுக்கு வந்துவிட்டதாகச் சொன்னார்கள்;— நீர் என்ன கடைசியில் நம்ம ஊரிலே இருக்கிறீரே? இந்தியாவின் சுதந்திரம் எந்தமட்டில் இருக்கிறது? எங்கே கொண்டுவந்து நிறுத்தி வைத்திருக்கிறீர்?" என்றார்.

"மாமா! என்னைப் பற்றி இவ்வளவு தூரம் ஞாபகம் வைத்துக்கொண்டு எந்த நாட்டுக்குப் போயிருக்கிறேன் என்றெல்லாம் விசாரித்து வைத்திருக்கிறீர்களே? அதற்காகச் சந்தோஷம். ஆனால் நான் எந்த அயல்நாட்டுக்கும் போகவில்லை. இந்தியாவின் சுதந்திரம் இந்தியாவிலேதான் இருக்கிறது. இந்தியாவின் சுதந்திரத்துக்காக ஆப்கானிஸ்தானத்துக்கு ஏன் போகவேண்டும்?" என்றான் சூரியா.

"அப்படிச் சொல்லாதேயும், ஓய் சூரியநாராயண ஐயரே! நேதாஜி போஸ் மலாய் நாட்டிலேதானே சுதந்திர இந்திய சர்க்காரை ஸ்தாபித்திருக்கிறாராம்? அப்புறம், ஜயப்பிரகாச நாராயணன் நேபாளத்திலோ திபேத்திலோ இந்தியாவின் சுதந்திரத்தை ஸ்தாபித்திருப்பதாகச் சொல்கிறார்கள்! அதெல்லாம் பொய்யா?"

"அப்பா! உண்மையில் இந்தியாவின் சுதந்திரம் ஆமத்நகர் சிறைச்சாலையில் காந்தி மகாத்மா, நேருஜீ முதலிய தலைவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு வருகிறது!" என்றான் அமரநாத்.

"சூரிய நாராயண ஐயரே! அமரநாத் சொல்வதை நீர் ஒத்துக் கொள்கிறீரா?" என்றார் தாமோதரம் பிள்ளை.

"மாமா! என்னைச் சூரியா என்று அழைத்தால்தான் இனிமேல் பதில் சொல்வேன். சூரியநாராயண ஐயரே என்றால் பதில் சொல்ல மாட்டேன்."

"சரி அப்பா, சூரியா! இப்போது சொல்லு! இந்தியாவுக்குச் சுதந்திரம் எந்த வழி மூலமாக வரப்போகிறதென்று நினைக்கிறாய்?" என்று தாமோதரம் பிள்ளை கேட்டார்.

"சொல்ல முடியாது, மாமா! எந்த வழியினாலும் வரும்; எல்லா வழியினாலும் வரும். ஆனால் வரும்போது அதைக் கைப்பற்ற ஜனங்கள் தயாராயிருக்க வேண்டும். இதற்கு நம்முடைய ஜனங்களைத் தயார் செய்வதுதான் இப்போது நாம் செய்ய வேண்டிய முக்கியமான வேலை......"

"சுதந்திரத்துக்கு நம்முடைய ஜனங்களைத் தயார் செய்கிறதா? சூரியா! அது ஒருநாளும் முடியாத காரியம். நம்முடைய ஜனங்களைச் சுதந்திரத்துக்குத் தயார் செய்ய வேண்டுமானால் அதற்கு வழி என்ன தெரியுமா? ஜப்பான்காரன் படையெடுத்து வந்து இந்தியாவைப் பிடித்து ஒரு பத்து வருஷம் 'டிக்டேடர்ஷிப்' ஆட்சி நடத்த வேண்டும். ஹிட்லர் வந்தால் கூடப் போதாது; நம்ம ஜனங்களுக்கு ஜப்பான்காரன்தான் சரி. அவன் வந்து உச்சிக்குடுமிகளையெல்லாம் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கிச் சாதி வித்தியாசம், மத வித்தியாசம் எல்லாவற்றையும் அடியோடு ஒழிக்க வேண்டும். அரிசியும் பருப்பும் சாப்பிட்டு ஏப்பம் விட்டுக் கொண்டிருப்பவர்களையெல்லாம் சவுக்கினால் நாலு அடி அடித்து மாமிசமும் மீனும் சாப்பிடச் செய்ய வேண்டும்; பத்து வருஷம் இப்படி ஜப்பானிய ஆட்சியிலே இருந்தால் இந்தியா சுதந்திரத்துக்கு லாயக்காகும்! என்ன சொல்கிறாய், சூரியா!"

"நான் அதை ஒப்பவில்லை. ஜப்பான் ஆட்சியில் பத்து வருஷம் இருந்தால், அதற்குப் பிறகு இன்னும் 140 வருஷம்

ஜப்பான் ஆட்சியிலே இருக்க நேரிடும். ஆனால் ஜப்பானியர்கள் அவ்வளவு மூடர்கள் என நான் நினைக்கவில்லை. இந்தியாவைக் கைப்பற்றி அரசாளலாம் என்று அவர்கள் எண்ண மாட்டார்கள். ஏற்கெனவே சைனாவில் அவர்கள் அகலக் காலை வைத்து விட்டுத் திண்டாடுகிறார்களே! அந்தப் பாடத்தை மறந்துவிட முடியுமா? இந்தியாவைத் தாங்கள் ஜயிப்பதற்குப் பதிலாக, நேதாஜி சுபாஷ் போஸுக்கு உதவி செய்து அவரைக் கொண்டு இந்தியாவின் சுதந்திரத்தை நிலைநாட்டவே பார்ப்பார்கள். இந்தியாவை ஜயித்து ஆள்வதைக் காட்டிலும் இந்தியாவைச் சிநேகமாக வைத்துக்கொள்வதுதான் ஜப்பானுக்கு அநுகூலம்"

"ஜப்பானுக்கு எது அநுகூலம் என்று உமக்குத் தெரிந்திருக்கிறது, ஓய்! அது ஜப்பானுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே? நாய் குரைத்ததைப் பார்த்து ஒருவன் பயப்பட்டானாம். 'குரைக்கிற நாய் கடிக்காது என்கிற பழமொழி தெரியாதா?' என்று இன்னொருவன் சொன்னானாம். 'பழமொழி எனக்குத் தெரியும்; ஆனால் அந்த நாய்க்குத் தெரிந்திருக்க வேண்டுமே!' என்றானாம் பயந்த பேர்வழி. அந்த மாதிரி ஜப்பான் நேதாஜிக்கு உதவி செய்வதின் அநுகூலத்தை உணர்ந்திருக்க வேண்டுமே?"

"நேதாஜியின் படையில் இதுவரை ஐம்பதினாயிரம் வீரர்கள் சேர்ந்திருக்கிறார்களாம். ஜப்பான்தான் ஆயுதம் கொடுத்து உதவியிருக்கிறதாம்!" என்றான் அமரநாத்.

"ஐம்பதினாயிரம் வீரர்கள் என்றால் அவ்வளவு அதிகமா? அவர்களைக் கொண்டு இந்தியா தேசத்தையே பிடித்துவிட முடியுமோ!" என்றார் தாமோதரம் பிள்ளை.

"நேதாஜி ஐம்பதினாயிரம் பேரோடு வந்தால் இந்தியாவில் அவருடன் சேர்வதற்கு ஐம்பது லட்சம் பேர் காத்திருக்கிறார்கள்!" என்றான் சூரியா.

"வங்காளத்தில் மட்டுமே ஐம்பது லட்சம் பேர் சேர்வார்கள். கல்கத்தாவெல்லாம் ஓயாமல் இதைப் பற்றிய பேச்சாகவே இருக்கிறது" என்றான் அமரநாத்.

"ஐம்பது லட்சம் பேர் சேரட்டும்; ஐந்து கோடிப் பேர் வேணுமானாலும் சேரட்டும். நேதாஜி புது டில்லிக்கு வந்து சக்கரவர்த்தியாக முடி சூட்டிக் கொள்ளட்டும். நான் குறுக்கே நிற்கவில்லை. ஆனால் அரசனை நம்பிப் புருஷனைக் கைவிடுகிற காரியம் மட்டும் உதவாது. நேதாஜி எப்போதோ வரப்போகிறார் என்பதற்காக இப்போது இங்கே சில தறுதலைகள் 'ஸாபொடாஷ்' வேலையில் இறங்கியிருக்கிறார்களே, அது சுத்த மூட்டாள்தனம். ஜப்பான் வருகிற வரையில் காத்திருப்பதுதானே! அதற்குள்ளே ரயிலைக் கவிழ்க்கிறேன், பாலத்தை உடைக்கிறேன் என்று ஆரம்பிக்கிறார்களே! இவர்களுக்குச் செம்மையாய்ப் பாடம் கற்பிக்கவேண்டும்..."

"அப்பா! பிரான்ஸு தேசம் இப்போது ஹிட்லர் ஆட்சியில் இருக்கிறதல்லவா? இரகசிய பிரஞ்சு தேசபக்தர் ஸ்தாபனங்கள் ரயிலைக் கவிழ்ப்பது, பாலத்தை உடைப்பது முதலிய காரியங்களைத்தான் செய்கின்றன. அந்தக் காரியங்களைப் பிரிட்டிஷார் ஓரேயடியாகப் புகழ்கிறார்களே!"

"பிரஞ்சுக்காரர்கள் பரம முட்டாள்கள். இல்லாவிட்டால் ஹிட்லரிடம் இப்படித் தோல்வியடைவார்களா? பிரிட்டிஷார் சுய காரியப் புலிகள்; தங்களுக்கு ஒரு நியாயம், மற்றவர்களுக்கு ஒரு நியாயம் பேசுவார்கள். என்னுடைய அபிப்பிராயத்தை நான் சொல்கிறேன். 'ஸாபொடாஷ்' வேலைகள் அரசாங்கத் துரோகம் மட்டுமல்ல; பொதுஜனத் துரோகம். நான் ஜட்ஜாயிருந்தால் அப்படிப்பட்ட காரியம் செய்பவர்களுக்கு மரண தண்டனையே விதிப்பேன்."

இவ்விதம் தாமோதரம் பிள்ளை சொல்லி வந்தபோது சூரியாவின் முகத்தில் ஒரு மாறுதல் காணப்பட்டது. மலர்ந்திருந்த அவன் முகம் சட்டென்று சுருங்கிற்று. இந்த மாறுதலை அமரநாத் கவனித்தான். அமரநாத் கவனித்தான் என்பதைச் சூரியாவும் தெரிந்து கொண்டான். தெரிந்துகொண்டதும் அமரநாத்தின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். சூரியாவின் கண்கள் ஏதோ ஒரு உறுதியை அமரநாத்திடம் எதிர்பார்த்ததாகத் தோன்றியது. அமரநாத்தின் கண்கள் அந்த உறுதியைச் சூரியாவுக்கு அளித்தன.

வாங்கிப் படியுங்கள்!

சிறு கதை

(மாத மிருமுறை)

கௌரவ ஆசிரியர்: எஸ். சுப்ரமணியம் M. A.

காரசாரமான தலையங்கம், ரஸமான சிறு கதைகள், திரை விமர்சனங்கள் சிறுவர் பகுதி முதலிய முக்கிய அம்சங்கள் நிறைந்தது

*

தனிப் பிரதி

உள் நாடு: 3 அணா — வெளி நாடு: 4 அணா

சந்தா விவரம்:

	ஆறு மாதம்		ஒரு வருடம்
உள் நாடு:	ரூ. 2—4—0	...	ரூ. 4—8—0
வெளி நாடு:	ரூ. 3—0—0	...	ரூ. 6—0—0

ஏஜண்டுகளில்லாத இடங்களில் டிபாஸிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை

*

விவரங்களுக்கு:

மானேஜர்: சிறு கதை காரியாலயம்
வேப்பேரி :: சென்னை - 7

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மதுரை - தூத்துக்குடி - அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள். நம்பர் 80 வரை நூல்கள்.

எங்களுடைய விசேஷமான நூல்கள்: ஒத்தை நூல், இரட்டை நூல் பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக்கேற்றிய நூல்.

நாங்கள் சப்ளை செய்வது: கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள் கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள். எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப் போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை. நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

மானேஜர்கள்: ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

பாங்கர் விநாயகராவ்

ஏறக்குறையப் பதினெட்டு வருஷங்களுக்கு முன்பு தமிழ்ப் பத்திரிகையுலகத்தில் ஓர் அபூர்வ சம்பவம் நிகழ்ந்தது.

தலைவர் ராஜாஜி மதுவிலக்குக்காக ஒரு மாதப் பத்திரிகை நடத்துவதென்று முடிவு செய்தார். இதைக் கேட்டுப் பலருக்கும் வியப்பு உண்டாயிற்று.

“மதுவிலக்குக்காக ஒரு தனிப் பத்திரிகையா? அப்படியும் ஒரு பத்திரிகை நடத்த முடியுமா?” என்று அவர்கள் சந்தேகப்பட்டார்கள்.

“நடத்த முடியும்; நடத்திக் காட்டுகிறேன்” என்றார் ராஜாஜி.

அந்தக் காலத்திலே ஆயிரத்துக்கு மேல் சந்தாதார்கள் கொண்ட தமிழ் வாரப் பத்திரிகையையோ மாதப் பத்திரிகையையோ காண்பது மிகவும் அபூர்வம். ஸ்ரீ வ. வெ. சு. ஐயர் அருமையாக நடத்திவந்த ‘பால பாரதி’க்கு எண்ணூறு சந்தாதார்களுக்கு மேலே கிடையாதாம். அறிஞர் மாதவய்யா நடத்திய ‘பஞ்சாமிர்த’த்துக்கு ஐந்நூறு சந்தாதார்கள்கூடக் கிடையாதாம். ஆனால், மதுவிலக்கைப் பற்றியே ஆரம்பம் முதல் கடைசிவரை எழுதப்பட்டு வந்த ‘விமோசனம்’ ஆரம்பமாகி ஒன்பது இதழ்களுக்குள்ளே நாலாயிரம் பிரதிகள் விற்கக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டதாம். இதைத் தமிழ்ப் பத்திரிகை உலகில் அபூர்வ சம்பவம் என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்லுவது?

‘விமோசனம்’ அப்படி அபூர்வ வெற்றியடைந்ததற்குக் காரணம், ராஜாஜி அதை வெறும் மதுவிலக்குப் பிரசாரப் பத்திரிகையாக நடத்தாமல் மதுவிலக்குக் கலைப் பத்திரிகையாக நடத்தி வந்ததேயாகும்.

‘விமோசன’த்தில் வெளிவந்த ஒவ்வொரு விஷயமும் எல்லோரும் படிக்கத்தக்க முறையில் வெகு ரசமாக எழுதப்பட்டு வந்தது. அதில் வெளிவந்த கதைகள் யாவும் மதுவிலக்கை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டவைதான். ஆனால் அவற்றைப் படிக்கும்போது, மதுவிலக்குப் பிரசாரத்துக்காக எழுதப்பட்டவை என்று தோன்றவே தோன்றாது. கதைகளின் சுவைக்காக எழுதிய கதைகளாகவே தோன்றும்.

தமிழ்ப் பண்ணைக்காரர்கள் மேற்படி “விமோசன”த்தின் பழைய இதழ்களைத் தேடிக் கண்டுபிடித்து, அவற்றில் வெளியான மதுவிலக்குக் கதைகளைப் புத்தகமாக வெளிக்கொண்டு வந்திருக்கிறார்கள். நம்முடைய மாகாணத்தில் பூரண மதுவிலக்கு அமுலுக்கு வந்திருக்கும் இந்தச் சமயத்தில் இந்தப் புத்தகத்தைக் கொண்டு வந்திருப்பது ஒரு நல்ல தொண்டாகும்.

சட்டசபையில் மதுவிலக்குத் தீர்மானத்தை எதிர்த்து இறுமாப்புடன் ஓட்டளித்த பாங்கர் விநாயகராவ், கடைசியில் தன் மகனே மதுவுண்டு மோட்டார் விபத்துக்குள்ளாவதைக் கேட்டு மூர்ச்சையாவதைப் படிக்கும்போது “பேஷ், உமக்கு நன்றாக வேண்டும், ஐயா!” என்று சொல்ல வேண்டும் போலத் தோன்றுகிறது. ‘அரசூர்ப் பஞ்சாயத்து’ என்ற கதை, படிப்பவர்கள் மனதை விட்டு என்றும் அகலவே அகலாது. அக்கரைச் சீமைக்குப் போய்ப் பணம் சம்பாதித்து வருவதாகச் சொல்லி விட்டுப் போன சந்திரகாக, அங்கே குடி வலையில் விழுந்து கெட்டுப்போய், கடைசியில் மனைவி மக்களைப் பார்ப்பதற்காக ஊருக்குத் திரும்பி வருகிறான். ஆனால் அவன் மனைவி மக்களையா காண்கிறான்? இல்லை; வீடு இருந்த இடத்தில் குப்பை மேட்டைக் கண்டான். ஒரு நிமிஷம் நம்முடைய மனம் ‘பகீர்’ என்கிறது. கண்ணில் நீர் கூடத் ததும்பிவிடுகிறது. ஆஹா, அந்தப் பேதைப் பெண் அமிர்தம் கடைசியில் ஆற்றில் விழுந்து செத்துப் போகிறாள்! தமிழ் நாட்டிலே அமிர்தம் ஒருத்திதானா குடியர்களுடைய கொடுமையால் அந்த மாதிரி செத்துப் போனாள்?

இதயத்தைத் தொட்டு, மனதிலே பெரும் கிளர்ச்சியை உண்டாக்கக் கூடிய இத்தகைய கதைகளை வெறும் மதுவிலக்குக் கதைகள் என்று எப்படிச் சொல்ல முடியும்? இவை சிறந்த கலைச்சுவையுடனும் இலக்கிய ரசனையுடனும் எழுதப்பட்ட அபூர்வமான கதைகள். என்றும் எப்போதும் படிக்கத்தக்க இலக்கியம். நூற்றுக்கணக்கான மேடைகளிலே மதுவிலக்கைப் பற்றிப் பிரசாரம் செய்வதால் கிடைக்கும் பலனைவிட இத்தகைய கதைப் புத்தகம் ஒன்று எவ்வளவோ பலனளிக்கக் கூடியது. விலை ரூ. 1—8—0. கிடைக்குமிடம்:—தமிழ்ப் பண்ணை, தியாகராயநகர், சென்னை.



படிப்பது இராமாயணம்...!

ரஜனி

கொழும்பு, 15.

சீமைக்குப் போயிருந்த இலங்கைப் பிரதமர் ஸ்ரீ சேனநாயகா இப்பொழுது திரும்பி வந்து சேர்ந்துவிட்டபடியால், இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையில் தேங்காய்—கொப்பரை சம்பந்தமான ராஜிப் பேச்சுகள் மறுபடியும் நடக்கப் போகின்றனவாம். இந்தப் பேச்சுகள் நேருக்கு நேராக நடக்காமல் கடித மூலமாகவே நடக்குமென்று தெரிகிறது. சில வாரங்களுக்கு முன்னால் இந்திய மந்திரி சபைக் காரியதரிசியான ஸ்ரீ தர்மவீரா கொழும்புக்கு வந்து பேச்சுகள் நடத்தியபொழுது பாகிஸ்தானைப் போலவே இந்திய யூனியனையும் நடத்த இலங்கை தயாரா யிராததால் தான் பேச்சுகள் முறிந்து போயின. இப்பொழுதும்கூட இலங்கை அரசாங்கம் ஒரு கண்ணில் வெண்ணெயும் இன்னொரு கண்ணில் சுண்ணாம்பும் என்ற தோரணையில் நடந்துகொள்ளும் வரை இரு நாடுகளுக்கும் கொப்பரை உடன்படிக்கை ஏற்படுவதற்கில்லை.


துறைமுகங்களைத் திறக்க ஆட்சேபனை

கொழும்புக்கும்-தூத்துக்குடிக்கு மிடையில் ஒரு இந்தியக் கப்பல் கம்பெனி பிரயாணப் போக்குவரத்தை ஜனவரி முதல் தேதியிலிருந்து நடத்தப் போவதாக முன்னர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் வேதாரண்யத்துக்குப் பக்கத்திலுள்ள கோடிக்கரைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் பிரயாணக் கப்பல் போக்குவரத்து நடத்த சென்னை அரசாங்கம் முயற்சி செய்து கொண்டிருப்பதாய் மந்திரி கனம் பக்தவத்ஸலம் சில தினங்களுக்கு முன் அறிவித்திருக்கிறார். தூர்ந்து போன பழைய துறைமுகங்களைப் புனருத்தாரணம் செய்வது வர்த்தகத்தைப் பெருக்க உதவியா யிருக்குமென்பது உண்மையென்றாலும், சென்னை அரசாங்கத்தைப் போலவே இலங்கை அரசாங்கமும் நினைக்க வேண்டுமே!

யாழ்ப்பாணத் துறைமுகங்களை மறுபடியும் போக்குவரத்துக்குத் திறந்தால் சிங்களவர் வாழும் தென் இலங்கையின் வர்த்தக சுபிட்சம் வட இலங்கைத் தமிழர்களுக்குப் போய் விடுமே என்று சிங்களவ மந்திரிகள் நினைக்கிறார்கள். யாழ்ப்பாணத் துறைமுகங்களை மறுபடியும் திறக்க வேண்டுமென்று பார்லிமெண்டில் ஒரு தமிழ் மெம்பர் சில மாதங்களுக்கு முன் வற்புறுத்திய பொழுது சிங்களவ மந்திரி ஸர் ஜான் கொத்தலாவலை பல சாக்குப் போக்குகள் கூறி, திறக்க முடியாதென்று மறுத்து விட்டார். இந்த நிலைமையில் கனம் பக்தவத்ஸலத்தின் கோடிக்கரைத் திட்டம் இந்தியக் கரையோரக் கப்பல் போக்குவரத்துக்கு உபயோகப்படலாமே தவிர இலங்கையுடன் வியாபாரம், பிரயாணப் போக்குவரத்தை நடத்தப் பயன்படுமா என்பது சந்தேகமே. படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமான் கோயில் என்பதற்கிணங்க அரசியல் தத்துவம் பேசும் சிங்களவ அதிகார வர்க்கம், ஒரு காலத்தில் சுபிட்சத்துடனிருந்த யாழ்ப்பாணத்தின் வயிற்றிலடித்து அதன் துறைமுகங்களை மூடிவிட்டது. தர்ம நியாயமான பிரஜா உரிமையையே மறுக்கும் அவர்கள் மூடிய துறைமுகங்களைத் திறக்கவோ, பரஸ்பரம் வர்த்தக வசதிகளுக்கு இணங்கவோ முற்படுவார்களா?

பேச்சு மூச்சைக் காணோம்!

நவம்பர் 23-ம் தேதி இலங்கைப் பார்லிமெண்டு சபை கூடும்பொழுது இந்தியர் பிரஜாவுரிமைச் சட்டத்தைப் பிரதமர் சேனநாயகா கொண்டு வருவாரென்று கூறப்பட்டது. ஆனால் அந்த மசோதாவைப் பற்றி இதுவரையில் பேச்சு மூச்சைக் காணோம். பார்லிமெண்டுக்கு வரும் முக்கியமான மசோதாக்களை இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்பே பிரசுரம் செய்வது தான் பார்லிமெண்டரி சம்பிரதாயம். இதை மீறி முன்பு இரண்டு மசோதாக்களை மந்திரி சபையினர் பார்லிமெண்டுக்குக் கொண்டு வந்தனர். அது போலத்தான் இந்தியர் பிரஜா உரிமைச் சட்டத்தையும் கொண்டு வரப்போகிறார்கள் போலிருக்கிறது. இது ஒரு புறமிருக்க, ஏற்கனவே சட்டமாகிய இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டமும் குடியேற்றச் சட்டமும் அமுலுக்கு வர இன்னும் ஐந்தாறு மாதங்கள் ஆகலாம்.



இலையுதிர்காலம்

[illegible]



[illegible]

யாருக்குப் பிராக்கி?

விந்தன்

"அம்மா!"

"யார், அது?"

"ஐயா இருக்கிறாங்களா, அம்மா?"

"இருக்கிறார்; என்ன சமாசாரம்?"

"ஒண்ணுமில்லே; அவரைக் கொஞ்சம் பார்க்கணும்."

"ரொம்பப் பார்க்க வேண்டிய இல்லையோ!—ஆமாம், ஒண்ணுமில்லாததற்கு அவரைப் பார்ப்பானேன்?"

"இல்லே, அம்மா! வந்து......"

"என்னத்தை வந்து......? ஐயாவைப் பார்ப்பதற்கு வேளை காலம் ஒன்றுமே கிடையாதா? நினைத்த நேரத்திலெல்லாம் பார்க்க வந்துவிட வேண்டியது தானா? இந்தக் கொட்டும் மழையிலே எப்படித்தான் நீங்கள் வந்து இப்படிக் கழுத்தை அறுக்கிறீர்களோ, தெரியவில்லையே!"

இந்தச் சமயத்தில் புதிதாகச் சேர்ந்த ஒரு பெரிய மனிதருடன் சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்த 'ஐயா', "என்னடி, அது? இப்படி உள்ளே வா!" என்று தம்முடைய தர்மபத்தினியை அழைத்தார்.

"அது என்ன எழவோ! இங்கே வந்து பாருங்கள்! அசல் தரித்திரங்களா ஒட்டு வந்து நிற்கிறதுகள்!" என்று சொல்லிக்கொண்டே 'அம்மா' உள்ளே சென்றாள்.

இன்னொரு சமயம் வந்து தம்மைப் பார்க்கும்படி அந்தப் பெரிய மனிதரிடம் சொல்லிவிட்டு 'ஐயா' எழுந்து வெளியே வந்தார், 'அம்மா' சொன்னபடி அங்கே ஒட்டு 'அசல் தரித்திரங்கள்' தங்கள் தங்கள் மனைவி மக்களுடன் தலைவிரி கோலமாக வந்து நின்றுகொண்டிருந்தன.

"என்னடா, இது? நீங்கள் யார்? என்ன சேதி?" என்று வெளியே வந்த 'ஐயா' அதிகாரத் தோரணையுடன் இரைந்து கேட்டார்.

"சாமி! நாங்க செம்படவனுங்க! சமுத்திரக் கரையோரமா ஆளுக்கொரு குடிசை போட்டுக்கிட்டு எங்க தொழிலைச் செஞ்சிக்கிட்டு இருந்தோம். அந்தக் குடிசைகள் இருக்கிறது சமுத்திரக் கரையின் அழகைக் கெடுக்குதாம். அதுக்காவ யாரோ அஞ்சாறு பேர் வந்து எங்க குடிசைகளை யெல்லாம் பிரிச்சுப் போட்டுட்டாங்க! நாங்க என்ன செய்வோம், சாமி? எங்களுக்கு இருக்க இடமில்லே......"

"ஏன், நஷ்ட ஈடு கொடுத்தார்களோ இல்லையோ!"

"கொடுக்காம என்ன, சாமி! பத்து ரூவாக் காசு கொடுத்தாங்க......!"

"பத்து ரூபாய்க் காசு கொடுக்காமல் உங்களுடைய பங்களாக்கள் ஒவ்வொன்றுக்கும் பத்து லட்சமா கொடுப்பார்கள்?"

"பத்து லட்சம் கேட்கலே, சாமி! 'அப்பாடி!'ன்னு படுக்கப் பத்தடி இடந்தான் கேட்கிறோம். அதுக்கு இந்தப் பத்து ரூவாயை வச்சிக்கிட்டு நாங்க என்ன செய்வது, சாமி?"

"அதற்கு என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்? ஊரிலே எந்த எழவு நடந்தாலும் அதற்கு இந்த அன்னவிசாரம்தானா பொறுப்பாளி? — போங்கடா, வேலையைப் பார்த்துக்கொண்டு!" என்று எரிந்து விழுந்தார் 'ஐயா.'

"அப்படிச் சொல்லிப்பிட்டா எப்படி, சாமி? கோடி வீட்டு ஐயா சொன்னாரு—உங்கக்கிட்ட சொன்னா மேலிடத்திலே சொல்லி ஏதாச்சும் செய்வீங்கன்னு!"

"அவனுக்கும் வேலை கிடையாது; உங்களுக்கும் வேலை கிடையாது. நானும் உங்களைப்போலவா இருக்கிறேன்? எனக்கு எவ்வளவோ வேலை இருக்கிறது. நீங்கள் போங்கள்!"

"வேலையோடு வேலையா இந்த ஏழைகளையும் கொஞ்சம் கவனிச்சுக்கிட்டா நீங்க நல்லா யிருப்பீங்க......!"

"......இல்லாவிட்டால் கெட்டுவிடுவேனாக்கும்! — அட சனியன்களே! நீங்கள் மட்டுந்தானா ஏழைகள்? நாங்களுந்தான் ஏழைகள்!—முதலில் நீங்கள் இங்கிருந்து

கடையைக் கட்டுங்கள்; அப்புறம் நான் உங்களைக் கவனித்துக் கொள்கிறேன்!'' என்று சொல்லிவிட்டுக் கதவைப் 'படா' ரென்று சாத்திக் கொண்டு 'ஐயா' உள்ளே சென்று விட்டார்.

★

ஸ்ரீமான் அன்னவிசாரம் எம்.எல்.ஏ. ஒரு காலத்தில் வேலை கிடைக்காமல் அலைந்து கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் அவர் தம்முடைய மனைவியை மாமனார் வீட்டுக்கு அனுப்பி வைத்து விட்டு, வேறு வழியின்றி நகரிலிருந்த சேவாசிரமத்தில் சேர்ந்தார். அந்த ஆசிரமத்தில் அவருக்கு மாதா மாதம் ரூபாய் இருபத்தைந்து சம்பளம் கிடைத்து வந்தது. அதை அவர் வெளியே சொல்லிக் கொள்வதில்லை. அப்படிச் சொல்லிக் கொள்வது தம்முடைய தொண்டுக்குத் தாமே மாசு கற்பித்துக் கொள்வதாகு மென்று அவர் நினைத்தார்.

அந்த ஆசிரமத்தில் பொதுஜனச் செல்வாக்குள்ள ஒரு நண்பரின் சிநேகம் ஸ்ரீ அன்னவிசாரத்துக்குக் கிடைத்தது. நண்பர் நல்ல பேச்சாளர்; அடிக்கடி பல பொதுக் கூட்டங்களில் பங்கெடுத்துக் கொள்வார். அவர் சமயம் வாய்க்கும் போதெல்லாம் ஸ்ரீ அன்னவிசாரத்தைப் பற்றிச் சக்கைப்போடு போட்டு வந்தார். ஸ்ரீ அன்னவிசாரத்தின் தன்னலமற்ற சேவையைப் பற்றியும், தேசத்துக்காக அவர் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்திருப்பதைப் பற்றியும் சாங்கோபாங்கமாக எடுத்துச் சொல்லி வந்தார்.

இந்த விஷயத்தில் ஸ்ரீ அன்னவிசாரத்துக்கு மட்டும் அடிக்கடி சந்தேகம் வந்து விடும். அவ்வாறு சந்தேகம் வரும்போதெல்லாம் அவர் தம் உடலை ஒரு முறை தடவிப் பார்த்துக் கொள்வார்; அது என்றும் இருப்பதுபோல் வாடாமல் வதங்காமல் இருக்கும். அதற்குள் 'ஆவி இருக்கிறதா?' என்று தெரிய வேண்டாமா? அதற்காக ஒரு முறை அவர் தம் அங்க அவயவங்களை யெல்லாம் அசைத்துப் பார்த்துக் கொள்வார்; அதன் மூலம் ஆவியும் இருப்பதாகத் தெரிய வரும். பொருளைத்தான் அவர் பார்ப்பதே யில்லை. ஏனெனில், அதுதான் அவரிடம் அப்போது கிடையவே கிடையாதே!

இருப்பதைச் சொல்லட்டும், இல்லாததைச் சொல்லட்டும்—அந்தப் பக்கத்து ஜனங்கள் அதைப் பற்றி ஒன்றும் கவலைப்படுவதே யில்லை. இந்த அசட்டுத்தனத்தினாலும், நண்பருடைய பிரசார

பலத்தினாலும் ஸ்ரீ அன்னவிசாரம் எம். எல் ஏ. ஆனார். கனம் அங்கத்தினரான தும் ஸ்ரீ அன்னவிசாரத்தின் கவலை ஒரு வாறு தீர்ந்தது. மாமனார் வீட்டிலிருந்து தம்முடைய மனைவியை அழைத்துக் கொண்டதோடு, இன்னொரு மாதரசியை யும் காதலித்து அவர் மறு விவாகம் செய்துகொண்டார்!

'பொதுஜனப் பிரதிநிதி' என்ற ஒரே ஒரு காரணத்துக்காக, அவருடைய 'சிக்கலான வாழ்க்கை'யைச் சிலர் இன்னும் சிக்கலாக ஆக்கி வந்தனர். அவர்களைச் சேர்ந்தவர்கள்தான் அந்தச் செம்படவர் களும். அந்தத் தரித்திரங்களை அனுப்பி விட்டு உள்ளே வந்த ஸ்ரீ அன்னவிசாரத் துக்கு ஒன்றுமே ஓடவில்லை.

அவருக்கு எதிரே பிரெஞ்சு அறிஞனான ரூஸ்லோவின் புத்தகமொன்று கிடந்தது. ஒரு காரணமுமில்லாமல் அதை எடுத் துப் புரட்டினார். அரசியல் நிர்வாகி களைப் பற்றி அந்த மேதை எழுதியிருந்த ஒரு விஷயம் அவருடைய கவனத்தைக் கவர்ந்தது:

'அரசியலை நிர்வகிக்கும் ஒவ்வொரு அ காரிக்கும் மூன்றுவித மனப்பான்மைகள் இரு கின்றன. முதலாவது, அவனுடைய சொந் மனப்பான்மை; இது சுயநலத்தை நாடுகிறது



இரண்டாவது, ஆளுகின்ற மனப்பான்மை; இது சர்க்கார் நலத்தை நாடுகிறது. மூன்றாவதாகத்தான் மக்களுடைய மனப்பான்மை; இது மக்களுடைய நன்மையை நாடுகிறது.

நியாயமும் நேர்மையும் கொண்ட அரசியல் நடைபெற வேண்டுமானால், சர்க்கார் நிர்வாகிகள் முதலாவது மனப்பான்மையைக் கைவிட வேண்டும். அதாவது, அவர்கள் சுயநலத்தைக் கருதக் கூடாது. இரண்டாவது மனப்பான்மை ஓர் அளவுடன் இருக்க வேண்டும். அதாவது, சர்க்காருடைய நன்மையைக் கவனிக்க வேண்டுமென்றாலும் அதுவே முக்கியமானதாயிருக்கக் கூடாது. மூன்றாவது மனப்பான்மையைத்தான் அவர்கள் சிறப்பாகக் கொள்ள வேண்டும். அதாவது, மக்களுடைய நன்மையை முக்கியமாகக் கொண்டு, அந்த நன்மையின் மூலமாக மற்ற இரண்டு நன்மைகளையும் அடையப் பார்க்க வேண்டும். இந்த முறையை விட்டுவிட்டு, முதல் இரண்டு நன்மைகளின் மூலமாக மக்களுடைய நன்மையை நாடவே கூடாது.'

இந்த 'அரசியல் சித்தாந்தம்' ஸ்ரீ அன்னவிசாரத்தை என்னவோ செய்தது. புத்தகத்தை மூடி வீசி எறிந்துவிட்டு எழுந்தார். எதிரே சகதர்மிணி காப்பியுடன் வந்து நின்றாள். அதை அலட்சியமாக வாங்கி ஒரே மூச்சில் குடித்துவிட்டு, அவசர அவசரமாகச் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டார். இன்று சட்டசபையில் அந்த 'அசல் தரித்திரங்க'ளைப் பற்றி எப்படியாவது வெளுத்து வாங்கி விடுவது என்றும், ரூஸ்வோவின் கூற்றைப் பொய்யாக்கி, மூன்றாவது மனப்பான்மையான மக்கள் மனப்பான்மையை இனி முதல் மனப்பான்மையாகக் கொள்வதென்றும் நிர்மானித்துக் கொண்டு கிளம்பினார்.

என்றுமில்லாத விதமாக அன்று ஸ்ரீ அன்னவிசாரத்தைக் கண்டதும் மற்ற எம். எல். ஏ.க்கள் எல்லோரும் முக மலர்ச்சியுடன் வரவேற்றனர். ஸ்ரீ அன்னவிசாரம் ஒன்றும் புரியாமல் அவர்களைப் பார்த்து விழித்தது விழித்தபடி நின்றார்.

"அன்னவிசாரத்துக்கு என்ன, அப்பா! அடிக்கிறது, யோகம்!" என்றார் ஒருவர்.

"இனிமேல் நம்மையெல்லாம் கவனிக்கவே மாட்டார்!" என்றார் இன்னொருவர்.

"எப்பொழுதாவது ஒரு சமயம் பேட்டியாவது 'அளிப்பாரோ, என்னமோ!" என்றார் மற்றும் ஒருவர்.

ஸ்ரீ அன்னவிசாரத்துக்கு ஒன்றும் விளங்கவில்லை. "என்ன விசேஷம்?" என்று மெள்ளக் கேட்டார்.



"விசேஷமா! உங்களுக்குத் தெரியவே தெரியாதா! நீரும் ஒரு மந்திரியாகப் போகிறீர், ஐயா!" என்றார் ஒருவர்.

தூக்கி வாரிப்போட்டது ஸ்ரீ அன்னவிசாரத்துக்கு. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, "இதென்ன பிதற்றல்? எந்த இலாக்காவும் காலியாக இருப்பதாகக்கூடத் தெரியவில்லையே!" என்றார்.

"இலாக்கா காலியாக இல்லாவிட்டால் என்ன? நீர் 'இலாக்கா இல்லாத மந்திரி'யாக இருந்துவிட்டுப் போகிறீர்!" என்றார் ஒரு வயிற்றெரிச்சல்காரர்.

இப்பொழுதுதான் இந்த விஷயத்தில் ஏதோ உண்மை இருக்க வேண்டுமென்று தோன்றிற்று ஸ்ரீ அன்னவிசாரத்துக்கு. உடனே அவருடைய கவனம் 'அசல் தரித்திரங்க'ளின் மீது சென்றது.


'இந்தச் சமயத்தில் அந்த 'அசல் தரித்திரங்க'ளைப்

பற்றி நாம் இங்கே ஏதாவது உளறு வானேன்? சமுத்திரக் கரை அழகாக இருக்க வேண்டு மென்பது நகரத்துப் பெரிய மனிதர்கள், பிரமுகர்கள் ஆகியவர்களின் அபிப்பிராயம். அவர்களுடைய விருப்பத்துக்கு இணங்கிக் காரியம் செய்வது அரசாங்கத்துக்கு நல்லதா, அந்தத் தரித்திரங்களுடைய விருப்பத்துக்கு இணங்கிக் காரியம் செய்வது நல்லதா?—சீ, வேண்டாம்; வேண்டவே வேண்டாம். என்ன இருந்தாலும் நம்முடைய புத்தி இப்படிக் கீழே போக வேண்டாம். நாளுக்கு நாள் முன்னேறவேண்டிய நாம், அப்படி ஏதாவது இப்போது கேட்டு வைத்தால் அது சிலருக்குப் பிடிக்கும்; சிலருக்குப் பிடிக்காது. அதன் பயனாக ஒருவேளை மந்திரிப் பதவி கிடைக்காமலே போனாலும் போய்விடலாம். நமக்கு எதற்கு வீண் வம்பு? 'எடுத்ததற் கெல்லாம் கையைத் தூக்கினோம், வீட்டுக்குப் போனோம்' என்று இருப்பதே மேல்!

இந்தத் தீர்மானத்துக்கு வந்ததும் ஸ்ரீ அன்னவிசாரம் 'அசல் தரித்திரங்க'ளைப் பற்றிய விசாரத்தை விட்டார். சட்டசபையில் 'சிவனே!' என்று உட்கார்ந்து கொண்டிருந்துவிட்டு, வீடு திரும்பினார்.

அன்றிரவு அவருக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. காரணம், அவருடைய

அவர் கேள்வி!



விமான ஓட்டி:—வாங்க ஸார், வாங்க! பயப்படாதீங்க! உங்கள் அதிர்ஷ்டம் நல்ல அதிர்ஷ்டமாக இருந்தால் எந்த விதமான ஆபத்தும் நேராது! தைரியமாக ஏறிச் சவாரி செய்யுங்க!

பிரயாணி:—அது சரி; என் அதிர்ஷ்டத்தைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. உங்களுடைய அதிர்ஷ்டம் துரதிர்ஷ்டமாக இருந்தால் என்ன செய்வது?

மனம் 'மந்திரியின் மகாத்மிய'த்திலேயே லயித்துவிட்டதுதான்!

★

மறுநாள் காலை ஸ்ரீ அன்னவிசாரம் படுக்கையை விட்டு எழுந்திருப்பதற்கும், அந்த 'அசல் தரித்திரங்க'ளில் ஒன்று வந்து ஜன்னல் வழியே தலையை நீட்டுவதற்கும் சரியாயிருந்தது.

"யாரடா, அது?"

"நான்தான் குப்பனுங்க!"

"குப்பனா!"

"ஆமாங்க, நேத்து வந்து குடிசையைப் பிரிக்கப் போட்டுட்டாங்கன்னு முறையிட்டுக்கிட்டோமில்லே, அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவனுங்க!"

"ஓஹோ! இப்போது எதற்கு இங்கே வந்தாய்?"

"மேலிடத்திலே எங்களைப் பற்றி ஏதாச்சும் சொன்னீங்களான்னு கேட்கத்தான் வந்தேனுங்க!"

"மேலிடம் என்னடா, மேலிடம்! எனக்கு மூனா கீனா ஒன்றும் கிடையாதா? நாலு பேருக்கு நல்லதென்று எண்ணி ஒரு காரியம் செய்தால், அது ஒரிருவருக்குக் கெடுதலாகவும் முடியுந்தான்; அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா, என்ன?—போ, போ!"


"என்ன சாமி, இப்படிச் சொல்றீங்க? 'நீங்க எங்க பிரதிநிதி, எங்க பக்கமாப் பேசத்தான் மேலிடத்துக்குப் போயிருக்கீங்க'ன்னு கோடி வீட்டு ஐயா சொன்னாரே! உங்க பேச்சைப் பார்த்தா நீங்க 'யாருக்குப் பிரதிநிதி?'ன்னு தெரியலீங்களே!" என்றான் குப்பன் வியப்புடன்.

அவ்வளவுதான்; ஸ்ரீமான் அன்னவிசாரத்துக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்து விட்டது. அவர் படுக்கையை விட்டுத் 'தடா'லென்று கீழே குதித்தார்; குப்பனுக்கு நேராகச் சென்று ஜன்னல் கம்பியைப் பிடித்துக்கொண்டு, "அடே அதிகப்பிரசங்கி! நான் யாருக்குப் பிரதிநிதி என்றா கேட்கிறாய்? சொல்கிறேன், கேட்டுக் கொள்; நான் எனக்குப் பிரதிநிதி; என் மனைவிக்குப் பிரதிநிதி; என் மக்களுக்குப் பிரதிநிதி; என் வீட்டுக்குப் பிரதிநிதி! உனக்கும் பிரதிநிதி இல்லை; உன்னைச் சேர்ந்தவர்களுக்கும் பிரதிநிதி இல்லை, போ!" என்று கத்திவிட்டுக் குளிக்கும் அறையை நோக்கி 'மந்திரி நடை' நடந்து சென்றார்.

"அப்படிப் போடுங்கள், ஒரு போடு! அடுத்த 'எலெக்ஷன்' வரும் வரைதான் நமக்குக் கவலை யில்லையே!" என்று தன் பதி சொன்னதை அப்படியே ஆமோதித்தாள் அவருடைய சதி.



எனது ஆல்பத்தில் ஒரு பக்கம்!



போட்டோ ஆல்பத்தின் ஒவ்வொரு பக்கமும் கவர்ச்சி கரமாக விளங்க என்ன வேண்டும்?

தேவைகள் மிகவும் சுலபமாகவும் எளிதிலும் கிடைக்கக் கூடியவை.

முதலாவதாக, ஒரு கேவார்ட்ஸ் ரோல் பிலிம் அல்லது பிளேட்.

இரண்டாவதாக ஒரு கேவார்ட்ஸ் பேப்பர்

இந்தியாவின் மொத்த விற்பனையாளர்கள்:

அல்லையட்
போட்டோகிராபிக்ஸ்
லிமிடெட்

பம்பாய் - கல்கத்தா - மதராஸ்

குழந்தையும் தெய்வமும்

அக்ஷயம்

"அம்பி, இன்றைக்கு என்ன விசேஷம் தெரியுமோ, இல்லையோ?" என்று கேட்டார் அப்பா.

"இன்றைக்குத்தானே அப்பா! எனக்குத் தெரியாதா, என்ன? கார்த்திகை!" என்றான் விஷமக்கார வேம்பு.

"அதனால் என்ன செய்ய வேண்டும், தெரியுமா? சுவாமி நிவேதனத்துக்கு வாழைப்பழம் வாங்கி வரவேண்டும். நீ அந்த முனைக் கடைக்குப் போய்ப் பச்சை வாழைப் பழம் வாங்கி வருகிறாயா?" என்று கேட்டார் அப்பா.

"ஓ! வாங்கி வருகிறேனே!" என்றான் வேம்பு.

அவன் அப்பா இரண்டணாவை எடுத்து அவன் கையில் கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டு வேம்பு கடைப்பக்கம் போனான்.

வேம்பு ரொம்ப ரொம்ப புத்திசாலி. அப்பா, வாத்தியார் எல்லோரையுமே அவன் பேச்சில் மயக்கி விடுவான். அந்த ஊரில் அவனுடைய கெட்டிக்காரத்தனத்தைப் பற்றிப் புகழாதவர் யாருமே கிடையாது. ஆனால் படிப்பிலும் கெட்டிக்காரத்தனத்திலும் எப்படியோ, அப்படியே விஷமம் செய்வதிலும் அவன்தான் முதலாவதாக இருந்தான்.

அவன் நேரே மூலைக் கடைக்குப் போய், பழம் அரையணா விதம் நல்ல பழமாக நான்கு பழங்களை வாங்கிக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினான்.

வரும் வழியில் அவனுக்கு அந்தப் பழங்களை உரித்து அப்படியே விழுங்கி விட வேண்டும் என்று தோன்றிற்று. குழந்தைதானே! ஆசை விடாதா? இருந்தாலும் மனதில் எழுந்த ஆசையை அடக்கி அடக்கிப் பார்த்தான்; முடியவில்லை. கடைசியில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஒவ்வொரு பழமாக எல்லாவற்றையும் உரித்துத் தின்று விட்டான். கையிலிருந்த வாழைப்பழக் கலம் குறைந்ததும்தான் 'அப்பா அடிப்பாரே, என்ன செய்வது?' என்ற கவலை தோன்றிற்று.

வேம்பு தன் வீட்டை யடைந்த பொழுது அப்பா ஸ்நானம் செய்து விட்டுப் பூஜை யறையில் உட்கார்ந்திருந்தார். 'அப்பாவுக்கெதிரில் வெறுங்கையுடன் போனால் அடி விழுமே! அதிலிருந்து தப்பித்துக் கொள்ள என்ன உபாயம் செய்யலாம்?' என்று யோசனை செய்து கொண்டே அவன் பூனைபோல மெதுவாக உள்ளே போனான்.

அவனைப் பார்த்ததும் அப்பா, "என்னடா, பழம் வாங்கி வந்துவிட்டாயா?" என்று கேட்டார்.

"வாங்கி வந்துவிட்டேன். ஆனால்..." என்று இழுத்தான் வேம்பு.

"ஆனால் என்னடா ஆனால்? எல்லாவற்றையும் தின்றுவிட்டாயா, என்ன? இஞ்சி தின்ற குரங்கைப்போல விழிக்கிறாயே!" என்று கோபத்துடன் கேட்டார் அப்பா.

அப்பாவின் கோபத்தை மாற்றினால் அடி விழாது என்று நினைத்த வேம்பு, "அப்பா ஒன்று சொல்லுகிறேன். கோவிச்சுக்காதே!" என்று ஆரம்பித்தான்.

"செய்ததையும் செய்துவிட்டுக் கோபித்துக் கொள்ளாதே என்று வேறு சொல்கிறாய்? இரு. உன் முதுகுத் தோலை உரித்துவிட்டு மறுகாரியம் பார்க்கிறேன்!" என்று சத்தம் போட்டார், அப்பா.

"இல்லை அப்பா! கோவிச்சுக்காமல் கேளேன். நான் நாலு பழம் வாங்கி வந்தேனா? 'உம்' என்று சொல், அப்பா!" என்றான் வேம்பு.

"நாலு பழமா வாங்கி வந்தாய்? சரி சொல்லு."

"ஏன் அப்பா, நீ நிவேதனம் பண்ணியவுடனே எனக்கு ஒரு பழம் கொடுப்பாயா, மாட்டாயா?"

"கொடுப்பேன்."

"அப்படி நீ கொடுத்துவிட்டாய் என்று எண்ணி முதலில் ஒரு பழத்தை எடுத்துக்கொண்டு விட்டேன்."

"என்ன! எடுத்துக் கொண்டு விட்டாயா?"

"ஆமாம், அப்பா! கோவிச்சுக் காதே! அப்புறம் பாக்கி மூன்று இருந்தது. நீ சாப்பிடும்பொழுது குழந்தைக்குக் கொடுக்காமல் சாப்பிட மாட்டாயே! அதனால் நீ சாப்பிடும் பொழுது எனக்கு ஒன்று கொடுப்ப தாக நினைத்துக்கொண்டு இன்னொன் றையும் சாப்பிட்டு விட்டேன். அப் புறம் எத்தனை அப்பா, பாக்கி?" என்று அப்பாவுக்கு வாத்தியாராக ஒரு கேள்வியைப் போட்டான் வேம்பு.

"பாக்கி இரண்டு. அந்த இரண்டும் எங்கே?"

"அதுதான் சொல்கிறேனே! அதற் குள் அவசரப்படுகிறாயே, அப்பா! நான் வாங்கி வந்ததற்குக் கூலியாக நீ ஒரு பழம் தந்துதானே ஆகவேண்டும்? அதனால் இன்னொன்றையும் எடுத்துக் கொண்டுவிட்டேன்!"

"நீ என்ன, கூலியாளா? உனக்குக் கூலி தருவதற்கு?" என்று அப்பா லேசாகச் சிரித் துக் கொண்டே கேட்டார்.

"நீ கூலி தராவிட்டால் நான் வாங்கி வருவேன் என்று நினைத் தாயோ? அந்தப் பாச்சாத்தான் என்னிடம் பலிக்காது!" என்று வேம்பு அழுத்தந் திருத்தமாகச் சொன்னான்.

"சரி, மூன்று பழத்துக்குக் கணக்குச் சொல்லி விட்டாய்! பாக்கி ஒன்று இருக்கிறதே, அதையாவது கொண்டு வா, நிவேதனத்துக்கு!" என்றார் அப்பா.

"என்ன அப்பா, இது? நான் சொல்வதற் குள்ளேயே இவ் வளவு அவசரப் படுகிறாயே! அம்மா விதம் ஒரு பழம் உண்டோ, இல்லையோ? அதையும் நானே தின்று விட்டேன்!" என்றான் வேம்பு.

"கணக்கு ரொம்ப அழகாய்த்தா னிருக்கிறது!"

"என்ன அப்பா, என் கணக்குக்கு என்ன குறைச்சல்?"

"போக்கிரிப் பயலே! உனக்கு உதைதான் கேட்கிறது!" என்று சொல்லிக் கொண்டே அப்பா எழுந்தார்.

அதே சமயம் அம்மா கையில் பொரி உருண்டைத் தட்டுடன் உள்ளே நுழைந்தாள்.

அதைப் பார்த்ததும் அப்பாவின் உதைக்குப் பயந்து ஓடிக்கொண்டிருந்த வேம்பு, "அப்பா, 'குழந்தையும் தெய் வமும் கொண்டாடும் இடத்திலே!' என்று நீதானே சொல்லியிருக்கிறாய், அப்பா! குழந்தை தின்றால் ஸ்வாமி ஒன்றும் கோபித்துக் கொள்ள மாட் டார். நீ அம்மா கொண்டுவரும் பொரியை வைத்து நைவேத்தியம் பண்ணு, போதும்!" என்றான் சிரித்துக்கொண்டே.

"போடா, போக்கிரிப் பயலே!" என்று சொன்னவாறே அப்பா பூஜைக்கு உட்கார்ந்தார்.

விஷமக்கார வேம்புவுக்கு அன்று அடி விழவில்லை!





அவள் பாக்கியசாலி

கமலா

"அப்பா! சுந்தரராஜா! இனி நம்புவதற்கில்லை. அம்புஜத்திற்கும், பூமாவிற்கும், மைதிலிக்கும் தந்தி கொடுத்து விடு. இவர் அரை மூச்சுடன் இருக்கும் போதே அவர்களெல்லாம் வந்து பார்த்து விட்டுப் போகட்டும்" என்றாள் தாயார்.

"இத்தனை பேரையும் சொன்னாயே, சூடாமணியை மறந்துவிட்டாயா? அவளுக்கு மாத்திரம் தந்தி கொடுக்க வேண்டாமா?" என்றான் சுந்தரராஜன்.

"தந்தி என்ன! 'கேபின்' வேண்டுமானாலும் கொடேன்! என்று, உடனே பணத்தை எடுத்து முடிந்து கொண்டு வந்து நிற்கப் போறா, பாரு!" என்று ஏளனமாகச் சொல்லிக் கொண்டே வந்து நின்றான், ஸ்ரீனிவாச ராகவன்.

"சீனு! நீ சொல்வதும் சரிதான். அவளுக்குத் தந்தி அடித்தால் கூட வருகிறாளோ, இல்லையோ? எதுக்கும் நம்ம மேலே பொல்லாப்புக்கு இடமில்லாமல் ஒரு கடிதாசி எழுதிப் போட்டுவிடு, சுந்தரா!" என்றாள் தாயார்.

இவர்களுடைய பேச்சைக் கட்டிலில் படுத்துக் கண்களை மூடியபடி கேட்டுக் கொண்டிருந்த ஜட்ஜ் ஜகன்னாதய்யங்கார் கண்களில் நீர் ததும்ப ஆரம்பித்தது. சுந்தரராஜன் தன் தந்தை யருகில் போய் உட்கார்ந்து கொண்டான். அவருடைய கண்களிலிருந்து வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்தான்.

"என்னடா, அப்படியே இடிச்ச சுவராட்டமா உட்கார்ந்து விட்டே! நீ இப்படியே இரு. நான் போய்க் குளித்து என் காரியங்களை யெல்லாம் முடித்துக் கொண்டு வந்து விடுகிறேன். அப்புறம் நீ போய்க் குளித்துச் சாப்பிட்டுவிட்டு எல்லாருக்கும் தந்தியைக் கொடுத்து விட்டு வரலாம்" என்றாள் தாயார்.

சுந்தரராஜனுக்கு ஒன்றும் புரியவில்லை. முதலில் சூடாமணிக்கு 'எக்ஸ்பிரஸ்' தந்தி கொடுத்துவிட்டு, மற்றவர்களுக்கு எல்லாம் சாதாரண தந்தி அடிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டே தந்தையின் உடலைத் தடவிக் கொண்டிருந்தான்.

2

ஜகன்னாதய்யங்கார் கண்களின் முன்பு சூடாமணி வந்து நின்றாள், குழந்தையும் கையுமாக. ஐந்து மாதம் நிரம்பின ஆராவமுதன், சூடாமணியின் கையால் போடப்பட்ட உல்லன் குல்லாவையும் ஸாக்ஸையும் போட்டுக் கொண்டிருந்தான். இடுப்பில் தங்க அரைஞாணும், சதங்கையும் கட்டியிருந்தன. கையில் புதையப் புதைய இரண்டு ஜோடி தங்க வளையல்கள். கழுத்தில் புலிநகம் கோர்த்த ஒரு பொன் சங்கிலி.

இவ்வளவும் குழந்தையின் அழகுக்கு அழகு செய்வதுபோல் அமைந்திருந்தன.

"அப்பா! வரட்டுமா?" என்ற பெண்ணின் குரல் கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்த ஜகன்னாதய்யங்காரை விழிப்புக் கொள்ளச் செய்தது. மெல்ல எழுந்து தலையணையின் மேல் சாய்ந்து கொண்டார். பேச வாய் வரவில்லை. குழந்தையைத் தந்தையிடம் கொடுத்துவிட்டு அவரை நமஸ்கரித்தாள் சூடாமணி. அன்புடன் ஆசீர்வாதம் செய்தார் தந்தை.

"தப்பா ......!" என்று என்னவோ சொல்ல வந்தான் அவன். அதற்குள் பேரன் தாத்தாவின் வேஷ்டியை நனைத்து விட்டான்.

"சீ, துஷ்டப் பயலே!" என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டு குழந்தையை எடுத்தாள் சூடாமணி.

பிறகு, "அப்பா! என் உயிர் முன்னெல்லாம் உங்கள் மேலும் அம்மா மேலும் இருக்கும். இப்போது இந்த மகாராஜன் மேலும் இருக்கிறது!" என்று சொல்லிக் கொண்டே ஆராவமுதனை அழுத்தி முகத்துடன் முகத்தைப் பதித்துக் கொண்டு, "உங்கள் உடல் நிலையைப் பற்றி வாரத்திற்கு ஒரு முறையாவது கடிதம் எழுதச் சொல்லுங்கள், அப்பா! நாங்கள் பதில் கூடப் போடமாட்டோம்!......எனக்காக... உங்கள் நிலையை எழுதிக் கொண்டிருங்கள்!" என்றாள் கண்களில் நீர் மல்க.

"ஆகட்டும் அம்மா!" என்றார் தந்தை குரல் தழுதழுக்க. சூடாமணி மறுபடியும் தந்தையை நமஸ்காரம் செய்தாள்.

"தீர்க்க சுமங்கலியாயிரு!" என்று தந்தை அவளை வாழ்த்தினார்.

"புறப்படேன்! நேரமாகி விட்டது!" என்றான் ஸ்ரீனிவாசராகவன்.

"என் சீனு, அவசரப்படறே? சொல்லிண்டுதானே வரணும்? — சூடா! அப்பாவுக்குத் தைரியம் சொல்லு அம்மா!" என்றான் சுந்தரராஜன்.


தந்தையைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றாள் சூடாமணி. ஜகன்னாதய்யங்காருக்கு இருதயமே வெடித்து விடும்போலாகிவிட்டது. 'அ...ம்...மா!' என்று பெருமூச்சு விட்டார்.

3

ஜட்ஜ் ஜகன்னாதய்யங்காருக்கு அம்புஜம், பூமா, மைதிலி, சூடாமணி என்று நான்கு பெண்களும் ஸ்ரீனிவாசராகவன், சுந்தரராஜன் என்ற இரண்டு பிள்ளைகளும் இருந்தனர். அம்புஜமும் பூமாவும் மூத்தவர்கள். சீனுவும் சுந்தரராஜனும் அதற்கடுத்தவர்கள். மைதிலியும் சூடாமணியும் கடைக்குட்டிகள்.

ஜகன்னாதய்யங்கார், தம் நிலைமைக்கேற்றவாறு அம்புஜத்தை 'ஐ.ஸி.எஸ்.' ஸாருக்கும், பூமாவை 'எப்.ஸி.எஸ்.' ஸாருக்கும் கொடுத்தார். சீனு சீமைக்குச் சென்று 'ஐ.ஸி.எஸ்.' பரீக்ஷையில் தேறிப் பாஸிட்டாய் வந்து சேர்ந்தான். சுந்தரராஜன் 'லா' படித்துவிட்டுக் கார்ஜியத்தில் இறங்கிவிட்டான். மைதிலி ஜில்லா ஜட்ஜின் மனைவி. சூடாமணி சாதாரணப் பண்ணையார் வீட்டு நாட்டுப் பெண். அது அவள் தலைவிதி போலும்!

அவளுக்குக் கல்யாணம் ஆகும்போது வரதராஜன் 'எம்.ஏ., பி.எல்.,' படித்துக் கொண்டிருந்தான். திடீரென்று அஹிம்சா மூர்த்தியின் தர்ம தத்துவத்தின் மேல் அவன் கவனம் சென்றது. எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டுச் சர்க்காவும் கையுமாகக் கிராமத்தில் அமர்ந்தான். தலைமுறைத் தத்துவமாக டம்பாச்சாரிகளாய் வாழும் மாமியார் வீட்டார்கள், 'தான் அவர்களுக்கேற்ற பதவியில் இல்லாததால் தன்னை லட்சியம் செய்யவில்லை' என்பதை அவன் அறிந்தான். ஆனால் தன்னை மணந்த சூடாமணி ஆதர்ச தர்மபத்தினியாக இருக்க வேண்டுமென்று அவன் நினைத்தான்.



சூடாமணிக்கு வெகுநாட்கள் வரையில் கணவனின் பழக்க வழக்கங்கள் பிடிக்கவில்லை. ஆனால் வரதராஜன் அவளை வெறுப்பையோ, விருப்பையோ லட்சியம் செய்தால்தானே!

அப்பொழுது ஆலயப் பிரவேசத்துக்காகப் போதுமக்கள்

கிளர்ச்சி செய்த காலம். அவ்வூர் ஹரிஜனங்களுக்கெல்லாம் ஆலயப் பிரவேச உரிமை அளிக்க வேண்டும் என்று சநாதனிகளிடம் போர் செய்துகொண்டிருந்தான் வரதராஜன். இரண்டு தரப்பினருக்கும் வாதம் வலுத்தது. வெளியிலிருந்த 'பெரிய மனிதர்'கள் எல்லாம் வரதராஜனால் கிராமமே பாழாய்ப் போய் விடுமென்றும், ஜனங்கள் மனதை அவன் கெடுத்து விடுகிறானென்றும் சர்க்காருக்கு மனுச் செய்து கொண்டார்கள். இதற்கெல்லாம் மசிகிறவனா வரதராஜன்?

அன்று பகல் பன்னிரண்டு மணி இருக்கும். மாலை ரயிலில் தாயார் வரப் போகிறாள், பெண் சூடாமணியைப் பிறந்தகம் அழைத்துச் செல்ல.

சூடாமணி, "ஹரிஜனங்களின் ஆலயப் பிரவேசம் அவ்வளவு முக்கியமானதா?" என்று கேட்டுக் கொண்டே கணவனுக்கெதிரில் வந்து உட்கார்ந்தாள்.

சர்க்காவைச் சுற்றியபடியே சூடாவைப் பார்த்தான் வரதராஜன். அந்தப் பார்வையிலிருந்தே அவனுடைய பதில் அவளுக்குத் தெரிந்து விட்டது.

"அவர்கள் கோவிலுக்குள் நுழைந்தால் கடவுள் சக்தி குறைந்து அவர் அபவித்திரமாகி விடமாட்டாரா?" என்று மற்றுமொரு கேள்வியைப் போட்டாள் சூடாமணி.

"பைத்தியமே! யாரடி சொன்னது?" என்றான் வரதராஜன்.

தன் கணவன் லா படித்தவன்; அவன் சொல்வது சரியென்று எண்ணிக் கொண்டாள் சூடாமணி. ஆனாலும் "அப்படியானால் எல்லாரும் கோவிலுக்குப் போகலாமா?" என்றாள்.

"பேதாய், சூடா!" என்று சொல்லிக் கொண்டே கிட்டத்தை எடுத்துக் கொண்டு எழுந்தான் வரதராஜன்.

4

அன்றிரவு நிர்விசாரமாய்த் தூங்கிக் கொண்டிருந்தான் வரதராஜன். சூடாமணிக்குத் தூக்கம் வரவில்லை. 'விடியற்காலம் தாயாருடன் புறப்பட்டுப் பிறந்தகம் போக வேண்டுமே!' என்ற சிந்தனையில் அவள் மூழ்கியிருந்தாள்.

மாமியாரோ தன்னை அழைத்துப் போக வந்திருக்கும் தாயாரிடம், "மாப்பிள்ளை பாடு, உங்கள் பாடு!" என்று சொல்லி விட்டாள். வரதராஜனோ, "என்னைக் கேட்பானேன்? உங்கள் பெண் வந்தால் அழைத்துப் போங்கள்!" என்று சொல்லி விட்டான்.

ஒன்றும் புரியாமல் மெல்ல எழுந்து, "என்னா?" என்று அவனைத் தட்டி எழுப்பினாள், சூடாமணி. அவன் எழுந்திருக்கவில்லை. "உங்களைத்தானே!" என்றாள் மீண்டும்.

'ஊம்!' என்று அவள்மீது ஒரு மௌனப் பார்வையைச் செலுத்தினான் வரதராஜன்.

"உங்களை விட்டுப் போக வேண்டுமென்றால் என்னவோ போல் இருக்கிறது!" என்றாள் சூடாமணி.

அவன் 'பக்'கென்று சிரித்துவிட்டான். "நேற்று அம்மாளைக் கண்டதும் முகம் எவ்வளவு அழகாய் மலர்ந்திருந்தது. இன்று இப்படிச் சொல்லுகிறாயே! உள்ளுக்குள்ளே போக வேண்டுமென்று இருக்கிறது; மேலுக்கு இப்படிப் பேசுகிறாய், இல்லையா?" என்று கேட்டு விட்டான் வரதராஜன்.

அவள் முகம் 'சடக்'கென்று கறுத்தது. அவனிடம் அவள் எதிர்பார்த்தது, அன்பு நிறைந்த சொற்களை. ஆனால் கிடைத்ததோ? எப்படியோ ஒரு விதமாக மாமியாரிடமும் கணவனிடமும் விடை பெற்றுக் கொண்டு பிறந்தகம் வந்து சேர்ந்தாள், சூடாமணி. ஒரு நாள் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருக்கும்பொழுது அவள் 'வீல்' என்று கூவி அப்படியே சாய்ந்து விட்டாள்.

'கிராமத்தில் நெல் வயல்களுக்குத் தீ வைத்ததற்கு வரதராஜன்தான் காரணம் என்று சநாதனிகள் கொடுத்த தகவலின் பேரில், அவனைப் போலீஸார் கைது செய்ததாக' வெளியாகியிருந்த செய்தியை ஜகன்னாதய்யங்காரும் படித்துவிட்டு, அவனை விடுதலை செய்வதற்குப் பிரயத்தனம் செய்தார். ஒன்றும் பலிக்கவில்லை. வரதராஜனும் 'மன்னிப்புக் கேட்டுக்கொண்டு வெளியே வரமுடியாது' என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டான்.

உரிய காலத்தில் சூடாமணி பிரசவித்தாள். அன்று படுக்கையில் ஜுரமாகப் படுத்த ஜகன்னாதய்யங்கார் மறுபடியும் எழுந்திருக்கவில்லை. ஆராவமுதன் பிறந்த ஒரு மாதத்திற்கெல்லாம் வரதராஜன் விடுதலை செய்யப்பட்டான். ஆனால் மாமனார் வீட்டிற்கு வரவில்லை. சூடாமணி அப்பொழுதுதான் அறிந்து கொண்டாள்—தன் தாயார் தன் கணவனைத் தாழ்த்திப் பேசுவதையும், அன்

ணன் சீனு, வரதராஜன் பேரைச் சொன்னாலே சண்டைக்கு வருவதையும். ஆகவே தன் கணவன் அங்கு வராமலிருக்க வேண்டுமென்று அவள் கடவுளை வேண்டிக் கொண்டாள். குழந்தைக்கு ஐந்து மாதம் நிரம்பியதும் சுந்தரராஜனுடன் கணவன் வீட்டுக்குப் புறப்பட்டு விட்டாள்.

5

வருடம் நான்கு பறந்தோடி விட்டன. வரதராஜன் பக்கா காந்திப் பித்தனாகி யிருந்தான். சூடாமணி சேவாமணியாகி விட்டாள். பிறந்தகத்தில் போட்ட வைரங்கள் இப்போது அவள் உடலை அலங்கரிக்க வில்லை; கதர்ச் சேலைதான் அலங்கரித்தது.

அன்று வரதராஜன் வீட்டில் இல்லை; எங்கேயோ ஒரு கிராமத்திற்குப் போயிருந்தான். "ஸார்! தந்தி!" என்ற குரலைக் கேட்டுச் சூடாமணி திடுக்கிடவில்லை. 'சர்க்கா சங்கத்திலிருந்தோ, அல்லது காங்கிரஸ் காரியாலயத்திலிருந்தோ, இப்பொழுதெல்லாம் தன் கணவனுக்குத் தந்தி வருவது தான் சகஜமாயிற்றே!' என்று எண்ணிக் கொண்டே தந்தியை வாங்கிப் பிரித்தாள்.

"அப்பா மரணப் படுக்கையில் இருக்கிறார். சூடாவையும் குழந்தையையும் அழைத்துக் கொண்டு உடனே புறப்படவும்.

சுந்தரராஜன்."

இதைப் படித்ததும் சூடாமணியின் கண்களிலிருந்து 'பொலபொல' வென்று நீர் வடிந்தது. மணியைப் பார்த்தாள். பெட்டியைத் திறந்தாள். அன்று கணவன் வீட்டுக்குக் குழந்தையுடன் வந்தபொழுது, அண்ணன் சுந்தரராஜன் கொடுத்துச் சென்ற பத்து ரூபாய் அப்படியே இருந்தது. அதை எடுத்துக் கொண்டாள். குழந்தை ஆராவமுதனை எடுத்துக் கொண்டு மாமியாரிடம் சென்றாள்.

"அவர் வந்தால் கட்டாயம் வரச் சொல்லுங்கள்; நான் குழந்தையுடன் முன்னால் போகிறேன்" என்றாள்.

"உனக்கு யாரும் துணையில்லையே...! அவன் வந்த பின்..." என்று மாமியார் ஆரம்பிக்கும்போதே, "அவர் வந்த பின் என்னால் முகதரிசனம் கூடக் கிடைக்காது; கொஞ்சம் உயிரிருக்கும்போதே போய்ச் சேருகிறேன்!" என்று சொல்லிப் புறப்பட்டு விட்டாள்.

சென்னை

அகில இந்திய கதர் & சுதேசி பொருட் காட்சி சாலையில்



போனிக்ஸ்
பங்கா
மாடல் - 1948

ஸ்டால் நெம்பர் முதலிய பூரா விவரங்களும் பின்னர் அறிவிக்கப்படும்

வட ஆற்காடு, கோயமுத்தூர் ஜில்லாக்களுக்கும் மைசூர் சமஸ்தானத்திற்கும் சப்-டீலர்கள் தேவை

விவரங்களுக்கு:


ஆர். எம். எஸ்.
& கம்பெனி, லிமிடெட்

தென் சென்னைப் பிராந்தியங்களுக்கும் (சென்னை நகரம், சுதேச சமஸ்தானங்கள் உள்பட) பூரண விற்பனை உரிமையாளர்கள்

16, பிராட்வே : மதராஸ் - 1

போன்: 4060 தந்தி: "AREMESCO"

தூக்க மருந்து !



"இது அகில இந்திய ரேடியோ ! இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தன......!"

கட்டிலைச் சுற்றிச் சுந்தரவல்லியம்மாள், ஸ்ரீனிவாசராகவன், சுந்தரராஜன் மற்றும் சில உறவினர்கள் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தனர்.

முதலில் ஒரு தந்தி வந்தது. "யாருடா அடிச்சிருக்கா ?" என்றாள் தாயார்.

"பூமா" என்றான்.

"என்ன அடிச்சிருக்கா ?"

"'வயசாயிடுத்து; அவர் வயசுக்கு எல்லாம் அனுபவிச்சாச்சு. இனிமேல் ஒன்றுமில்லை. இப்போது என்னால் வர முடியாது. 'அவ'ரை அந்தப் பக்கம் மாத்தப் போறு, அப்போது வருகிறேன். பிராப்தமிருந்தால் பார்க்கிறேன்!' என்று அடிச்சிருக்கா, அம்மா !"

தாயாரின் முகத்தில் சிறிதே சப்புத் தட்டியது. அதை வெளிக்குக் காண்பித்துக் கொள்ளாமல், "நியாயந்தானே !" என்றாள். கிழவர் கண்களில் ஜலம் ததும்பியது.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் இன்னொரு தந்தி வந்தது.

"அம்மா ! அம்புஜம் அடிச்சிருக்கா ! 'நான் வந்து என்ன செய்யப் போகிறேன் ? அனாதைப் பெண்கள் கட்டிடத்திற்கு நான் கல் நாட்ட வேண்டும். நவநகரில் பெண்கள் கல்லூரியில் பரிசு வழங்க வேண்டும். நம்மால் ஆகிறது ஒன்றுமில்லை. ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ளுங்கள். அடுத்த மாதம் முதல் வாரத்திலே வருகிறேன்' என்று !"

இரண்டாவது ஏமாற்றத்தையும் சமாளித்துக் கொண்டாள் சுந்தரவல்லியம்மாள்.

"ஏன், அம்மா ! சின்னப் பெண்ணுக்கு விஷயம் சொல்லி யனுப்பிவீர்களா ? காத்தாப் பறந்து ஓடிவருமே அது !" என்றாள், வேலைக்காரி.

"ஆமாம், உடனே வருவாள் !" என்று அலுத்துக் கொண்டாள் தாயார்.

அவள் அம்மாதிரி சொல்லி வாயை மூடுவதற்குள், முன் வாசலில் ஒரு மாட்டு வண்டி வந்து நின்றது. கையில் குழந்தையை எடுத்துக்கொண்டு இறங்கினாள் சூடாமணி. வண்டிக்காரனிடம் சில்லறையைக் கொடுத்துவிட்டுத் தந்தை படுத்துக் கொண்டிருந்த கட்டிலருகில் வந்து நின்று "அப்பா!" என்றாள், கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் விட்டுக் கொண்டு. பிறகு சுந்தரவல்லியம்மாள் பக்கம் திரும்பி, "ஏன், அம்மா ! எனக்கு முதலிலேயே கடிதாசி போட்டிருக்கக் கூடாது ? காசும் பணமும் பதவியும் இல்லாவிட்டாலும் 'அப்பா' என்ற பாசம் கூடவா என்னிடம் இல்லை ?" என்றாள்.

தன்னுடைய கடைசிப் பெண்ணின் உருவத்தைப் பார்த்தவுடன் நோய் வாய்ப்பட்டுக் குழி விழுந்து மங்கிக் கிடந்த ஜகன்னாதய்யங்காரின் கண்களில் ஓர் அற்புதப் பிரகாசம் தோன்றியது.

"அப்பா ! நீங்கள் கூடவா என்மேல் இப்படியாகி விட்டீர்கள் ?" என்று அழுதாள்.

மெள்ளத் திணறியபடி, "சூடா ! எல்லோருக்கும் செய்த அளவு உனக்கு நான் ஒன்றும் செய்ய வில்லை..." என்று ஆரம்பித்தார் ஜகன்னாதய்யங்கார்.

இந்தச் சமயத்தில், "அம்மா ! இதோ பாரு, அப்பா வந்துட்டார் !" என்ற குழந்தையின் குரல் கேட்டு எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். ஆராவமுதனைத் தூக்கிக் கொண்டு வரதராஜன் வந்து கொண்டிருந்தான்.


ஜகன்னாதய்யங்கார் வெகு நிதானமாய், "வரதராஜா! வா, அப்பா! கலியாணத்திற்குப் பிறகு இன்னிக்குத்தானே இங்கே வரத் தோணிற்று, உனக்கு? அப்பா! நான் பேருக்குத்தான் பெரிய மனிதன் பட்டம், பதவி பெற்றவனே ஒழிய, உண்மையில் உலகப் போக்கை யறியாத சிறு மனிதன். பிறந்த குழந்தைகளையும் டம்ப வாழ்க்கையில் பழக்கிப் படாடோபத்தில் பாழ் செய்து விட்டேன். சூடாவின் நல்ல காலம், அவளுக்குத் தேச பக்தனாகிய நீ கணவனாக வந்தாய். அவள் குணக் குன்று. உனக்கு இனி ஒரு குறைவுமில்லை. என்னிடம் இருக்கும் சொற்ப ஆஸ்தியை உனக்கும் சூடாவுக்கும் எழுதி வைத்துவிட்டேன். இந்த வீடு எனக்குப் பின்னால் உனக்கே சொந்தம். இவைகளை வைத்துக் கொண்டு சுந்தரராஜனையும் உன்னைப்போல் சிறந்த தேச பக்தனாகச் செய். அது ஒன்றுதான் நீ எனக்குச் செய்யவேண்டியது...!" என்று சொல்லிக் கொண்டே கண்களை மூடினார்.

தெரு வாயிலில் கார் வந்து நின்றது. டாக்டர் உள்ளே நுழைந்தார். சூடாவின் 'அப்பா!' என்ற அலறல் அவளை அப்படியே திரும்பச் செய்தது.

6

ஜகன்னாதய்யங்காரின் அந்தியச் சடங்குகள் முடிவதற்கு முன்னமேயே ஸ்ரீனிவாச ராகவன் தந்தையின் ஏற்பாடுகளைக் கேள்விப்பட்டுக் கிடைத்தமட்டில் நகைகளையும் ரொக்கத்தையும் சுருட்டிக் கொண்டு மனைவியுடன் வெளியேறி விட்டான். பெண்களெல்லாம் 'விதியே' என்று ஒரு நாள் வந்து தாயாருக்கு ஆறுதல் சொல்லித் தங்கள் தங்கள் ஊருக்குப் போய்ச் சேர்ந்தார்கள். வரதராஜன் சுந்தரராஜனுக்கு உயிர்நேசனைப் போலாகி விட்டான்.

சுந்தரவல்லியம்மாள் தன் கடைசி காலத்தைச் சூடாமணியிடமே தள்ளி விடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டாள். சூடாவின் தன்னலமற்ற தியாகமும் சேவையும் எங்கும் பிரகாசித்ததுமன்றி, 'அவளே பாக்கியசாலி' என்று எல்லோராலும் பாராட்டப் பட்டாள்.



உங்களுக்குத் தேவையான என்ஜின், மோட்டார் பம்பு செட்டுகள் ஏராளமாகக் கைவசமுள்ளன.

தற்சமயம் 40 H. P. E. C. C. Make Slipering 960 R. P. M. மோட்டார், ரெயில்ஸ்(Rails)ஆயில் ஸ்டார்டருடன் ரெடி ஸ்டாக்கில் கைவசம் உள்ளது. தேவை உள்ளவர்கள் உடனே எழுதவும்.

ஸாம்ஸன் & கோ லிமிடெட்

மோட்டார் மெஷினரி வியாபாரிகள்

8-22, பிராட்வே [போன்: 4521] மதராஸ்



சரிதான்!

ஸார்ஜெண்ட் (ஒரு சோல்ஜரைப் பார்த்து):- உன் துப்பாக்கியை முதலில் எடுத்துச் சுத்தம் செய்வதற்கு முன் என்ன செய்வாய்?

சோல்ஜர்:— முதலில் துப்பாக்கியின் நம்பரைத்தான் பார்ப்பேன்.

ஸார்ஜெண்ட்:—எதற்காக?

சோல்ஜர்:—நான் என் துப்பாக்கியைத்தான் சுத்தம் செய்கிறேனா என்று தெரிந்து கொள்ளுவதற்கு!

★

எது அக்கிரமம்!

காரியதரிசி:—நேற்றைக்கு ஒரு அக்கிரமம் நமது சங்கத்தில் நடந்தது. உங்களுக்குத் தெரியுமா?

அங்கத்தினர்:—என்ன அது? எனக்குத் தெரியாதே!

காரியதரிசி:—நேற்று நான் நமது 'லைப்ரரி'ப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தேன். அப்பொழுது நம் அங்கத்தினர்கள் இரண்டுப் பேர் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர், 'இந்தக் காரியதரிசி வேலையை விட்டுப் போவதாயிருந்தால் ரூபாய் ஐம்பது நான் அவருக்கு வெகுமதியாகக் கொடுக்கத் தயார்!' என்று சொன்னார். என்ன அக்கிரமம், பாருங்கள்!

அங்கத்தினர்:— அப்படியா? நீங்கள் அந்த வெகுமதித் தொகையை நூறு ரூபாயாக்குங்கள். அவசியம் கிடைக்கும்!

★

எப்படி?

அம்மா குழந்தையை எடுத்துக் கொண்டு ஒரு சங்கீதக் கச்சேரிக்குப் போனாள். கச்சேரி கேட்கும்போது கத்தக் கூடாது என்று குழந்தைக்கு எச்சரிக்கை செய்திருந்தாள். கச்சேரி ஆரம்பமாகி, பாடகர் இரண்டு பாட்டுப் பாடினார்.

குழந்தை (அந்த இடை வேளையில்):— அம்மா, நான் இனிமேல் கத்தலாமா?

கரூர் லீலை!

ஒரு கிழவர் ரயில்வே ஸ்டேஷன் புக்கிங் ஆபீஸிலுள்ள ஒவ்வொரு ஜன்னல் வழியாகவும் ஏதோ விசாரித்தார்.

பெரியவர் (தம் பேரனிடம் வந்து):— தம்பி! எல்லா ஜன்னல்களிலும் திருவண்ணாமலைக்கு என்ன சார்ஜ் என்று விசாரித்துப் பார்த்தேன். எல்லாரும் ஒரே மாதிரிதான் சார்ஜ் சொல்லுகிறார்கள். ஆகையினால் நாம் இந்த ஜன்னலிலேயே வாங்கிக் கொள்ளலாம்!

★

நாணயம்!

கடை முதலாளி:—என் அப்பா, சுந்தர முதலியார் நம்ம கடையிலேதானே சாமான் வாங்குகிறார்? அவர் எப்படி? நாணய முள்ள மனிதர்தானே?

குமாஸ்தா:—அதை எப்படிச் சொல்ல முடியும்? அவர் காசு கொடுத்துத்தானே எல்லாச் சாமான்களையும் வாங்குகிறார்! அவர் கணக்கு வைத்துக் கொண்டால்தான் நிச்சயமாய்ச் சொல்ல முடியும்!

★

சிரமம்தான்!

"நான் பதினைந்து வருஷ காலமாக எழுதி வந்ததை யெல்லாம் உபயோக மற்றவை யென்று இப்பொழுதுதான் தெரிகிறது!"



"அப்படியானால் எழுதுவதை நிறுத்தி விடுகிறதுதானே?"

"இல்லையே, அதுதானே சிரமமாயிருக்கிறது! எனக்கு எழுத்துலகத்தில் நல்ல புகழ் கிடைத்திருக்கிறதே!"


டன்லப்
ஜூபிலி
1898 - 1948
50 வருஷ வளர்ச்சி
சென்ற காலத்தில் வழி காட்டியவர்கள்
வருங்காலத்தலைவர்கள்


1½ அணாவில்
உங்கள்
வலியிலிருந்தும்
ஜலதோஷத்திலிருந்தும்
சுகம்பெறலாம்
ASPRO
'ஆஸ்ப்ரோவும்'
இயற்கையும்
உங்களைக்
கைவிடமாட்டா
3 வில்லைகள் 1½ அணா
30 வில்லைகள் 15 அணா
உங்களுக்கு இதைப் படிக்க முடிகிறதல்லவா- படிக்க முடியாதவர்களுக்கு 'ஆஸ்ப்ரோ'வைப்பற்றி எடுத்துச் சொல்லி உதவிபுரியுங்கள்.
அனுபானம்: 1-3 வில்லைகள்
(இந்தியா) லிட்.
ASPRO
நிர்ப்பயம் - நிச்சயம் - நற்பலன்

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

231. நம் ஏற்பாடு போதாது போலும்!

சீதையினிடம் விடை பெற்றுக் கொண்ட அனுமன் அசோகவனத்திலிருந்து நடந்து போனான். போகும் வழியில் ஒரு வைமான பூந்தோட்டம் இருந்தது. சீதா பிராட்டியை இந்த அரக்கர்களிடையே விட்டுப் போகிறோமே என்ற வருத்தம் ஒரு பக்கம், பகையாளியின் பேரில் எரிச்சல் ஒரு பக்கம். ஆக இரண்டும் சேர்ந்து கோபத்தைக் கிளறிவிட்டது அனுமனது நெஞ்சில். பூந்தோட்டத்தை இப்படியும் அப்படியுமாகப் பிரித்துச் சின்னாபின்னம் செய்துவிட்டான்.

இந்த விஷயத்தைக் காவலாளர்கள் போய் ராவணனிடம் தெரிவித்தார்கள்.

அப்படியா காரியம், என்று சொல்லி நல்ல திடகாத்திரமான அரக்கர்களைக் கூப்பிட்டு குரங்கைப் பிடித்துக் கொண்டு வரச் சொன்னான். அவர்களும் போனார்கள். அனுமனைப் பிடிப்பதற்காக நெருங்கினார்கள். அனுமன் தாக்கின தாக்கில் அவ்வளவு பேரும் மாண்டார்கள்.

இந்தச் செய்தியைக் கேட்டான் ராவணன். "சரி, சரி, நீ போய் பிடித்துவா" என்று சம்புமாலி என்ற வீரனை அனுப்பினான். அவனும் அனுமனால் மாண்டான். அதையும் வந்து சொன்னார்கள். ராவணனுக்கு அபாரமாய்க் கோபம் வந்து விட்டது. அவனே குரங்கைக் கொல்லுவதற்காகப் புறப்பட்டான்.

அப்போது படைத் தலைவர்களான ஐந்து சேனாதிபதிகள் வந்து, தாங்களே போய்ப் பிடித்து வருவதாகச் சொல்லிப் போனார்கள். அவர்களும் மாண்டார்கள்.

ராவணனுக்கு ஆங்காரம் தாங்கவில்லை; அவனே புறப்பட்டுவிட்டான். அந்த வேளை அவனுடைய மகன் அட்சகுமாரன் வந்து "குரங்கைக் கொல்லுவதற்கு ராவணேசுவரனாகிய நீ எப்படிப் போகலாம். கூடவே கூடாது. இந்திரனைப் பிடித்து வர வேண்டும் என்று அன்று எனக்கு எவ்வளவோ ஆத்திரம். நீயோ அண்ணனை ஏவி விட்டாய். என் வீரத்தைக் காட்ட சந்தர்ப்பம் இல்லாது போய்விட்டது. ஆகையால் இந்தக் குரங்கைப் பிடித்துவர எனக்கு அனுமதி கொடு" என்று ரொம்பவும் வாதாடினான்.

ராவணனும் இசைந்தான். அட்சகுமாரனும் அனுமன் இருந்த இடம் சேர்ந்தான். வில்லை எடுத்து அம்பு தொடுக்கப் பார்த்தான் அட்சகுமாரன். அனுமன் அதற்குள் அவன் மேல் பாய்ந்து வில்லை ஒடித்துவிட்டான். இருவரும் ஒருவரையொருவர் தாக்கினார்கள். திடீரென்று அரக்கனைக் கீழே தள்ளி அவன் முதுகில் உட்கார்ந்து கொண்டான் அனுமன். அரக்கனால் அசைய முடியவில்லை. அவனைத் தரையில் அப்படியும் இப்படியுமாகத் தேய்த்தான். அட்சகுமாரனும் மாண்டான்.

கடைசியாக இந்திரஜித்தே வந்தான். அனுமனுக்கு இதெல்லாம் வேடிக்கையாக இருந்தது. 'சரி, என்ன நடக்கிறது பார்ப்போம்' என்று நின்று கொண்டிருந்தான். இந்திரஜித்து அனுமன் மேல் ஒரு பாசக் கயிற்றை வீசினான். அந்தக் கயிறு அனுமனைச் சுற்றிக்கொண்டது. அப்படியே அனுமனைக் கயிற்றால் இறுகக் கட்டினான். கட்டிப் பிடித்துக் கொண்டுபோய் ராவணன் முன்னிலையில் சேர்த்தான்.

அனுமனைப் பார்த்து "நீ யார்?" என்று ராவணன் கேட்டான்.

அனுமன் சொல்லுகிறான் :

"எங்கும் நிறைந்தவனுய் உள்ள இறைவன் எப்படிப் பட்டவன் என்பது உனக்கும் தெரியும். எங்கும் நிறைந்துள்ள காரணத்தால் அவனுடைய உருவத்தில் முடியென்றும் நடு என்றும் அடி என்றும் கிடையாது. அவன் அநாதியாய் உள்ளவன். இன்றும் இருக்கிறான் ; இனி என்றென்றும் இருப்பவன்.

"எந்தத் தத்துவம் கொண்டும் அளக்கமுடியாதவன். அதாவது நீளம், அகலம், கனம் என்ற உடல் தத்துவத்தைக் கொண்டும் அளக்க முடியாது. சொல்லாலும் அளக்க முடியாது ; சிந்தையாலும் அளக்க முடியாது.

"அவனே எல்லாத் தத்துவங்களுக்கும் காரணமாய் உள்ளவன்.

"படைக்கிற பிரம்மா, காக்கிற திருமால், தன்மயமாய் ஒடுக்குகிற சிவன் ஆகிய மூவரும் அவனே தான்.

"இந்தப் பரம்பொருள் என்ன செய்தான். சொல்லுகிறேன் கேள் :

மூலமும் நடுவும் ஈறும்
இல்லதாய் மும்மைத்தாய
காலமும் கணக்கும் நீத்த
காரணன்,—கைவில்ஏந்திச்,
சூலமும் திகிரிசங்கும்
கரகமுந் துறந்து,தொல்லை
ஆலமும் மலரும்வெள்ளிப்
பொருப்பும்விட்(டு) அயோத்தி
[வந்தான்.

[மூலமும் நடுவும் ஈறும் இல்லதாய் : இடம் பற்றிய அவனுடைய உருவத்துக்கு முடி நடு அடி என்ற பாகுபாடு இல்லாததாய் : ஆதி அந்தம் முடிவு என்ற காலப் பாகுபாடும் இல்லாததால் ; கணக்கும் நீத்த : அளவிடுதல் என்பது இல்லாத : காரணன் : எல்லாவற்றுக்கும் ஆதி காரணமாய் உள்ள தனிப்பெரும் பரம்பொருள் ; கைவில் ஏந்தி : கையில் வில்லை ஏந்தியவனாய் ; சூலமும் : சிவனுக்குரிய திரி சூலத்தையும்; திகிரி சங்கும்: திருமாலுக்குரிய சக்கரம் சங்கு இவைகளையும் ; கரகமும் : பிரமனுக்குரிய கலசத்தையும் ; துறந்து : விட்டு விட்டு ; தொல்லை ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு : பூர்வமான ஆல் இலை, தாமரை மலர், கைலையங்கிரி இவைகளையும் விட்டு ; அயோத்தி வந்தான் : அயோத்தியில் அவதரித்தான்.

குறிப்பு :—செய்யுளிலுள்ள அபூர்வமான பாவம் அனுமனைக், கம்பரைத், தமிழை ஆக மூன்றையுமே இனம் காட்டுகிறது.]

"அயோத்தியில் அவதரித்த இத்தகைய பரம்பொருளே என்னை இங்கே அனுப்பி யிருக்கிறது" என்று ராவணனுக்குப் பதில் சொன்னுன்.

இந்தச் சொல் ராவணனுக்கு அடங்காத கோபத்தை மூட்டி விட்டது. "கொல்லுங்கள் குரங்கை" என்று கட்டளை யிட்டான்.

அப்போது ராவணனது தம்பியான விபீஷணன் வந்து, கொல்ல வந்தவர்களைத் தடுத்து, ராவணனிடம் "இது தகாது. தூதனுக வந்தவனைக் கொல்லுதல் எந்த விதத்திலும் கூடாது. நீதி முறைக்கு அடுக்காதது" என்று மிக்க ஆத்திரத்தோடும் பரிவோடும் சொன்னுன்.

தொலையட்டும் என்று சொன்னுன் ராவணன். அனுமனை அப்படியே விட்டிருக்கலாம். ஆனுல் அப்படி செய்யவில்லை. அனுமனது வாலில் பந்தத்தைச் சுற்றி நெருப்பை வைத்து அவிழ்த்துவிடச் சொன்னுன்.

வேலையாளர்கள் வந்து மிகப் பெரிதான பந்தத்தை வாலில் சுற்றினார்கள். எண்ணெய் விட்டார்கள். நெருப்பும் வைத்தார்கள். பந்தம் சுடர் விட்டெரிந்து கொண்டிருந்தது.

ஒரு நொடியில் ஒரு திமிறு திமிறினன் அனுமன். கட்டுகளும் கயிறும் சிதறி ஓடின. அப்படியே குதித்து நகரத்து வீடுகளின் மேல்ப் பாய்ந்து தாவித் தாவிப் போனுன்.

வீடுகள் எல்லாம் தீப்பற்றி, நகரம் முழுதும் ஒரே தீப்பிழம்பாய் எரிய ஆரம்பித்து விட்டது. லங்காதகனம் பூரணமாய் விட்டது.

அனுமனுக்கு இலங்கையில் ஜோலியில்லை ; கடலைக் கடந்து இக்கரை சேருகிறான்.

அனுமன் காரியம் இப்படியிருக்க, ராமன் இருந்த இடத்துக்கு நாம் போகவேண்டும்.

* * *

லக்ஷ்மி தேவியை ஒத்த சீதா பிராட்டியைத் தேடுவதற்காக வாயு

புத்திரனை அனுமனையும் தன் மற்ற படைகளையும் நாலா திசையிலும் அனுப்பி யிருந்தான் சுக்கிரீவன். அப்படி அனுப்பி யிருந்த நிலையில், ஒரு நாள் ராமன் பக்கத்தில் உட்கார்ந்தான்.

சேற்றின மரைமலர்த்
திருவைத் தேர்கெனக்,
காற்றின்மா மகன்முதல்
கவியின் சேனையை
நாற்றிசை மருங்கினும்
ஏவி, நாயகன்
தேற்றினன் இருந்தனன்
கவியின் செம்மலே.


[சேற்றின மரைமலர்த் திருவை: சேற்றில் உண்டாகும், அன்று பூத்த தாமரை மலரில் இருக்கும் லக்ஷ்மியை—சீதா பிராட்டியை; தேர்க என: தேடும்படியாக; காற்றின் மாமகன் முதல்: வாயு புத்திரனை அனுமன் முதலான; கவியின் சேனையை: குரங்கினத்தாராகிய படையை; நாற்றிசை மருங்கினும் ஏவி: நாலா பக்கமும் போகச் செய்து; நாயகன் தேற்றினன் இருந்தனன் கவியின் செம்மலே: ராமனை மனம் தேறும்படியாகச் செய்து கொண்டு பக்கத்தில் இருந்தான் குரங்குகளுக்கு அரசனான சுக்ரீவன்!]

ராமன் மிக்க துயரத்தில் ஆழ்ந்திருக்கிறான். "நாம் செய்திருக்கும் ஏற்பாடு ஒன்றும் போதாது. பெரிய அவமானத்துக்கு உள்ளாகப் போகிறோம் போலிருக்கிறது!" என்று சுக்ரீவனிடம் சொல்லுகிறான்.

ஆரியன் அருந்துயர்க்
கடலின் ஆழ்பவன்,—
'சீரிய(து) அன்றுநம்
செய்கை; தீர்வரும்
பூரிய வெம்பழி
பொடித்த தாம்'எனச்,
சூரியன் சிறுவனை
நோக்கிச் சொல்லினான்.

[ஆரியன் அருந்துயர்க் கடலின் ஆழ்பவன்: ராமன் பெருந்துயருக்கு உள்ளானவனாய்; சீரியது அன்று நம் செய்கை: நம்முடைய ஏற்பாடு சரியாக இருப்பதாகத் தோன்றவில்லை; தீர்வரும் பூரிய வெம்பழி பொடித்ததாம் என: என்றென்றைக்கும் தீராத, கீழான அவமானம் உண்டாகப் போகிறது என்று; சூரியன் சிறுவனை நோக்கிச் சொல்லினான்: சுக்கிரீவனைப் பார்த்துச் சொல்லுகிறான் ராமன்.]

'சீதையைத் தேட ஏதோ பலரை அனுப்பினோம். ஆனால் கண்டு பிடிப்பார்கள் என்று தோன்றவில்லை' என்பதாக மனம் இடிகிறது ராமனுக்கு.



புது டில்லி கலா மந்திரத்தின் ஆதரவில் நாட்டியக் கலை கற்பிக்கும் வகுப்பை ஸ்ரீமதி தேவதாஸ் காந்தி ஆரம்பித்து வைத்தார். (நடன வகுப்பை நடத்துகிறவர்கள் நிருத்ய சம்ராட் கோபாலகிருஷ்ணனும் நடன ராணி ரமணியும்.)

மௌன விரதம்



ரா. விழிநாதன்

"அம்மா, அம்மா" என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான் சந்திரசேகரன்.

"என்ன சந்துரு?" என்று கேட்டாள் அவன் தாயார்.

"இன்றுமுதல் நான் கால் மண்டலத்துக்கு மௌனவிரதம் இருக்கலாம் என்றிருக்கிறேன்" என்றான் சந்திரசேகரன்.

"எதற்காக?"

"மௌனவிரதம் இருந்தால் கோபதாபம் எல்லாம் போய்விடுமாம். அடக்கம் ஏற்படுமாம். பெரியவர்கள் 'மௌனம் சர்வார்த்த சாதனம்' என்று சொல்லியிருக்கிறார்கள். மகாத்மா காந்தி, சங்கராசாரிய ஸ்வாமிகள் போன்ற பெரியவர்கள் கூட 'மௌன விரதத்திலுள்ள எத்தனையோ நன்மைகள் இருக்கின்றன' என்று வாரம் ஒரு முறை மௌனம் அனுஷ்டித்திருக்கிறார்கள். அதே போல நானும் இருந்து பார்ப்போமே என்று எண்ணுகிறேன்" என்றான் சந்திரசேகரன்.

"வர வர நீ போகிற போக்கைப் பார்த்தால், உனக்குப் பித்தம் தான் தலைக்கேறிவிட்டதோ என்று தோன்றுகிறது" என்றாள் தாயார்.

"இல்லை அம்மா......" என்று வாயாட ஆரம்பித்தான் சந்திரசேகரன்.

"சரி, உன்னிஷ்டப்படியே செய்" என்றாள் தாயார்.

மறுநாள் காலை மௌன விரதி சந்திரசேகரன் வாசற்புறத்து ஒட்டுத் திண்ணையில் மேற்குத் திக்கை நோக்கி உட்கார்ந்திருந்தான். அவனுடைய தாயார் நிலைப்படியைப் பிடித்துக்கொண்டு அவனைப் பார்த்தவாறு நின்றுகொண்டிருந்தாள்.

அதே சமயம் வீட்டுவாசலில் ஒரு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய ராமமூர்த்தியைப் பார்த்ததும், "வா, ராமமூர்த்தி! இப்பொழுதுதான் வருகிறாயா? உடம்பு சௌகரியமாயிருக்கிறதல்லவா?" என்று தாயார் அன்புடன் வரவேற்றாள். வாசற் திண்ணையிலேயே உட்கார்ந்திருந்த அவனுடைய சகோதரன் சந்திரசேகரன் 'வா' என்றுகூடச் சொல்லாமல் வாயடைத்தபடி உட்கார்ந்திருந்தான். ராமமூர்த்திக்கும் அவனுக்கும் அவ்வளவாகப் போகாது. அதிகம் பேச்சுவார்த்தைகூடக் கிடையாது. இருந்தாலும், சந்திரசேகரன் இதுவரை 'வா' என்றுகூடச் சொல்லாமல் இருந்ததில்லை.

ராமமூர்த்திக்குத் தன் தமையன் மௌன விரதம் அனுஷ்டிப்பது தெரிந்திருந்தால் தானே? சந்திரசேகரன் இப்படிப் பாராமுகமாக இருந்தது அவனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. இருந்தாலும் அவன் ஒன்றும் பேசாமல் விரைப்பாகத் தன் தாயாருடன் கூடவே உள்ளே சென்றுவிட்டான்.

ராமமூர்த்தி திருச்சிராப்பள்ளியில் நேஷனல் ஹைஸ்கூலில் படித்துக்கொண்டிருந்தான். சந்திரசேகரனுக்குத் தன் தம்பி மீது அளவிலாத பற்றுதல்தான் என்றாலும், அவன் அடாபிடிச் செலவு செய்வதும், தான்தோன்றித்தனமாக ஊர் சுற்றுவதும் பிடிக்கவில்லை. ஆகவே தன் தம்பியை அநேகம் தடவை அளவுக்கு மீறியே கடிந்துகொண்டிருக்கிறான். இருந்தாலும் தம்பி வெளியிலிருந்து வந்தால் முகத்தில் இனிமையை வரவழைத்துக் கொண்டு, 'வா அப்பா' என்று வரவேற்பது உண்டு.

ராமமூர்த்திக்கு உள்ளே போய்த் தன் தாயாருடன் பேச்சுக் கொடுத்த பிறகுதான் சந்திரசேகரன் பதினைந்து நாட்களுக்கு மௌன விரதம் அனுஷ்டிக்கிறான் என்ற விஷயம் தெரிய வந்தது.

"எதற்காக இந்த மௌன விரதமாம், அம்மா?" என்று கேட்டான் ராமமூர்த்தி.

"கோபத்தை அடக்குவதற்கும் சாந்தத்தை வரவழைத்துக் கொள்வதற்கும் மௌனம்தானே நல்ல சாதனமாம். அதற்காகத் தானும் மௌனவிரதம் அனுஷ்டிக்கப் போவதாகச் சொல்லி நேற்று முதல் கொண்டு மௌனமாயிருந்து வருகிறான்" என்றாள் தாயார்.

"ஆமாம்; இவருக்குத்தான் எதற்கெடுத்தாலும் மூக்குக்குமேலே கோபம்

வருகிறதே! அப்படியிருக்கிறவராலே மௌனவிரதம் எப்படி அனுஷ்டிக்க முடியப் போகிறது?" என்று கிண்டலாகக் கேட்டான் ராமமூர்த்தி.

"ஏதோ அவன் இருந்துவிட்டுப் போகிறான். உனக்கு என்ன?......ஆமாம், அப்புறம் அக்கா ஏதாவது சொன்னாளா? அவள் வீட்டில் குழந்தை குட்டிகள் எல்லாரும் சௌக்கியமா?" என்று கேட்டாள் தாயார்.

"எல்லாரும் சௌக்கியந்தான். அக்கா வரும்பொழுது நல்ல மாவடுவாகக் குறுணி-பதக்கு வாங்கி, முடிந்தால் ஊறுகாய் போட்டுக் கொண்டு வரச் சொன்னாள்" என்றான் ராமமூர்த்தி.

"சரி. போட்டுக் கொடுத்தால் போகிறது" என்றாள் தாயார்.

திண்ணையில் உட்கார்ந்திருந்த சந்திரசேகரன் அவர்களுடைய சம்பாஷணையை ரசித்துக் கொண்டுதான் இருந்தான்.

மத்தியானம் மணி பன்னிரண்டு இருக்கும். தாயார் இலையைப் போட்டபின் சந்திரசேகரனையும் ராமமூர்த்தியையும் சாப்பிடக் கூப்பிட்டாள். இருவரும் உட்கார்ந்த பின் பரிமாறலானாள்.

"அம்மா, கருணைக் கிழங்கு மசியல் பண்ணியிருக்கிறாய் போலிருக்கிறதே!" என்றான் ராமமூர்த்தி.

"ஆமாம். உனக்குப் பிடித்த சமையலாகத்தான் பண்ணியிருக்கிறேன். இந்த காலத்தில் பட்டண வாசத்திலே நாக்குக்கு ருசியாக என்ன சாப்பிட முடியப்போகிறது? அரை வயிற்றுக்கும் கால் வயிற்றுக்கும் 'ஏதோ சாப்பிட்டோம்!' என்று பெயர் பண்ணிக் கொண்டு கிடக்க வேண்டும். அப்படித்தானே?"

"ஆமாம், அம்மா. என்ன இருந்தாலும் கிராமாந்திரம் கிராமாந்திரம்தான். எதற்கும் இங்கே இருக்கிற வசதிபோல அங்கெல்லாம் ஏது?" என்று ராமமூர்த்தி ஆமோதித்தான்.

இந்த சமயம் சந்திர சேகரன் லேசாகக் கனைத்தான். இரண்டு நாட்களாக அவனுடைய மௌன விரதத்தில் பழக்கப் பட்டிருந்த தாயார் திரும்பிப் பார்த்து "என்ன வேண்டும்?" என்று கேட்டாள்.



சந்திரசேகரன் கைவிரல்களில் மூன்றைக் குவித்து வைத்துக்கொண்டு, ஜாடை காட்டினான். தாயார் யோசித்து யோசித்துப் பார்த்தாள். அவன் என்ன கேட்கிறான் என்றே அவளுக்குப் புரியவில்லை.


"என்ன? என்ன வேண்டும்?" என்று கேட்டாள் அவள்.

சந்திரசேகரன் கையினால் ஜாடை காட்டினானே தவிர வாய் திறக்கவில்லை. எப்படி வாய் திறப்பது? அவன்தான் மௌன விரதம் அனுஷ்டிக்கிறானே? வாயைத் திறந்தால் மௌன விரதம் பங்கமாகி விடாதா! தாயார் இன்னும் புரிந்து கொள்ளாமல் இருப்பதைக் காண அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஆனால் மௌன விரதம் ஆத்திரத்தை வெளிக் காட்டிக் கொள்ள விடவில்லை.

தாயார் தன் மூளையை எவ்வளவோ குழப்பிக் கொண்டு பார்த்தாள். அவளுக்கு ஏதாவது விளங்கினால்தானே? ஒன்றும் புரியாமல் அவள் அவன் இலையைப் பார்த்தாள். கருணைக் கிழங்கு மசியல் செய்திருப்பது நினைவுக்கு வந்தது. உடனே ராமமூர்த்தியைப் பார்த்து, "மசியல் காருகிறதோடா?" என்று கேட்டாள்.

இந்தக் கருணைக் கிழங்குக்கே தனி விசேஷம் உண்டு. ஒருவர் கேட்கா

ஒரு சின்னத் தவறு!



டிராம் வண்டியில் தூங்கியதன் பலனாக் கிழவரின் கம்பளி பனியனுக்கு வந்த ஆபத்து!

விட்டால், அது எவ்வளவு காரினாலும் அவ்வளவு காருவதாகத் தோன்றுவதில்லை. யாராவது கேட்டுவிட்டால் போதும், காராமல் இருந்தாலும் காருவது போலத் தோன்றும். அம்மா கேட்டதுதான் தாமதம், ராமமூர்த்திக்கு அடித் தொண்டையில் அது சற்றுக் காருவது போலத் தோன்றியது.

"ஆமாம், அம்மா! கொஞ்சம் காரத்தான் செய்கிறது" என்றான் அவன்.

"சரிதான்" என்று கூறிய வண்ணம் தாயார் பிறைக்குச் சென்று கொஞ்சம் புளியை உருட்டிக் கொண்டு வந்து, சந்திரசேகரனின் கலத்தில் போட்டாள். "இப்பொழுதுதான் எனக்குப் புரிந்தது. இதுதானே கேட்டாய்?" என்று முகத்தில் வெற்றிக்குறி தாண்டவமாடக் கேட்டாள்.

சந்திரசேகரன் ஆந்தைபோல விழித்தான். அவன் கேட்ட வஸ்து அதுவல்லவே! 'இல்லை' என்பதற் கறி குறியாகக் கையை அசைத்து மறுபடியும் முன்போலவே கை விரல்களைக் குவித்துக்கொண்டு சமிக்ஞை செய்து காட்டினான்.

தாயாருக்கு அப்பொழுதும் விளங்கவில்லை. ஆகவே அவன் இலையின் நுனிப் பக்கத்தைச் சுட்டிக் காட்டினான்.

தம்பி ராமமூர்த்தி விஷயத்தைப் புரிந்து கொண்டு விட்டவன்போல, "சரியாப் போச்சு! சாம்பாருக்குக் கொஞ்சம் உப்புக் குறைச்சல். உப்புக் கேட்கிறாப்போலிருக்கிறது!" என்றான்.

சந்திர சேகரனின் முகம் சுருங்கியது. ஆத்திரத்தின் அறிகுறி முகத்தில் தாண்டவமாடியது. திரும்பத் திருப்பச் சைகை காட்டுவதை மட்டும் அவன் நிறுத்தவில்லை.

தாயார் தன் மூளைக்கு ஒன்றும் எட்டாமற் போகவே, "அது என்ன எழவோ? நல்ல மௌன விரதம் வேண்டிக் கிடந்தது!" என்று அலுத்துச் சலித்துக் கொண்டாள்.

சந்திரசேகரனால் தன் ஆசையை அடக்க முடியவில்லை. எப்படி முடியும்? விசுவாமித்திரர் போன்ற பெரிய பெரிய ரிஷி முனிகளால்கூட ஆசையை அடக்க முடியவில்லையே! தான் விரும்புவதை எப்பாடுபட்டாவது அடைய வேண்டும் என்று நினைத்து அவன் எத்தனையோ விதமான யுக்திகளைக் கையாண்டான். எத்தனை கரணம் போட்டும் தன் காரியம் பலிக்காமற்போகவே, "அட கர்மமே!" என்பது போல இடது கையால் தலையில் அடித்துக் கொண்டான்.

ராமமூர்த்திக்கு இவற்றைக் காணச் சிரிப்பாய் வந்தது. வாய்விட்டுச் சிரித்து விட்டால், இருக்கிற கோபம் போதாது என்று அண்ணா இன்னும் கோபித்துக் கொண்டு விடுவானோ என்ற பயம் அவனுக்கு. கொஞ்ச காலமாகத்தான் அண்ணாவிடம், 'நல்ல பிள்ளை' என்ற பெயர் வாங்க முடிந்தது. அந்தப் பெயரைக் கெடுத்துக் கொள்ள விரும்பாத ராமமூர்த்தி வந்த சிரிப்பைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான்.

தாயாரும் ஆத்திரம் தாங்காமல், "இந்த மாதிரிப் பித்தையும் பயித்தியத்தையும் கட்டிக் கொண்டு யார் மாரடிக்கிறது? மௌன விரதமாம் மௌன விரதம்!" என்று இரைந்தாள்.

சந்திரசேகரன் சகிக்க மாட்டாமல் 'வ-வ-வ' என்று கீழ் உதட்டை மேற் பற்களால் கடித்துச் சமிக்ஞை செய்தான்.

அவன் அழகுதான் காட்டுகிறானாக்கும் என்று தாயார் எண்ணி விட்டாள். "நல்ல அழகு வேண்டியிருக்கிறது! உன் அழகு உனக்கே இருக்கட்டும். நான் இருக்கிற

அழகு போதும். பேசாமல் வாயை மூடிக் கொண்டு சோற்றைத் தின்றுவிட்டுத் தொலை!" என்று கடிந்து கொண்டான்.

இருமினால் சத்தம் கேட்க வில்லையா? விக்கினால் சத்தம் கேட்கவில்லையா? அதே போல 'வ' என்ற சொல்லை மட்டும் சொன்னால் மௌன விரதத்துக்குப் பங்கம் ஏற்பட்டு விடாது. 'ஆபத்துக்குத் தோஷமில்லை' என்ற 'ஆபத் தர்மம்' வேறு இருக்கிறது என்ற தீர்மானத்துக்கு வந்தவனாய்ச் சந்திரசேகரன், 'வ-வ-வ-' என்று சொன்னான்.

"உனக்குச் சோறு போடுவதற்குள் என் பிராணனே போய்விடும் போலிருக்கிறது. நீ சாப்பிட்டால் சாப்பிடு, சாப்பிடா விட்டால் போ" என்று சொல்லிக் கொண்டே தாயார் 'விடு விடு'வென்று சமையலறையை விட்டு வெளியேறலானாள்.

சந்திரசேகரனுக்கோ ஆத்திரம் தாங்க வில்லை. அவன் வெளியே போவதைக் கண்டதும், 'வ-வ-வ' என்று இழுத்துக் கொண்டிருந்தவன் "வடுமாங்காய் போடு அம்மா!" என்று வாக்கியத்தை முடித்தான்.

பாதித் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த ராமமூர்த்திக்கு சந்திரசேகரனின் வடுமாங்காய் என்ற சொல்லைக் கேட்டதும், அடக்க முடியாத சிரிப்பு வந்து புரைகட ஏறி விட்டது! சந்திர சேகரனும் 'கலீர்' என்று சிரித்து விட்டான். சமையலறை வாசற்படியைத் தாண்டிக் கொண்டிருந்த தாயாரும் வயிறு புண்ணாகும்படி சிரித்த வாறு வடுமாங்காய் எடுத்துப் போடுவதற் காகத் திரும்பி உள்ளே வந்தாள்.

"அம்மா! அண்ணாவின் மௌனத்துக்கு முற்றுப் புள்ளி வைத்த இந்த மாவடுவின் மகிமையே தனிதான்" என்றான் ராமமூர்த்தி சிரித்துக்கொண்டே.

"அதில் என்ன சந்தேகம்? மனஸ்தாபத்தை மறந்து நம்மிருவரையும் சிரிக்க வைத்த மாவடுவின் மகிமையே தனிதான்" என்று சந்திரசேகரனும் ஆமோதித்தான்.

ஆனால் தாயார், "மாவடுவுக்கு என்ன மகிமை வந்தது? மௌன விரதம்தானே மாவடுவின் மதிப்பை உயர்த்தியது? ஆகையால் மௌனத்தின் மகிமையைத்தான் மேலானதாகச் சொல்ல வேண்டும்" என்று சிரித்துக்கொண்டே சொன்னான்.

உரோமத்தை உதிர்த்து

உருவைக் குலைக்கும்

சரும வியாதிகளை

உலகப் புகழ் பெற்ற ஜாம்பக் சொஸ்தமாக்கும்



உரோமம் உதிர்ந்து உருக்குலைக்கும் சரும வியாதிகளால் அவதியுறுவானேன்? சதிவர ஜாம்பக் உபயோகித்து வந்தால் அந்த ரோகங்களைப் போக்கி உங்கள் சருமத்திற்கு ஆரோக்யமளிக்கிறது. ஜாம்பக்கிலுள்ள அபூர்வமான மூலிகை மருந்து சத்துக்கள் சருமத்தின் ஊடே சென்று விடுகின்றன. அதனால்தான், ஜாம்பக் வெகு விரைவில் - நமைச்சல் வேக்காடுகளை ஆற்றி, சருமத்திலேற்படும் கசிவைத் தடுத்து வியாதிக் கிருமிகளைக் கொன்று, புண்பட்ட சருமத்தைப் பண்படுத்துகிறது. மிருகக் கொழுப்பு கலப்பற்றது என்பதற்கு உத்தரவாதம்



எப்பொழுதும் உபயோகியுங்கள் **Zam-Buk**

ஆறுதலளித்து குணமாக்கும் கிருமிநாசனக் களிம்பு

வட்ட மேஜை

பாளையங்கோட்டை
4—11—48

★ வெற்றிக்கு வழி

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு

'பூரண மதுவிலக்குத் திட்டம்' நமது சென்னை மாகாணத்தில் அமுலுக்கு வந்து விட்டதைக் குறித்து ஒவ்வொரு தேசாபிமானியும் பெருமகிழ்ச்சி யடைவான் என்பதில் ஐயமில்லை. ஆயினும் மதுவிலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதில் எல்லோருக்கும் பெரும் பொறுப்பு இருக்கிறது என்பதை யுணரவேண்டும்.

ஆகவே, அரசாங்கத்தார் ஒவ்வொரு கிராமத்திலும், பட்டணத்திலும், தாலுக்காவிலும், ஜில்லாவிலும் 'விஜிலன்ஸ் கமிட்டிகள்' எனப்படும் 'உஷார் குழுக்களை' நிறுவ வேண்டும். அதில் மதுவிலக்குத் திட்டத்தில் பரிபூரண நம்பிக்கை கொண்ட தேசிய வாதிகளை அங்கத்தினர்களாக நியமிக்க வேண்டும். அந்தந்த ஸ்தல காங்கிரஸ் ஸ்தாபனங்களின் ஆலோசனையை அனுசரித்தே இவ்வித நியமனங்கள் செய்வது நலம். 'உஷார் குழுக்கள்' தத்தம் பிரதேசத்திலுள்ள மதுவிலக்கு அதிகாரிகளுடன், மதுவிலக்குப் பிரசாரம் செய்தல், பொதுக் கூட்டங்கள் போடுதல், பொது ஜனங்களின் கவனத்தைக் கவர்ச்சி செய்யும் சத்கால க்ஷேபங்களுக்கு ஏற்பாடு செய்தல், துண்டுப் பிரசுரங்கள் தயாரித்து வினியோகித்தல், புகைப்படங்கள் காட்டுதல் ஆகிய பல வேலைகளிலும், கள்ளத்தனமாகக் கள் இறக்குதல், சாராயம் காய்ச்சுதல், மதுவருந்துதல் போன்ற குற்றங்களைக் கண்டு பிடிப்பதிலும் ஒத்துழைக்க வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக மதுவிலக்கு இலாகாவில் வேலை பார்க்கும் ஊழியர்கள், உத்தியோகஸ்தர்களாயினும் சரி, பொது ஜனப் பிரதிநிதிகளாயினும் சரி, தாங்கள் மதுபானம் அருந்துபவர்களாக இருக்கவே கூடாது. சட்டசபை அங்கத்தினர்களுக்கும் பெரும் பொறுப்பு ஏற்பட்டுள்ளது. அவர்கள் தங்களுடைய தொகுதிகளில் அடிக்கடி சுற்றுப் பிரயாணம் செய்து, மதுவிலக்கு வேலை வெற்றிகரமாக நடைபெறுகிறதா என்பதைக் கவனித்து வரவேண்டும்.

இவ்விதமாகப் பொது ஜனங்களும், அவர்களின் பிரதிநிதிகளும், உத்தியோகஸ்தர்களும் ஒத்துழைத்து, மதுவிலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தி வைத்து, மகாத்மா காந்தியின் ஆத்மா திருப்தி யடையும்படி பாடுபட வேண்டும்.

நா. கிருஷ்ணய்யர்

* * *

சென்னை
6—11—48

★ சுவரொட்டி விளம்பரம்

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு.

வியாபாரத்தை விருத்தி செய்வதற்கென்று சுவரொட்டி விளம்பரங்கள் மூலம் விளம்பரப்படுத்தி வருகிறார்கள்.

இந்த விளம்பரங்களில் பெண்களைத்தான் அதிகம் சித்திரவதை செய்கிறார்கள். அதிலும் ஆடைகளைப் பற்றிய விஷயங்களைக் கேட்கவே வேண்டாம். வாழ்க்கையில் துணிப் பஞ்சம் இருக்கிறதோ இல்லையோ, சித்திரத்தில் உள்ள துணிப் பஞ்சத்தைத் தீர்க்க திரௌபதிக்கு வந்த பரந்தாமன்தான் வர வேண்டும்போ லிருக்கிறது!

சினிமா விளம்பரங்களில் இந்த நிலை உச்சஸ்தானத்தை அடைந்திருக்கிறது. சினிமாவிலும் எவ்வளவு பக்தி, வீரம், காதல், சோகம் நிறைந்த கட்டங்கள் இருக்கின்றன. அவைகளை உணர்ச்சியுடனும், கவர்ச்சியுடனும் வரையலாமே! இப்படி ஆபாசமாக வரைவதின் காரணம் என்ன? சித்திரக்காரர்கள் வர்ணங்களை அதிகம் செலவழிக்காமல் இருப்பதற்காகக் கையாளும் முறையா? அல்லது சினிமாவில் நடித்தால் இப்படித்தான் நடிக்க வேண்டுமென்ற கட்டாயமா? வியாபாரத்தை விருத்தி செய்வதற்கு வேறு வழியில்லையா?

இப்படி சினிமாவில் மகா மோசமாக நடிப்பதும் பார்க்கத் தகாத முறையில் விளம்பரப்படுத்துவதும் ஜனங்களின் மனதைக் கெடுப்பதாகும். அதுவுமன்றி மதிப்பிற்குரிய இந்தியப் பெண்களின் அழகிய உருவத்தையும், மானமே பெரிதென்று மதிக்கும் கற்பரசிகளையும் இழிவுபடுத்தி அவமதிப்பதாகும்.

பெண்களின் மதிப்பைப் போற்ற வேண்டியது ஒவ்வொரு இந்தியனுடைய கடமை. ஆதலின் இத்தகைய செய்கையைச் செய்ய எந்த உண்மை இந்தியனும் இனி முன்வாராமலிருக்கவேண்டும்.

கே. ஜே. லக்ஷ்மி

* * *

மணப்பாடு
5—11—48

பார்த்திபன் கனவு

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு.

"பார்த்திபன் கனவு" என்னும் சொல், பொருள் இன்பங்கள் ததும்பும் சரித்திரத் தொடர் கதையை நமது ஊர்ப் புனித சூசையப்பர் உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் திறம்பட நடித்தனர். பள்ளி வருடாந்திர விழாவிற்குத் தலைமை தாங்கிய தூத்துக்குடி மேற்றிராணி ஆண்டவரவர்கள் நாடகச் சிறப்பைப் பற்றிக் கூறுங்கால், பழந்தமிழ் மன்னர்களின் தற்பண்பையும், நாட்டுப் பற்றுடைமையையும், தந்தையின் அவாவினை மைந்தன் பூர்த்தி செய்யும் விந்தையையும் கொண்டு நாடகம் மிளிர நிற்றலைப் புகழ்ந்து போற்றினர். தவிர அன்னையின் அன்பைப் பெரிதும் பாராட்டி வந்த மைந்தர்களும், செய்நன்றி மறவாச் செம்மையோர் வாழ்வது தமிழ்நாடு என்பதையும் எடுத்துக் காட்டுகிறது அச்சிரிய கதை என்றும் பகர்ந்தார். பகைவர் கொடுத்த வாக்காயினும் அதற்கு இறையும் பங்கம் உண்டாகா வாறு இயற்றி முடிக்கும் ஆற்றல் பெற்றிருந்தனர் பண்டைய மன்னர் எனவும் புகழ்ந்து பேசினார். நாடகம் பார்த்த மக்கள் கதையின் இனிய போக்கைக் கண்டு ஆசி கூறினர்.

தமிழ் அன்னையை மேன்நிலை எய்தச் செய்யுமாறு போற்றுநர் பல்லோர் முன் வந்து மாண்ட சீர்மையை மீண்டும் நாட்டுவித்து எழில் மிகும் கதைகளாலும் பாமாலைகளாலும் தமிழ் அன்னையை தாளிலத்தில் மாண்புறச் செய்யவேண்டும்.

தமிழன்பன்,

பி. பீ. மஸ்கரனுஸ்

*** *** ***

எச். எம். ஐ. எஸ். வெண்டுருத்தி
கொச்சி. 14—11—48

கடற் படை

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

சென்றவாரக் 'கல்கி'யில் தாங்கள் மாலுமியின் அட்டைப் படத்தைப் போட்டு எங்களை கௌரவித்த பின்னர் இங்குள்ளவர்கள் அனைவரும் இவ்வாரத்திய 'கல்கி' இதழ் வந்தவுடன் கப்பற் படையைப் பற்றித் தாங்கள் என்ன எழுதியிருக்கின்றீர்கள் என்று அறிய ஆவலுடன் என்னைச் சூழ்ந்து கொண்டனர். பலதிறப்பட்ட பாஷை பேசும் அனைவருக்கும் தாங்கள் 'டெல்லி'யைப் பற்றி எழுதியிருந்த உயர்தர விமர்சனத்தை எடுத்துரைப்பதிலேயே நான் முழுவதையும் கழிக்கநேர்ந்தது.

எங்கள் கப்பல்களுக்குச் சென்னைத் தமிழர் அளித்த வரவேற்பையும், தமிழர் பத்திரிகையான 'கல்கி' எங்கள் கப்பல்களின் விசேஷத்தைத் தமிழர்களுக்கு எடுத்துச் சொல்வதில் கொண்ட ஆர்வத்தையும் கண்டு எங்கள் உற்சாகம் கரை புரண்டோடுகிறது.

இவ்வாறு எங்களை மென்மேலும் உற்சாகப்படுத்தினால் சுதந்திர இந்தியாவைக் காக்கும் பணியில் நாங்கள் தலை சிறந்து விளங்குவோம் என்பதில் ஐயமுண்டோ! ஜே ஹிந்த்!

வி. எம். சுப்பிரமணியன்

*** *** ***

பங்களூர்
15—11—48

மருந்து விஷயம்

கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

நவம்பர் 7ம் தேதி கல்கி இதழில் நண்பர் கே. பி. விசுவநாதன் என்பவர் அமெரிக்காவிலுள்ள நாக்ஸ் கம்பெனி (Knox Co.) யாரால் தயார் செய்யப்படும் 1. சிஸ்டக்ஸ் (Cystex) 2. மெண்டாகோ (Mendaco) 3. வைடப்ஸ் (Vitabs) 4. அமோசான் (Amozan) முதலிய மருந்துகளைப் பற்றிக் குறைவாக எழுதியிருக்கிறார். இந்த மருந்துகள், வெளிநாட்டிலிருந்து வரும் மிகச் சிறந்த மருந்துகளுடன் சேர்க்கப்பட வேண்டியவை என்பதை என் சொந்த அனுபவத்திலிருந்து கூறுவேன். என் தாயார் சுமார் நாலு வருஷ காலம் ஆஸ்துமா நோயால் பாடுபட்டாள். கபம் தொண்டையை அடைத்துக் கொண்டு மூச்சு விடுவது பிராணவஸ்தையாக இருந்தது. இரவு படுக்கையில் தலை வைக்க முடியாமல் உட்கார்ந்து கொண்டே விருப்பாள். நாங்கள் பலவித இங்கிலீஷ் மருந்துகளும், இன்செக்ஷன்களும், பஸ்மங்களும், பலவான மருந்துகளும் கொடுத்தும் ஒருவித குணமும் ஏற்படவில்லை. ஆங்கில வைத்தியரான என் தகப்பனார் மெண்டாகோ (Mendaco) மாத்திரைகள் ஒரு பாட்டில் கொடுத்தார். அதைச் சாப்பிட்ட ஒரு வாரத்திற்குள் ஆச்சரியமான குணம் ஏற்பட்டது. இப்போது சென்ற ஒரு வருஷமாக என் தாயாருக்கு ஆஸ்துமா அவஸ்தை சிறிதும் இல்லை. இன்னொரு உதாரணம். சுமார் ஒரு வயது ஆன என் குழந்தை கரப்பான் வியாதியால் இரண்டு மாதம் சிரமப்பட்டது. பலவித மருந்துகள் போட்டும் ஒன்றிலும் குணம் ஆகவில்லை. கடைசியில் மேற்படி கம்பெனியாரால் தயார் செய்யப்படும் நிக்ஸோ டெர்ம் (Nixo derm) என்ற மருந்தைப் போட்ட மூன்றாவது நாள், கரப்பான் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. இன்னும் சிஸ்டக்ஸ், வைடப்ஸ் முதலிய மருந்துகளை உபயோகித்த எனது பல நண்பர்கள் அவை சிறந்த சக்தி வாய்ந்தவை என்று புகழ்கின்றனர். அதோடு அந்த மருந்துகளின் சேர்க்கைப் பொருள்களைப் பற்றி (Medical Formula) அந்த அந்த பாட்டில்கள் மேலேயே பகிரங்கமாக வெளியிட்டிருக்கின்றனர். அதில் இரகசியம் ஒன்றும் இல்லை.

ஏ. கே. டி. மூர்த்தி

[மேற்படி கடிதத்தில் குறிப்பிட்ட மருந்துகள் அமெரிக்காவில் சாஸ்திரீயமான முறைகளில் தயாரிக்கப் படுகின்றன வென்றும், அவற்றை அமெரிக்காவில் விற்பதற்கு யாதொரு தடையும் விதிக்கப்படவில்லை என்றும் அறிகிறோம். — ஆசிரியர்]

'கல்கி' ஆசிரியர் எழுதிய
சரித்திர காலத்தைச் சித்திரிக்கும்
மகோன்னத நவீனங்கள்

சிவகாமியின் சபதம்

மலிவுப் பதிப்பு ரூ. 9—0—0
பரிசுப் பதிப்பு ரூ. 15-0—0

பார்த்திபன் கனவு

விலை ரூ. 6—8—0

★

கவி ரவீந்திரநாத் டாகூர் எழுதிய


மகாத்மா காந்தி

விலை ரூ. 0—12—0

கிடைக்குமிடம் :

மானேஜர், "கல்கி"
கீழ்ப்பாக்கம் :: சென்னை

மறக்கவில்லை!



பெரியவர்:—அடியே! வெளியே போய் வந்துவிட்டேன் பார். குடையை மறக்காமல் எடுத்துண்டு வந்துட்டேன். குடையை எடுத்துக் கொண்டு போனால் திருப்பிக் கொண்டு வர மறந்துடுவேன்னு சொன்னாயே.

மனைவி:—இன்று வெளியே போகிறபோது குடையை எடுத்துப் போகவே யில்லையே!

கோயமுத்தூர்
27—10—48

பாரதி வாக்குப் பலிக்குமா?

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு

எங்கள் பள்ளியில் இடம் போதாக் குறையினால் சில நாட்கள் காலை 8 மணியிலிருந்து பகல் 12 மணி வரையிலும், மற்றும் சில நாட்கள் பகல் 1 மணியிலிருந்து மாலை 5-30 மணி வரையிலும் பள்ளிக்கூடம் வைத்திருக்கிறார்கள். இதனால் மாணவர்களாகிய எங்களுக்கு எவ்வளவோ கஷ்டங்கள் விளைகின்றன. உதாரணமாக மாலை 5-30 மணிக்குப் பள்ளிக்கூடம் விடும்போதே சூரியன் மலைவாயிலில் விழுந்து விடுகிறான். நாங்கள் வீட்டிற்குச் சென்று திரும்பி வருவதற்குள் நன்றாக இருட்டி விடுகிறது. ஆதலால் எங்களுக்கு ஓடி விளையாட நேரமில்லாமற் போகிறது. "ஓடி விளையாடு பாப்பா" என்ற பாரதியாரின் திருவாக்கு எங்கள் விஷயத்தில் பொய்த்து விடுகிறது! இனிமேலாவது இந்த விஷயத்தில் பள்ளி ஆசிரியர்கள் சிரத்தை காட்டுவார்களா?

பார்த்தசாரதி

* * * * * * * * *

மாம்பலம்
8—11—48

இதுவும் வேண்டும்....!

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு.

சென்ற வாரத்தில் சென்னை அரசாங்கத்தாரின் போக்குவரவு காரியதரிசி, விடுத்திருக்கும் அறிக்கையைக் காண எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது, தெரியுமா?

அஸ்திவார உத்தியோகஸ்தர்கள் எதைக் கொடுத்தாலும் எப்பொழுதும் பணம் அதிகம் வேண்டும் என்கிறார்களே! அவர்களுக்கு ஒரு வழி செய்திருக்கிறார்கள். எப்படி இருந்தாலும் பஸ்ஸில்தானே போகவேண்டும். அங்கே அவர்களிடமிருந்து அதிகப்படியாய்க் கொடுக்கும் பணத்தை பிடுங்கிக் கொள்ளலாம் என்பது அரசாங்கத்தாரின் கொள்கை போலும்!

தியாகராய நகரிலிருந்து பாரிஸ் முனைவரை பஸ்ஸின் கலகலவென்ற ஒலியைக் கேட்டுக்கொண்டு, மேடு பள்ளங்களில் ஆனந்தமாக ஏறி இறங்கி, இருப்பங்களில் ஒருவரின்மேல் ஒருவர் மோதிக்கொண்டு, முதுகுவலி உண்டாகும்படி மிகவும் ஆனந்தமாகப் பிரயாணம் செய்கிறார்களே, அதற்காக அவர்கள் நாலணாவையா கொடுத்தாலும் தகும், இன்னும் அதிகமாகக் கொடுத்தாலும் தகுந்தான்!

டி. எஸ். ஆர். சாரி

* * * * * * * * *

சென்னை
11—11—48

பஸ் கட்டணம்

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு.

சென்னையில் சர்க்காரே பஸ் சர்வீஸ் எடுத்துக் கொண்டு பிரயாணிகளுக்கு பாஸ் கொடுத்து உதவி செய்வார்கள் என்று நம்பிய சென்னைவாசிகளுக்குப் போன வாரம் ஒரு ஏமாற்றம் தரக்கூடிய செய்தி வெளியாயிற்று. அதாவது கட்டணங்களை சர்க்கார் உயர்த்தப் போவதாக வந்த செய்திதான்.

இப்பொழுதே கட்டணங்கள் அதிகம் என்று சொல்லும் பிரயாணிகளுக்கு இந்தச் செய்தி மிகவும் வருத்தம் அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. உதாரணமாக மயிலாப்பூரிலிருந்து பாரிஸ்கார்னருக்கு 0-4-6 அணாவாக மாறினால் ஒருசிறிய உத்தியோகஸ்தனுக்குப் போகவர 9-அணாவாகும். 60-ரூபாய் சம்பாதிக்கும் ஒரு உத்தியோகஸ்தனுக்கு மாதம் ரூபாய் 13-8-0 செலவானால் அவன் எப்படி இந்தக் கஷ்டகாலத்தில் வாழ்வது?

கம்பெனியே இந்த சர்வீஸை நடத்திய பொழுது கட்டணம் அதிகமாக ஏற்றினார்களா? அவர்களுக்கும் லாபம் வரவில்லையா? ஆகையால் அவர்களைப் போல் சர்க்காரும் தங்கள் ஜனங்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு இப்பொழுதிருக்கும் கட்டணத்தை உயர்த்தக் கூடாது. கூடியவரை ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டுமே தவிர கட்டணங்களை அதிகம் செய்வது கூடாது.

எம். கே. ராஜகோபாலன்

[பஸ் கட்டண உயர்வு அமுலுக்கு வந்து விட்டது. இதுவரை காங்கிரஸ் மந்திரிகள் செய்துள்ள தவறுகளில் இது ஒரு பெரிய தவறு என்று கருதுகிறோம். — ஆசிரியர்]

★★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ பாளையங்கோட்டை நா. கிருஷ்ணய்யருக்கும், சென்னை கே. ஜே. லக்ஷ்மிக்கும் ரூ. 12—8—0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.

உங்கள் நரம்புகள்!

வலுவுள்ளதாக உறுதியுடன் இருக்க வேண்டும் — அதுவும், ஓய்வில்லாத உழைப்பும் ஒழியாத கவலையும் நிறைந்த தற்கால வாழ்க்கையில்

அஸ்வான்

நீண்டகாலமாய் மனோபலமும் தேக திடனும் வியர்த்தமாகி யிருந் தாலும் ஈடு கொடுத்து போஷாக்கு அளிக்கக்கூடிய ஒரு உயர்ந்த டானிக்

இன்றே ஒரு பாட்டில் வாங்குங்கள் எப்போதும் கையிருப்பாய் வைத்திருங்கள்



சிறியோர்

•

முதியோர்

•

நோயாளிகள்

யாவருக்கும்

உகந்தது.

பெங்கால் கெமிகல்

கல்கத்தா :: பம்பாய்

ஏஜண்டுகள் :

என். தேசாய் கௌண்டர் & கோ.,
41, பந்தர் தெரு :: மதராஸ்

ஜீவான்ஜன்

ரசாயனக் களிம்பு
மிருகக் கொழுப்பு சேராதது



ஜலதோஷம், மார்சளி, உடம்பு வலி முதலிய சகல வேதனைகளுக்கும் நிவாரணமளிக்கிறது

•

தயாரிப்பவர்கள் :

ஜீவான்ஜன் லபாராடரீஸ் லிட்.
மதராஸ் - 14


சோல் ஏஜண்டுகள் :

K. K. பிள்ளை & கோ.,

15, வெஸ்ட்காட் ரோடு,
ராயப்பேட்டை :: மதராஸ் - 14



நீங்கள் உரிக்கும் ஒவ்வொரு
வாழைப்பழத்தோலிலுமிருக்கும்
அழுக்கினுலும் கிருமிகளாலும்
அபாயம் ஏற்படும்!
லைப்பாய் சோப்பினுல் அடிக்கடி
சுத்தம் செய்துகொள்ளுங்கள்!
லைப்பாய் சோப்
அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து
உங்களைக் காப்பாற்றுகிறது
LIFEBUOY
SOAP
L. 101-111 TM



வட இந்தியாவில் தென்னிந்தியர்கள் குடியேறியுள்ள பிரதேசங்களிலும்
ஏஜண்டுகள் இல்லாத இதர ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை.



மதராஸ் ஸிடி டிஸ்டிரிபியூடர்: சுந்தரம் ஸ்டோர்ஸ், மயிலாப்பூர்

அதிகப்படியான மைல்கள்

Firestone

De Luxe CHAMPION TYRES

பயர்ஸ்டோன்

டிலக்ஸ் சாம்பியன் டயர்களில்

இரண்டு அடுக்குகள் அதிகமான கம்-டிப்பிடு
கயிறு பிணைப்புகள் கொண்டவை.

அகலமான அழுத்தமான விடாமிக் ரப்ப
ருடன் விசேஷ முறையில் சேர்த்து செய்
யப்பட்ட வரம்புகளுடன் கூடியவை.



இன்று சிறந்தது - நாளை இன்னும் சிரேஷ்டமானது

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI நவம்பர் 28, 1948

4 அணா

'கலைக்கதிர்'

தமிழ் நாட்டின் தலைசிறந்த
அறிஞர்கள் யாவரும் எழுதும்
பத்திரிகை

'கலைக்கதிர்'

*

லாபம் கருதாமல்
நாம் ஒன்றே கருதுவது

'கலைக்கதிர்'

*

மாதந்தோறும் வெளிவந்து
மனத்தையும் அறிவையும்
விளக்குவது

'கலைக்கதிர்'

*

கார்த்திகை 21-ம் நாள்
கதிர் ஒளிரும்

*

விபரங்களுக்கு:
'கலைக்கதிர்'
பூளைமேடு, கோவை

டி.எஸ்.ஆர்.



டி. எஸ். ஆர். தைலங்களை ஆயிரக்கணக்கான மக்கள் விரும்பி உபயோகிப்பதற்குக் காரணம் அவைகளின் சிறந்த குணமே. ஆயுர்வேத சாஸ்திரீய முறைப்படி தயாரித்த சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம் மூளைக்குக் குளிர்ச்சியையும் சருமத்திற்குப் பளபளப்பையும் கொடுக்கின்றன

டி. எஸ். ஆர் & கோ.
கும்பகோணம்

மதராஸ் ஏஜண்டு:
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்

கோவை, நீலகிரி ஜில்லாக்கள்
& பாலக்காடுக்கு ஏஜண்டு:
B. பாலபட்டாசி
(Estd. 1933)
P. B. No. 182, கோயமுத்தூர்

கிளைகள் ஆபீஸ்கள் :
எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டு ரோடு, ராயப்பேட்டை,
மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், எழும்பூர் - ராயபுரம்

•

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும்
பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன

•

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 53,00,000
ரிசர்வ் நிதி ரூ. 62,00,000
எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்

என். கோபால அய்யர்,
செக்ரடரி



NPB

தி இந்தியன் பாங்க் லிமிடெட்.

இன்று ஆயிரக்கணக்கான ஜனங்கள் ....

தாங்கள் ஆரோக்கியத்துடன் இருக்க ப்ரூக் லாக்ஸின் உதவியை நாடுகின்றனர். ப்ரூக் லாக்ஸ் மலச்சிக்கல் ஏற்படும் குடலினூடே சென்று யாதொருவித தொந்தரவுமில்லாமல் மலச்சிக்கலை அறவே அகற்றி விடும். அது பார்வைக்கும் ருசிக்கும் ஓர் தித்திப்பான சாக்லெட்டைப்போலிருக்கும்.


ப்ரூக்லாக்ஸ்

சாக்லெட் லாக்ஸெடிவ்

பெரிய சைஸ் டின் ஒன்றுக்கு 1-12-0 சிறிய சைஸ் டின் ஒன்றுக்கு 0-12-0

சென்னை மாகாணத்துக்கு விற்பனை ஏஜண்டுகள் :
ஓரியண்டல் மர்க்கன்டைல் ஏஜன்ஸி, 99-A, அரமனைக்காரத் தெரு, மதராஸ்

REGD. No. M. 4392



'Muse'

'மியூஸ்'

தேவதைகளுக்குரிய வாசனைத்திரவியம்

ரோஜா முதலிய புஷ்பஜாதிகளின் நறுமணம், மற்றும் மட்டிப்பால், கஸ்தூரி முதலிய வாசனைத்திரவியங்கள், இவ்வாறாக உலகில் எத்தனையோ வாசனைத்திரவியங்கள். இருந்தாலும் இதோ உங்களுக்கு புராதன தேவதைகளிடமிருந்து வந்த சிறந்ததோர் வாசனைத்திரவியம். பாரிஸ் நகரின் முக்கியபகுதியில் உற்பத்தியான மியூஸ் எனும் வாசனைத்திரவியம். மகோன்னதச்சரக்கை ஆரம்பத்திலேயே உய்த்தறியும் ஆற்றல்வாய்ந்த மடமங்கையர்களுக்கேற்ற வாசனைத்திரவியம்.



Coty

கோட்டி தயாரிப்பு

ஸோல் டிஸ்டிரிபியூடர்ஸ்;

ஜியாப்ரே மானர்ஸ் அண்ட் கோ. லிட்.

பம்பாய் - கல்கத்தா - மதராஸ்

டில்லி - லாகூர்

P. 6 TM